

கிரிக்கெட்காரர் கீல்வாதத்தினால் அவுட்டாக்கப்பட்டார்



ஒரு முறை 'க்ருஷன்' சாப்பிட்டபின் மறுபடியும் தகுதி

சாம்லாவின் ஓட்டங்கள் கீல் வாதத்தினால் பாழடைந்தன. கூரிய வலி அவனுடைய கீல்களையும் தசைகளையும் பீடித்தன. மட்டையைப் பிடிப்பது கூட பெரும் வேதனையாக இருந்தது. பந்தயத்தினின்று ஓய்வு எடுத்துக் கொண்டபோது தனது கிரிக்கெட் விளையாட்டே ஓர் முடிவெல்லைக்கு வந்து விட்டது என நினைத்தான். அவன் நலிவன் லெ யோசனைகள் சொன்னான்: தினமும் காலை உண்டிக்கு முன் 'க்ருஷனை'ப் பரிக்ஷியுங்கள்.''

சாம்லால் அவ்வாறே செய்தான். மூன்று வாரங்களுக்குப் பின்னரே ஓர் வலுவுள்ள பந்தயத்தில் அறுபது ஓட்டங்கள் எடுத்துவிட முடிந்தது. அவனுடைய விளையாட்டு முன்னைவிட அதிக மேன்மையுடன் விளங்கிற்று — 'க்ருஷ'னுக்கு நன்றிகள். நீங்கள் கஷ்டப்படும் எவ்வித கீல் வாதமும் ஒரே ஒரு முக்கிய காரணத்தை கொண்டுள்ளது — மூத்திர நீர் கணுவிலும் தசையிலும் கோர்த்துக்கொண்டு விடுவதால். உங்கள் உடம்பினின்று மூத்திர நீரை வெளியேற்ற ஒரே ஒரு வழிதான் உளது — அதுதான் மூத்திரக் காய்களினின்று நீரை வெளியேறச் செய்வது. 'க்ருஷ'னுடைய ரகசியம் அது செய்யும் இரட்டை வேலையில் தான் உள்ளது. அது அங்கேயும் குடல்களிலும் ஒருங்கே வேலை செய்து நீர் தங்குமிடங்களினின்று அவற்றை வெளியேற்றுவதுடன் மறுபடி அவ்விதம் சேரவிடாமலும் செய்கிறது. இன்றே க்ருஷன் வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1/10 (மஞ்சள் பெட்டியில்.)

நீங்கள் கூட அந்த க்ருஷன் உணர்ச்சியை அடையலாம்





எங்களிடமும் கிடைக்கும்:

எம். எ. ஒய்நுநய சுவாமி & கோ., மார்க்கெட், உதகமண்டலம்

அதிகப்படியான மைல்கள்

Firestone

De Luxe CHAMPION TYRES

பயர்ஸ்டோன்

டிலக்ஸ் சாம்பியன் டயர்களிலுள்

இரண்டு அடுக்குகள் அதிகமான கம்-டிப்பிடு கயிறு பிணைப்புகள் கொண்டவை.

அகலமான அழுத்தமான விடாமிக் ரப்பருடன் விசேஷ முறையில் சேர்த்து செய்யப்பட்ட வரம்புகளுடன் கூடியவை.



இன்று சிறந்தது - நாளை இன்னும் சிரேஷ்டமானது





இசைவாணியின் அற்புதமான
புதிய
இசைத்தட்டு!
ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
பிடில்: மைசூர் சௌடய்யா
மிருதங்கம்: மதராஸ் கண்ணன்
N.28557
ப்ரோசே வாரு
(கமாஸ்)
2 பாகங்கள்
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

கல்கி
பொருளடக்கம்

மலர் 8 இதழ் 20 | டிசம்பர் 12 | சர்வதாரி ஐ கார்த்திகை 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.


பார்த்தவர்கள்
பாராட்டுகின்றனர்

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதி | இதழ் 20

என்ன செதி?

இது வழியல்ல!

எல்லாவிதமான பரீட்சைகளுக்கும் நாம் விரோதிகள். பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் பரீட்சைகளை அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்று கருதுகிறோம். பிள்ளைகள் ஆசைப்பட்டுப் படிக்கும்படியாகப் பாட திட்டங்களை அமைத்து விட்டால், பரீட்சைகளுக்கு அவசியமிராது என்று நம்புகிறோம். அப்படி மாணவர்களின் தரத்தை அறிவதற்காகப் பரீட்சை கட்டாயம் வேண்டும் என்று ஏற்பட்டால், மூன்று வருஷத்துக்கு ஒரு முறை பரீட்சை நடத்தினால் போதுமானது என்பது நம்முடைய உறுதியான கொள்கை.

ஆனால் பரீட்சைகளை ஒழிப்பது, கல்வி முறைச் சீர்திருத்தத்திலே ஓர் அம்சமாகச் சர்க்காரும் சர்வகலாசாலையாரும் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய காரியம். இதற்கு வேண்டிய கிளர்ச்சியைப் பொதுமக்கள் நடத்த வேண்டும்; மாணவர்களும் அந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளலாம்.

பரீட்சைகளை ஒழிப்பதற்குத் தனித் தனியே அந்தந்தப் பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் மாணவர்கள் கிளர்ச்சி செய்வது உசிதமல்ல; 'ஸ்ட்ரைக்' செய்வது பெரும் பிசகு; மறியல் செய்வதும் 'ஒழிக' கோஷம் போட்டுக் கொண்டு ஊர்வலம் நடத்துவதும் மிகத் தவறான காரியங்கள்.

சமீபத்தில் தென்னாட்டில் பல கலாசாலைகளில் இண்டர்மீடியட் 'ஸெலக்ஷன்' பரீட்சை கூடாது என்பதற்காக மாணவர்கள் வேலை நிறுத்த முறையைக் கையாண்டது பற்றி மிகவும் வருந்துகிறோம். 'வடி கட்டும்' பரீட்சை கூடாது என்பதே நம்முடைய கருத்து. ஆனால் இதைக் காட்டிலும் எவ்வளவோ முக்கியமானது, கலாசாலைகளில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நேய பாவம் நிலைபெற்றிருத்தல். வேலை நிறுத்த முறையைக் கையாளுதல் அந்த நேய பாவத்துக்கு உலை வைக்கிறது. ஆசிரியர்களும் மாணவர்களும் பரஸ்பர விரோதிகள் என்ற மனோபாவத்தை உண்டாக்கி விடுகிறது. இதைக் காட்டிலும் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தடை வேறு எதுவும் இருக்க முடியாது.

திருச்சி தேசீய கலாசாலையில் நடந்த மாணவர் வேலை நிறுத்தத்தின்போது ஊர்வலத்தில், "பிரின்ஸிபால் ராமய்யர் ஒழிக!" என்ற கோஷம் எழுந்ததாக அறிந்து மிக்க துயரம் அடைந்தோம். "ஆசிரியர் ராமய்யர் ஒழிக!" என்றால், "ஒழுக்கம் ஒழிக!" என்று அர்த்தம்; "நன்னெறியும் நேர்மையும் ஒழிக!" என்று அர்த்தம்; "மாணவர்களிடம் வைத்த மனமார்ந்த அன்பு ஒழிக!" என்று அர்த்தம்; "கல்வியும் கலையும் ஒழிக!" என்று அர்த்தம்.

சுதந்திர இந்தியாவைத் தெய்வத் திருநாடாகச் செய்ய வேண்டிய பொறுப்பு வாய்ந்த இளம் மாணவ மணிகளைக் கேட்டுக் கொள்கிறோம்—"உங்களுடைய குறைகளைத் தாராளமாக எடுத்துச் சொல்லுங்கள். குறைகள் நீங்கினால் மகிழ்ச்சியடையுங்கள்; நீங்காவிட்டால் பொறுமையுடன் இருங்கள். இந்தியாவின் சிறந்த அறிவாளிகள் எல்லாரும் கல்விச் சீர்திருத்தம், கலாசாலைப் புனரமைப்பு,—ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் உங்களுடைய குறைகள் எல்லாம் நீங்கிவிடும். அது வரையில், வேலை நிறுத்தம் முதலிய காரியங்களில் இறங்க வேண்டாம்!"

அட்டைப்பட விளக்கம்

நீராடப் போவோம்!

சூரியன் உதிக்கும்போது ஏதோ தமிழ் நாட்டுக்கென்றே உதிப்பதாகத் தோன்றுகிறது. "தமிழ்நாட்டு நாகரிகம் பண்பாடெல்லாம் எப்படி இருக்கின்றன, பார்!" என்று சொல்லுவதாகத் தோன்றும். பொன் நிறக் கதிர்கள் குன்றுகளின்மேல் விழும்; பாறைகளின்மேல் விழும்; கோவில்களின்மேல் விழும்; கோபுரத்தின்மேல் விழும்; குளங்களில் பூத்து நிற்கும் அல்லி மலர்மேல் விழும்; ஆம்பலின்மேல் விழும்.

இவற்றை யெல்லாம் எடுத்துக் காட்டுவதில் உள்ள உற்சாகத்திலும் அதிகமான உற்சாகம் சூரியபகவானுக்கு எதில் என்றால், குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு குளிக்க வருவார்களே சின்னஞ் சிறு பெண்கள் அவர்களை எடுத்துக் காட்டுவதில்தான்!

இந்தவிதமான அழகிய காட்சிகளைத் தமிழ் நாட்டில் ஆங்காங்கு பல ஊர்களிலும் பார்க்கலாம்.

பார்க்கும்போது சித்திரத்தில் தீட்டுவோமே என்று தோன்றும். கவிஞராய் இருந்தால் கவி பாடவே தோன்றும். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாளுக்கு அப்படிப் பாடத் தோன்றியது:

ஒரு நாடகம்:

மாதம் மார்கழி மாதம். ஊரிலுள்ள பெண்கள் எல்லாரும் அதிகாலையில் எழுந்து குளத்துக்குப் போகிறார்கள். போகிற வழியில் வீடு வீடாக நின்று அந்தந்த வீட்டுப் பெண்களையும் கூட்டிக்கொண்டு நடக்கிறார்கள்.

"மார்கழித் திங்கள்
மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்!
போதுமினோ நேரிழையீர்!"

ஒவ்வொரு வீட்டுப் பெண்ணுக்கும் ஆத்திரம்,—அதிகாலையில் எழுந்து கூட்டமாய்ச் சென்று குளிக்கவேண்டும், கோவிலுக்குப் போகவேண்டும், கிருஷ்ண பகவானை வாயாரப் பாடிப் பூஜித்துப் பரவசம் அடையவேண்டும் என்பதாக.

இந்த விதமாகக் குழாத்தோடு குளிக்கச் சென்று ஒவ்வொரு நாளும் பூஜித்துப் பரவசப்பட்டு வந்தாள் ஒருத்தி. ஒரு நாள் பெண்கள் கூட்டம் அவளுடைய வீட்டு வாசலுக்கு வந்துவிட்டது. ஆனால் அந்தப் பெண்ணுக்கோ இன்னும் கொஞ்சம் தூங்க வேண்டும் என்ற ஆசை. படுக்கையைவிட்டு எழுந்திருக்க மனம் இல்லை.

குழாத்துப் பெண்கள் திண்ணைமேல் ஏறி விட்டார்கள். கதவைத் தட்டுகிறார்கள்.

"அடடா! என்ன நோன்பு நோற்கிறாய்? பெரிய நோன்பு இருந்து சுவர்க்கத்துக்கு அப்படியே போகிற என் பெண்ணரசியே!" என்று ஏளனமாகப் பேசுகிறார்கள்.

"நோற்றுச் சுவர்க்கம்
புகுகின்ற அம்மனாய்!

என்று ஏளனம் செய்து என்ன பயன்? படுக்கையோடு படுக்கையாய் ஒட்டிக் கிடக்கிற புண்ணியவதியிடமிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை!

தலைமைப் பெண் மற்றவர்களைப் பார்த்துச் சொல்கிறாள்: "கதவைத்தான் வந்து திறக்க மாட்டேன் என்கிறாள். 'இதோ வருகிறேன்' என்று சொல்ல வார்த்தையும் பஞ்சமாகவா போய்விட்டது!"

மாற்றமும் தாராரோ
வாசல் திறவாதார்?"

என்று சொல்லிவிட்டு மறுபடியும் பேசுகிறாள்:

"நோற்றுச் சுவர்க்கம்
புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ
வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி
நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும்
புண்ணியனால்! — பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த
கும்ப கருணனும்,
தோற்றும்(உ) உனக்கே
பெருந்துயில்தான் தந்தானோ!
ஆற்ற அனந்தல்
உடையாய், அருங்கலமே!
தேற்றமாய் வந்து
திற! ஏலோர் எம்பாவாய்!"

[நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்: மணமான துளசி மாலையைத் தரித்த நாராயணன் நமக்கே சொந்தமான திருமால்; போற்றப் பறைதரும் புண்ணியன்: துதித்தால் போதும், உடனே நம்முடன் பேசி அருள் செய்யும் கருணாமூர்த்தி! பண்டொருநாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த: ராமாயண காலத்தில் எமனுக்கு இரையாய் இறந்தொழிந்த; கும்பகருணனும் தோற்றும்: மறுபடியும் பிறந்தவனும் இப்போது தூக்கப் போட்டியில் உனக்குத் தோற்று; உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ: தனக்கே உரிய சொத்தாக வைத்திருந்த தூக்கத்தை உன்னிடமே சமர்ப்பித்துவிட்டுப் போய்விட்டானோ; ஆற்ற அனந்தல் உடையாய்: ஏராளமாகத் தூக்கமாகிய செல்வத்தை உடையவளே; அருங்கலமே: என் ஆபரணம் போன்ற அருமைத் தோழியே; தேற்றமாய் வந்து திற: முகத்தைக் கண்ணை எல்லாம் நன்றாகத் துடைத்துக்கொண்டு வந்து கதவைத் திற; ஏலோர் எம்பாவாய்: அடியே, என் அருமைப் பெண்ணே; ஏலோ எம்பாவாய் என்பது சாரியை பெற்று 'ஏலோர் எம்பாவாய்' என்று ஆகிவிட்டது.]

தூங்குகிற தோழியோடுள்ள அருமையும் அன்பும் சுவையான ஏளனங்களோடு துள்ளிக் குதித்து விளையாடுகிற பாவம் வெகு அழகாய் வெளியாகிறது.

மார்கழி மாதம் முப்பது நாளும் பாடியும் கேட்டும் அனுபவிக்க வேண்டிய பாடல்.

நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி



பசுத்தோல் போர்த்திய புலி!

சிற்பக் கலையின் அழகுக்குச் சிகரமாக விளங்கும் அற்புதமான கட்டிடத்தை நிர்மாணித்த நிபுணர்கள் கோட்டை வாயிலில் காத்துக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய இணையற்ற திறமைக்கு எத்தகைய மகத்தான பரிசுகள் கிடைக்கலாம் என்பது பற்றி அவர்களின் மனம் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

தமது மாளிகையின் உள்ளேயிருந்து வெளியில் வந்த பாதுஷா சிறிது தூரத்தில் ஜகஜ்ஜோதியுடன் விளங்கும் தாஜ் மஹாலைப் பார்த்தார்.

அவரது மெய் சிலிர்த்தது. அவரது மனதில் பிரமிப்பு, ஆனந்தம், சோகம் முதலிய உணர்ச்சிகள் ஒருங்கே ஊற்றுப் பெருக்கு எடுத்தன.

தமது கண்களை மற்றொரு புறத்தில் செலுத்தினார்.

தாஜ்மஹாலைச் சிருஷ்டித்த விசுவ கர்மாக்கள் அங்கே நின்று கொண்டிருந்தனர்.

பாதுஷாவின் மனதில் எழுந்த மேற்படி உணர்ச்சிகள் அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் மறைந்தன; வெறுப்பும் பொறாமையும் வந்து குடிகொண்டன.

தாஜ்மஹாலைப் போல், — தாஜ்மஹாலைக் காட்டிலும் சிலாக்கியமான சிற்ப மாளிகையை அவர்கள் வேறு எங்கேயாவது சிருஷ்டித்து விட்டால் என்ன செய்வது?

இவ்விதம் பாதுஷாவின் மனம் பொறாமையினால் வெதும்பியது.

பரிசுகளும் பட்டயங்களும் பொற்குவியல்களும் கிடைக்கும் என்ற ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருந்த சிற்ப நிபுணர்களின் எந்தக் கைகள் தாஜ்மஹாலின் அற்புத சிருஷ்டிக்குக் காரணமாக இருந்தனவோ, அந்தக் கைகளை வெட்டி விடுமாறு பாதுஷா உத்தரவிட்டார்!

தங்களுடைய உழைப்பையும் திறமையையும் அர்ப்பணம் செய்து உலகிலே ஈடில்லாத அற்புத சிருஷ்டிக்குக் காரண புருஷர்களான அந்தச் சிற்பிகளின் வாழ்க்கை அவ்வாறு துர்க வேதனையாக முடிந்தது.

பர்மா, இலங்கை முதலிய இடங்களில் காடுகள் அழிக்கப்பட்டன. வறண்டு கிடந்த பிரதேசங்கள் நீர்வளமும் நிலவளமும் பெற்றுப் பொன் கொழிக்கும் பூமியாக மாறின.

தங்களுடைய உழைப்பினாலும் திறமையினாலும் அந்தத் தேசங்களில் அற்புதமான பொருளாதார மாளிகையைச் சிருஷ்டித்த தொழில் நிபுணர்களான இந்தியர்களின் நிலைமையும் அந்தச் சிற்ப நிபுணர்களின் நிலைமையைப் போல் ஆகியிருக்கிறது!

இலங்கையின் பொருளாதார சுபிட்சத்துக்கு உயிர்நாடியான காப்பி, தேயிலைத் தோட்டங்களைப் பண்படுத்திய இந்தியத் தொழிலாளர்களை இலங்கை சர்க்கார் அந்தத் தேசத்திலிருந்தே விரட்டப் பார்க்கிறார்கள்.

பர்மாவின் பொருளாதார சுபிட்சத்துக்கு உயிர்நாடியான நெல் விவசாயத்துக்குக் காரண புருஷர்களான இந்தியர்களின் சொத்துக்களையே பர்மா சர்க்கார் பறிமுதல் செய்யப் பார்க்கிறார்கள்.

பர்மாவும் இலங்கையும் சுதந்திரம் பெற்றதற்கு முக்கிய காரணம் இந்தியா தான் என்று பாரபட்சமற்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள்கூட ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

தாங்கள் சுதந்திரம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்த இந்தியாவுக்கு பர்மா, இலங்கை சர்க்கார்கள் நன்றி காட்டும் தோரணை இந்த லட்சணத்தில் இருக்கிறது!

•   •   •

பர்மா சுதந்திரம் பெற்றதும் பெருந்துயமாகத் தனது அருமைத் தலைவர்களை இழந்தது.

இப்போது பர்மாவை மற்றொரு பேராபத்து எதிர்நோக்கி நிற்கிறது.

பர்மாவில் சர்க்காரைக் காட்டிலும் பொது உடைமை வாதிகள் அதிக பலம் பெற்றுச் சில பிரதேசங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள். பர்மாவின் சுதந்திரத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று பர்மா பிரதம மந்திரி பகிரங்கமாகப் பிரலாபிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பர்மா, தான் பெற்ற சுதந்திரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளுமுன் இந்தியர்களின் தலையில் கை வைக்க முற்பட்டது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

உள்நாட்டு விஷயங்களில் தங்கள் இஷ்டப்படி சட்டம் செய்ய பர்மா சர்க்காருக்குள்ள அதிகாரத்தை பர்மா இந்தியர்களோ, இந்திய சர்க்காரோ ஆட்சேபிக்கவில்லை.

ஜனங்களின் சொத்துக்களை ஆர்ஜிதம் செய்துகொள்ளவும் பர்மா சர்க்காருக்கு உரிமை உண்டு என்பதை எவரும் மறுக்கவில்லை.

ஆனால், நியாயமான ஈடுத் தொகை கொடுத்துவிட்டு நிலங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள வேண்டும் என்பதே பர்மா இந்தியர்களின் கோரிக்கை.

பர்மா சர்க்கார் செய்ய முற்பட்டிருக்கும் காரியமோவெனில், இந்தியர்களுக்கு அவர்களுடைய சொத்துக்களில் சிறிதும் உரிமையில்லை என்று வாயால் சொல்லுவதற்குப் பதிலாகக் கையால் சொல்லுவதாக இருக்கிறது!

அதாவது, இந்தியர்களிடமிருந்து பர்மா சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கொள்ளும் நிலங்களுக்குக் கொடுக்க உத்தேசித்துள்ள ஈடுத் தொகை மிக மிகக் குறைவானது; வெட்கக் கேடானது. அவ்வளவு அற்பமான ஈடுத் தொகை கொடுப்பதற்கும், அவர்களுடைய சொத்துக்களை எதேச்சாதிகாரமாகப் பறிமுதல் செய்துகொள்வதற்கும் அதிக வேற்றுமை இல்லை.

இந்தியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் பர்மா சர்க்கார் சட்டத்தின் பெயரால், பசுத்தோல் போர்த்த புலியாக ஜனநாயகத்தின் போர்வையில் எதேச்சாதிகார பாணத்தைப் பிரயோகிக்க முற்பட்டிருக்கிறார்கள்.

எனினும் இவ் விஷயமாகச் சென்ற வாரம் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கும் பர்மா மந்திரி யூ வின்னுக்கும் புது டில்லியில் நடந்துள்ள பேச்சு வார்த்தைகளின் பயனாக, பர்மா இந்தியர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து ஓரளவு நீங்கும் என்று நம்புகிறோம்.

அதன் சம்பந்தமாக இந்தியப் பிரதிநிதிகள் பர்மாவுக்கு விஜயம் செய்வதை பர்மா மந்திரி வரவேற்றிருப்பதும் திருப்தியளிக்கக் கூடியதாகும்.

* * *

நிற்க, பர்மா சர்க்கார் சட்டப்படி சொத்துக்களை இழக்கும் இந்தியர்களின் கஷ்டம் அத்துடன் நின்று விடவில்லை.

இந்தியாவிலும் அவர்களுக்குக் கஷ்டம் காத்துக் கொண்டிருக்கிறது. ஏன், கஷ்டத்துக்கு அவர்கள் உள்ளாகிவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

பர்மா சர்க்கார் நிறைவேற்றியுள்ள சட்டத்தை அமுல் நடத்துவதில் அவர்கள் தாமதித்தாலும் தாமதிக்கலாம். ஆனால் இங்குள்ளவர்கள் தங்களுடைய சகோதரர்கள் விஷயத்தில் சிறிதும் தாமதமின்றிப் பாணப்-பிரயோகம் செய்யத் தயங்கவில்லை!

அதாவது, பர்மாவில் நிலபுலன்கள் உள்ள இந்தியர்களில் பெரும்பாலோரும் தென்னிந்தியர்களே ஆவர். அவர்களில் பலர் இந்தியாவிலுள்ளவர்களிடம் கடன் வாங்கி அந்தத் தொகையைக் கொண்டு பர்மாவில் நிலம் வாங்கியிருக்கிறார்கள்.

இப்போது மேற்படி நிலங்களை பர்மா சர்க்கார் எடுத்துக் கொள்ள முற்பட்டிருப்பதால், "நீங்களும் பர்மா சர்க்காரும் எக்கேடு கெட்டாவது போங்கள். எங்களுடைய பணத்தை மாத்திரம் உடனே கீழே வைத்து விடுங்கள்!" என்று கடன் கொடுத்தவர்கள் கிட்டி கட்டுகிறார்களாம்.

பலர் கோர்ட்டில் வழக்குகள் தொடர்ந்து, பர்மாவில் இடிபட்டுக் கொண்டிருக்கும் தங்களுடைய சகோதரர்களுக்கு இங்கேயும் இடி கொடுப்பதுபோல், இந்தியாவில் அவர்களுக்கு மீதியுள்ள வீட்டையும் சாமான்களையும் கூட ஜப்தி செய்யும் அளவுக்குப் போய் விட்டார்கள் என்று தெரிகிறது!

எனவே, பர்மாவில் ஏற்பட்டுள்ள கஷ்டத்திலிருந்து தங்களை விடுவிக்கு முன், இந்தியாவில் ஏற்பட்டுள்ள மேற்படி தொல்லையிலிருந்து தங்களை மீட்க வேண்டும் என்றும், பர்மா இந்தியர் பிரச்னை திருப்திகரமாகத் தீரும் வரையில் தாங்கள் கடன் கொடுக்க வேண்டிய கெடுவை ஒத்திவைக்க வேண்டும் என்றும் சிலர் கவர்னர் ஜெனரல் ராஜாஜிக்கும், பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜிக்கும் விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்விஷயமாக ஆவன செய்வது இந்திய சர்க்காரின் கையில் இருக்கிறது. எனவே, இந்தியாவில் கடன் பட்டுள்ள பர்மா இந்தியர்களுக்கு மேற்படி தொல்லையிலிருந்து தற்காலிகமாகப் பரிகாரம் கிடைக்கத் தாமதம் ஏற்படாதென எதிர்பார்க்கலாம்.

ஜே, ஆந்திரமாதா!

❀ கர்நாடகம் ❀

சென்ற வாரத்தில் தில்லைப் பதியை அடுத்துள்ள அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

தற்காலத்தில் ஆந்திர மாதா அளித்த கலா ரஸிகர்களில் தலைசிறந்தவரான பிரதம நீதிபதி ராஜமன்னார் பட்டமளிப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். அந்தச் சொற்பொழிவில் பல அரிய பொருள்களை எடுத்துக் கூறினார். அவற்றில் முக்கியமானது: "இந்தியா தேசம் ஒன்று; இந்தியாவின் பழைய பண்பாடு ஒன்று; இந்தியாவின் கலைஞானம் ஒன்று; இந்தியாவின் சங்கீதம் ஒன்று;—பிரிப்பதற்கு முயல வேண்டாம். பிரிக்கும் முயற்சிகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம்!" என்பதுதான்.

மேற்கண்டவாறு கனம் ராஜமன்னார் அண்ணாமலை நகரில் உபதேசித்துக்கொண்டிருந்த அதே சமயத்தில், ஆந்திர நாட்டின் நடுநாயகமாக விளங்கும் விஜயவாடாவில், "ஜே, ஆந்திர மாதா!" என்ற கோஷம் கிளம்பி வானளாவ உயர்ந்து நுண்ணிய ஆகாச அலைகளின் மூலமாக நாடெங்கும் பரந்து பரவியது. சென்னை மாகாணத்தில் ரேடியோப் பெட்டி உள்ள இடங்களிலெல்லாம் அந்த கோஷம் கேட்டிருக்கும். அதைக் கேட்ட ஆந்திர சகோதரர்கள் பூரித்துப் போயிருப்பார்கள். தமிழர்கள், "அப்பாடா! ஆந்திரர்களின் ஒரு குறை தீர்ந்தது!" என்றும், "சென்னை ரேடியோவுக்கு இனி விமோசனம் பிறக்கலாம்" என்றும் சந்தோஷப்பட்டிருப்பார்கள்.

சில காலத்துக்கு முன்பு வரையில் 'பெஜவாடா' என்னும் அர்த்தமற்ற பெயரால் வழங்கி, இப்போது 'விஜயவாடா' என்னும் கம்பீரமான பெயர் தாங்கியுள்ள ஆந்திர தேசத்தின் நடுநாயகமான நகரில் கிழமை டிசம்பர் 1ல் புதிய வானொலி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

கவர்னர் பவநகர் மகாராஜாவும் பிரதம மந்திரி ஓமந்தூர் ரெட்டியாரும் காங்கிரஸ் அக்கிராசனர் டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யாவும் பதிவு செய்த பிரசங்கங்கள் புதிய நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டன. மந்திரி காலா வெங்கட் ராவ் நேரிலேயே ரேடியோவில் பேசினார். பாருபள்ளி ஸ்ரீ ராமகிருஷ்ண பந்துலுவும் ஸ்ரீ துவாரம் வெங்கடசாமி நாயுடுவும் ஸ்ரீ சித்தூர் நாகய்யாவும் ஸ்ரீமதி சூரியகுமாரியும் இன்னிசை ஒலி பரப்பினார்கள். ஆந்திர தேசத்துக்குத் தனிச் சிறப்பான நாட்டுப் பாடல்களும், நாட்டுப் பாடல் மெட்டுக்களும் கோஷ்டிகானமாக ஒலி பரப்பப்பட்டன.

"சாலிவாகன சகாப்தம்" என்று இந்தியா தேசமெங்கும் வழங்கும் சாலிவாகன சக்கரவர்த்தி ஆந்திர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த நாளிலிருந்து சமீப காலம் வரையில் ஆந்திர சாம்ராஜ்யத்தின் உன்னதத்தை நாடக நிகழ்ச்சியாக ஒலி பரப்பினார்கள். அப்புறம் ஆந்திர மகாகவிகள் பலர் சம்மேளனமாகக் கூடிப் பத்தியத்திலும் கத்தியத்திலும் ஆந்திரர் பெருமையைப் பாடிப் பெருமிதம் அடைந்தார்கள். நிகழ்ச்சிகளுக்கு மத்தியில், "ஜே, ஆந்திர மாதா!" என்ற கோஷம் அடிக்கடி எழுந்தது.

புதிய ரேடியோ நிலையத்துக்கு வெளியிலே வீதியிலும் வீட்டு மச்சுகளிலும் மின்சாரக் கம்பங்களிலும் மரக் கொம்புகளிலும் பதினாயிரம் ஆந்திர சகோதரர்கள் "ஜே, ஆந்திர மாதா!" "ஜே, தெலுங்கு பாஷா!" "மனதே விஜயவாடா!" "மனதே ரேடியோ! அடாடா!" என்று கோஷித்து மகிழ்ந்தார்கள்.

* * *

பிரதம நீதிபதி ராஜமன்னார் அண்ணாமலை சர்வ கலாசாலையில் நிகழ்த்திய பிரசங்கத்துக்கும் விஜயவாடாவில் நமது ஆந்திர சகோதரர்கள் காட்டிய குதூகலத்துக்கும் முரண்பாடு ஒன்றும் இல்லை.

இந்தியாவின் பண்பாட்டுக்கும் கலாச்சாரத்துக்கும் கலைகள் எல்லாவற்றுக்கும் அடிப்படை ஒன்றுதான்.

அடிப்படையில் ஒன்றாக இருந்தபோதிலும் மேல் வளர்ச்சியில் பாஷைக்குப் பாஷை, மாகாணத்துக்கு மாகாணம், பிரதேசத்துக்குப் பிரதேசம் ஓரளவு வித்தியாசம் இருக்கிறது.

ஆகையால் ஒவ்வொரு பாஷையும், ஒவ்வொரு மாகாணமும் தனித்தனியாக வளர்ச்சியடையப் பார்ப்பதில் தவறு ஒன்றுமில்லை. அவ்வாறு வளர்ச்சி யடைவதற்கு அவசியம் முயற்சி செய்யவேண்டும்.

காவேரி, கோதாவரி, கங்கை ஆகிய மூன்று நதிகளும் இந்தியா தேசத்தை வளப் படுத்தும் ஜீவ நதிகள்; புண்ணிய நதிகள்.

ஆனாலும் காவேரிக்குப் பாலம் கட்டினால் கோதாவரிக்குக் கட்டியது ஆகாது. கோதாவரியில் கட்டும் அணைக்கட்டு கங்கையின் நீரைத் தேக்க முடியாது.

இந்த ஜீவ நதிகளின் தண்ணீரைப் பயன் படுத்தத் தனித்தனியே பிரயத்தனம் செய்ய வேண்டியதுதான். ஆனால் காவேரிக்கும் கோதாவரிக்கும் போட்டி ஒன்றுமில்லை. கோதாவரி ஆறு, கங்கை நதியைத் துவே ஷிக்க வேண்டியது மில்லை.

இம்மாதிரியே இந்தியாவின் மொழிகளை யும் கலைகளையும் தனித் தனியாக வளர்க் கும் முயற்சி தேவை. ஆனால் போட்டியும் துவேஷமும் வேண்டியதில்லை.

கையிலே ஐந்து விரல்கள் இருக்கின்றன. ஐந்து விரல்களுக்கும் அடிப்படை ஒன்று தான். எனினும் விரல்கள் தனித் தனி யாகவும் நெட்டையாகவும் குட்டையாகவும் இருக்கின்றன. ஒவ்வொரு விரலுக்கும் தனித் தனியாக இரத்த ஓட்டம் வேண்டும். ஆனால் விரல்களுக்குள் போட்டியும் துவேஷமும் அனாவசியமல்லவா? அனா வசியம் மட்டுமல்ல; தீமையுங்கூட.

வங்காளிகள் வங்காளி பாஷையையும் தெலுங்கர்கள் தெலுங்கு பாஷையையும் தமிழர்கள் தமிழ் மொழியையும் வளர்க்கப் பாடு படுவது நியாயம். தத்தம் மொழியைக் குறித்துப் பெருமைப்படுவதிலும் தவறில்லை.

வங்காளி பாஷையின் முன்னேற்றம் தமி ழர்களுக்குத் தூண்டுதலா யிருக்கவேண்டும்; கோபத்தை உண்டாக்க வேண்டியதில்லை.

கலைத் துறையில் ஹிந்துஸ்தானி சங்கீத மும் கர்நாடக சங்கீதமும் அடிப்படையில் ஒன்றா யிருந்தபோதிலும் வளர்ச்சியில் பெரிதும் மாறுபட்டிருக்கின்றன.

இரண்டு வகை சங்கீதத்தையும் தனித் தனியாக வளர்ப்பதுதான் முறை.

பரத நாட்டியம், கதகளி, மணிபுரி— எல்லாம் இந்திய நாட்டியங்கள். ஆனால் இந்த மூன்றையும் ஒன்றாகச் சேர்க்க முயன்றால், அதன் பயனாக ஏற்படுவது கலை யல்ல; கலைக்கு முற்றும் மாறான ஆபாசக் கேலிக்கூத்தாக முடிகிறது.

இதை நம் கண் முன்னால் பிரத்யக்ஷ மாகப் பார்த்துக்கொண்டு வருகிறோம்.

ஆகவே, விஜயவாடாவில் தனியாகத் தெலுங்கு ரேடியோ நிலையம் ஏற்பட்டது குறித்து ஆந்திர சகோதரர்கள் மகிழ்ச்சி யடைவது மிகவும் நியாயமானது.

அது போலவே தமிழ் மக்கள் தமிழ் மொழியையும் தமிழ் இசையையும் வளர்க்கப் பாடு படுவது மிக மிக நியாயமானது.

மற்ற பாஷைக்காரர்கள் தங்கள் பாஷை யின் பெருமையைப் பிரசாரம் செய்வதைக் காட்டிலும் தமிழர்கள் பிரசாரம் செய்வ தற்குக் காரணம் அதிகமாக இருக்கிறது.

வங்காளத்தில் வங்காளி பாஷையைப் பற்றி யாரும் குறை சொல்லத் துணிய மாட்டார்கள்; அவ்விதம் குறை கூறுகிற வன் பாடு அதோகதியாகும்.

தெலுங்கு மொழியின் பெருமையைப் பற்றி எந்தத் தெலுங்கருக்கும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. "சங்கீதத் துக்கு மிகவும் இசைந்த செறிவு விளைவு குழைவு இனிமை உள்ள பாஷை தெலுங்கு" என்று நம் பிரதம மந்திரி ரெட்டியார்கூடச் சொல்லியிருக்கிறார். தெலுங்கர்கள் யாருமே இதை மறுத்துச் சொல்ல மாட்டார்கள். வேறு பாஷைக் காரர் யாராவது மறுத்துச் சொன்னால்,— சொல்லிப் பாருங்கள், தெரியும்!

ஆனால் தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டவச மாக, இங்கே தமிழர்களே தமிழைப் பற்றிக் கேவலமாகப் பேசுவதும் பிறர் கேவலமாகப் பேசுவதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருப்பதும் சில காலமாக வழக்கத் துக்கு வந்திருக்கிறது. இந்தக் கேடான வழக்கத்தைப் போக்குவதற்காகத் தமிழ் நாட்டில் தமிழைப் பற்றிப் பிரசாரம் செய்தல் அவசியமாகி விட்டது. இந்த அவசியம் ஏற்பட்டிருந்தபடியாலேதான்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்று பாரதியார் வற்புறுத்தி அழுத்தந் திருத்தமாகச் சொல்ல வேண்டி நேர்ந்தது.

துவேஷத்தை அடிப்படையாகக் கொண்ட பிரிவினைக் கிளர்ச்சிகள் எந்தத் துறையில் தலைகாட்டினாலும் அவற்றை நாம் வெறுத்து ஒதுக்க வேண்டும்.

மாகாண மொழிகளையும் கலைகளையும் தனித்தனியே வளர்ப்பதற்குச் செய்யும் முயற்சிகளை நாம் ஆதரிக்க வேண்டும்.

ரேடியோ மகாதேவர்!

பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் சில சமயம் ஆச்சரியக் கடலில் மூழ்க அடித்து விடுகின்றன.

இவ்வளவு சிறந்த கல்வி அறிவும் பாத்ர மனப்பான்மையும் ஆழ்ந்த பண்பாடும் ஆராய்ச்சித் திறமையும் உடையவர் கனம் ரெட்டியார் என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குக் கூடத் தெரிந்திருக்க முடியாது.

தீபம் குடத்துக்குள்ளே இருக்கும்வரையில் அதன் ஒளி மங்கியிருக்கிறது; வெளியில் எடுத்து உயரமான பீடத்தில் வைத்ததும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.—இதற்குத் தக்க உதாரணம் கனம் ஓமந்தூர் ரெட்டியார் என்று சொல்லலாம்.

சில நாளைக்கு முன்பு கம்பர் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பிரதம மந்திரி செய்த பிரசங்கம் அவருடைய புலமையின் பெருமையைத் தூக்கி எடுத்துக் காட்டியது.

விஜயவாடா ரேடியோ நிலையத் திறப்பு விழாவில் ஒலிபரப்பிய கனம் ரெட்டியாரின் பிரசங்கம் அவருடைய ஆராய்ச்சித் திறனை மேலும் உயர்த்திக் காட்டுகிறது.

தற்கால விஞ்ஞான சாஸ்திரத்தை மகாதேவருக்கு உவமைப் படுத்திச் சொல்லியது மிக அருமையான விஷயம்.

தேவருக்கெல்லாம் தேவரான மகாதேவர் தம்மை நோக்கித் தவம் செய்கிறவர்கள் யாராயினும் அவர்கள் கேட்கும் வரத்தைக் கொடுத்துவிடுகிறார் என்று புராணங்கள் சொல்லுகின்றன.

தியாக சீலர்களான தவமுனிவர்களுக்கும் மகாதேவர் வரம் கொடுக்கிறார். இராவணனைப் போன்ற கொடிய ராட்சதர்களுக்கும் வரம் கொடுக்கிறார்.

அதுபோலவே விஞ்ஞான சாஸ்திரம் மக்களின் நன்மைக்கான பல காரியங்களுக்குப் பயன்படுகிறது. மனித குலத்தின் அழிவுக்கும் அதுவே காரணமாகிறது.

ரயிலையும், ஆகாச விமானத்தையும், மின்சார தீபத்தையும், ரேடியோவையும் மனித குலத்துக்கு அளித்த விஞ்ஞானம் விஷப் புகையையும் வெடிகுண்டையும் அணுகுண்டையும் தந்திருக்கிறது.

விஞ்ஞானத்தை மகாதேவருக்கு ஒப்பிட்டதுபோல, விஞ்ஞானத்தினால் ஏற்பட்டிருக்கும் ஒவ்வொரு நவீன சாதனத்தையும் மகாதேவருக்கு ஒப்பிடலாம்.

ஒவ்வொரு விஞ்ஞான சாதனத்தினாலும் நன்மையா, தீமையா என்பது அதை உபயோகப்படுத்தும் முறையைப் பொறுத்திருக்கிறது. அதாவது, நாம் அதனிடம் கேட்கும் வரத்தைப் பொறுத்திருக்கிறது.

* * *

தென்னாட்டில் கர்நாடக சங்கீதம் வளர்ச்சி பெற்று வந்திருக்கும் வரலாற்றை ஆராய்ந்தவர்கள் ஒரு விஷயத்தைக் கவனித்து வந்திருப்பார்கள்.

ஒவ்வொரு பத்து வருஷத்திலும் சில முதல்தர சங்கீத வித்வான்கள் கர்நாடக சங்கீத உலகில் தோன்றி வந்திருக்கிறார்கள்.

1910 முதல் 1920 வரை உள்ள பத்து வருஷத்தில் ராமநாதபுரம் சீனிவாச ஐயங்கார், மதுரை புஷ்பவனம் ஐயர், கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயர் ஆகியவர்கள் கர்நாடக சங்கீத வானத்தில் ஜோதிமயமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தார்கள்.

1920 முதல் 1930 வரையில் உள்ள பத்து வருஷத்தில் செம்பை வைத்தியநாத பாகவதர், காஞ்சிபுரம் நாயனாப் பிள்ளை, மகாராஜபுரம் விசுவநாதய்யர், அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் ஆகியவர்கள் முன்னணிக்கு வந்து புகழ் பெற்றார்கள்.

1930 முதல் 1940 வரையில் உள்ள பத்து வருஷத்தில் முசிரி சுப்பிரமணிய ஐயர், செம்மங்குடி சீனிவாசய்யர், ஜி. என். பாலசுப்பிரமணியம், மதுரை மணி ஐயர் ஆகியவர்கள் பிரபலமடைந்தார்கள்.

1940-க்குப் பிறகு இப்போது வருஷம் எட்டு ஆகிவிட்டது. மேற்கூறிய வித்வான்களோடு ஒப்பிடக் கூடியவர்கள் யாராவது இந்த எட்டு வருஷத்தில் முன்னணிக்கு வந்திருக்கிறார்களா என்று கேட்டால், "இல்லை" என்று கையை அகலமாக விரிக்கவேண்டியிருக்கிறது.

இந்த நிலைமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் ஒரு முக்கிய காரணம் ரேடியோ என்பதில் சந்தேகமில்லை.

தென்னாட்டில் இரண்டு ரேடியோ நிலையங்கள் ஏற்பட்டதன் காரணமாக,

கர்நாடக சங்கீதம் மிக விஸ்தாரமாகப் பரவியிருக்கிறது. ஆனால் அதன் ஆழம் வெகுவாகக் குறைந்து போய்விட்டது. தென்னாட்டிலுள்ள பல பெரிய ஏரிகள் மண் மேடிட்டுக் குட்டைகளாகி விட்டதைப் போலச் சங்கீதமும் ஆகிவிட்டது.

முற்காலத்தில் ஒருவர் சங்கீதக் கலையில் புகழ்பெற வேண்டுமானால், அதற்காகப் பல வருஷ காலம் சிரத்தையுடன் பாடுபட வேண்டியிருந்தது. வித்வான்களும் ரஸிகர்களும் அடங்கிய சபையினிலே பாடி, "சபாஷ்!" வாங்கிய பிறகுதான் சங்கீத உலகத்தில் ஸ்தானம் கிடைத்தது.

இப்போது அந்தக் கஷ்டம் ஒன்றுமில்லை. ஏதோ பத்து உருப்படி பாடத் தெரிந்ததும், 'ரேடியோ'வில் சான்ஸ் கிடைத்துவிடுகிறது. ரேடியோவில் கச்சேரி செய்ததும், சங்கீத உலகில் உயர்ந்த ஸ்தானம் பெற்றுவிட்டதாக எண்ணம் உண்டாகிவிடுகிறது. அப்புறம் முன்னேற்றத்துக்குத் தூண்டுதல் எதுவும் இல்லை. பல இளம் வித்வான்களின் சங்கீதம் பத்து வருஷத்துக்கு முன்பு இருந்தது போலவே இன்றைக்கும் இருந்து வருகிறது.

ஆகவே, தென்னாட்டின் அரும்பெரும் செல்வமாகிய கர்நாடக சங்கீதக் கலைக்கு ரேடியோக் கருவியானது ஒரு பெரிய அபாயமாக முடிந்திருக்கிறது.

* * *

சர்தார் படேல் விஜயவாடா ரேடியோ நிலையத் திறப்பு விழாவுக்கு அனுப்பியிருந்த செய்தியில் "ரேடியோ நிலையத்தின் நிகழ்ச்சிகளைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதோ, நம்முடைய அபிப்பிராயத்தை நாம் தெரிவிக்கிறோம். இது சர்தார் படேல் அவர்களின் காதில் விழாவிட்டாலும், சர்தார் படேலுக்கும் எஜமானர்களான பொதுஜனங்களின் காதில் விழட்டும் என்று சொல்லி வைக்கிறோம்.

(1) இப்போது சென்னை - திருச்சி ரேடியோ நிலையங்களில் நடத்தும் நிகழ்ச்சிகளின் காலம் மிக அதிகம். காலையில் ஒரு நிகழ்ச்சி, மத்தியானம் ஒரு நிகழ்ச்சி, மாலையில் ஒரு நீடித்த நிகழ்ச்சி நடைபெறுகின்றன. "எதற்காக?—யாருடைய நன்மைக்காக?" என்று பார்க்கலாம்.

அரைகுறையாகச் சங்கீதக் கலையைக் கற்றுக்கொண்டு, உணர்ச்சி இல்லாமலும் உயிர் இல்லாமலும் கர்நாடக சங்கீதத்தின் தன்மையே இல்லாமலும், கிளிப் பிள்ளைகளைப்போல் டியூஷன் வாத்தியார்கள் சொல்லிக் கொடுத்ததை ஒப்புவிக்கும் ரேடியோ சங்கீதக் கச்சேரிகளினால் யாருக்கு என்ன பிரயோஜனம்?

இத்தகைய மட்டமான ரேடியோக் கச்சேரிகள் கர்நாடக சங்கீதத்துக்குப் பெரும் அநீதி விளைக்கின்றன. இந்த நிகழ்ச்சிகள் வடநாட்டிலேகூடக் கேட்கப்படும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நல்ல குரல் இல்லாமல், கலைத் தேர்ச்சியில்லாமல் பள்ளிக்கூடப் பிள்ளைகள் பாடம் ஒப்புவிப்பதுபோல ரேடியோவில் பாடுவதைக் கேட்கிற வடநாட்டு ரஸிகர்கள், கர்நாடக சங்கீதத்தின் தன்மையைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்?

இப்போது நடக்கும் ரேடியோ நிகழ்ச்சிகளின் மொத்த காலத்தைப் பாதியாகக் குறைத்து விடலாம்,—அதனால் யாருக்கும் எந்தவித கஷ்டமும் ஏற்படாது என்று உறுதியாகச் சொல்கிறோம்.

அதோடு, மேற்படி நிகழ்ச்சிகளுக்காகச் செலவாகும் சர்க்காரின் பணம்,—பொது மக்களின் பணம்,—ரொம்பவும் மிச்சமாகும். 'பண வீக்க'த்தைக் குறைக்கும் சர்க்கார் திட்டத்தில் இதை ஒரு முக்கிய அம்சமாக வைத்துக் கொள்ளலாம்.

காலையிலும் மத்தியானமும் செய்திகள் முக்கியமானவை. செய்திகளுக்கு முன்னும் பின்னும் ரேடியோ நிலைய வித்வான்கள் ஐந்து ஐந்து நிமிஷம் தங்களுடைய கைத்திறமையைக் காட்டினால் போதும். அதற்கு மேல், சங்கீத நிகழ்ச்சிகள் அவசியமில்லை. நம்முடைய ஜனங்களுக்கு வேறு வேலை கிடையாதா? காலை, மத்தியானம், மாலை,—எப்போதும் அரை குறைத் தேர்ச்சியுள்ள சங்கீதத்தைக் கேட்பதுதானா வேலை?

(2) இப்போது ரேடியோவில் நடக்கும் சொற்பொழிவுகளில் பெரும்பாலானவை யாருடைய பிரீதிக்காக நடக்கின்றன என்பது அந்த ரேடியோ மகாதேவனுக்குத்தான் தெரிந்திருக்க வேண்டும்.

பிரசங்கங்கள் அமாவாசைத் தர்ப்பணம் மாதிரி இருக்கின்றன. பிள்ளைகள் பாட புத்தகத்தைப் பார்த்துப் பாடம் வாசிப்பது போலிருக்கின்றன.

ஏற்கனவே விஷயம் தெரிந்தவர்களுக்கு அந்தப் பிரசங்கங்களினால் யாதொரு பயனுமில்லை. விஷயம் தெரியாதவர்களுக்கோ, கொஞ்சங்கூட உபயோகமில்லை.

முக்கியமான விஷயங்களைப் பற்றி, நன்றாக ஆராய்ச்சி செய்து, அறிந்தவர்களைக் கொண்டு, வாரம் இரண்டு பிரசங்கங்கள் செய்வித்தால் போதுமானது.

(3) ரேடியோ நிலையங்களில் அவ்வப்போது நடக்கும் நாடகங்களில் சில நன்றாக அமைகின்றன. இந்தத் துறையில் மேலும் முயற்சிகள் செய்யலாம்; செய்யச் செய்யப் பயன் உண்டு. ரேடியோ நாடகங்கள் உபயோகமான விஷயங்களைப் பரப்பும் முறையில் அமைய வேண்டும். 'கலைக்காகவே கலை' என்னும் கொள்கையை மற்றவர்கள் வைத்துக் கொள்ளட்டும். ரேடியோக்கள் நாடகக் கலையின் மூலமாகப் பொது மக்களின் நன்மையைத் தேடுவதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

(4) ரேடியோ நிலையங்களை உண்மையாகப் பயன்படுத்த வேண்டியது கிராமங்களுக்காக; கிராமங்களின் முன்னேற்றத்துக்காக; கிராமவாசிகளின் கல்வி வளர்ச்சிக்காக;— இதை நம் பிரதம மந்திரி எடுத்துக்காட்டியிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம்.

பட்டணங்களில் உள்ளவர்கள் இப்போது ரேடியோக்களின் மூலமாக அடையும் பலன்களை வேறு விதத்திலும் அடைந்து கொள்வார்கள். சங்கீதம் கேட்கவோ, நாடகம் பார்க்கவோ, பிரசங்கங்களைச் செவி மடுக்கவோ,—அவர்களுக்கு வேறு வசதிகள் இருக்கின்றன. தினசரிச் செய்திகளுக்கோ பத்திரிகைகள் இருக்கின்றன.

ஆகையால், ரேடியோ நிகழ்ச்சிகள் மிகப் பெரும்பாலும் கிராமவாசிகளை உத்தேசித்தே அமைக்கப்பட வேண்டும்.

தற்சமயம் வீட்டில் ரேடியோப்பெட்டி வைத்துக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் பட்டணங்களில் உள்ள மத்திய வகுப்பார் என்பது உண்மையே. ஆனால் எப்படியும் இந்த நிலைமை இருந்து விடாது; இருந்துவிடக் கூடாது.

குறைந்த பட்சம் கிராமத்துக்கு ஒரு ரேடியோக் கருவியாவது அடுத்த மூன்று வருஷத்துக்குள் ஏற்பட வேண்டும்.

பட்டணங்களில் உள்ள ரேடியோப் பெட்டி ஒவ்வொன்றிலும் சராசரி ஐந்து பேர் கேட்டால், கிராமத்து ரேடியோவில் சராசரி நூறு பேர் கேட்பார்கள்.

இப்போதிருந்தே, நம் ரேடியோ நிலையங்கள் கிராம வாசிகளுக்கு உபயோகப்படும்படியான நிகழ்ச்சிகளை அதிகமாகத் தயாரித்து ஒலி பரப்ப வேண்டும்.

தற்சமயம் தினம் அரைமணி நேரம் கிராமங்களுக்கான நிகழ்ச்சிகள் ரேடியோவில் நடைபெறுகின்றன.

'கிராம நிகழ்ச்சி' என்றால் பட்டிக்காட்டானைப்போல் பேசுவது, பூசாரிப் பாட்டுப் பாடுவது என்ற அடிப்படையில் நிகழ்ச்சிகள் அமைகின்றன.

பட்டிக்காட்டுப் பேச்சை ரேடியோ நிகழ்ச்சியில் அமைத்தால், பட்டணவாசிகளுக்கு அது தமாஷாயிருக்கும்; கிராமவாசிகளுக்கு வெறுப்பையே அளிக்கும்.

"நம்மைக் கேலி செய்கிறார்கள்" என்ற எண்ணத்துடன் கிராமவாசிகள் கேட்பது எதுவும் அவர்களுடைய மனதில் பதியாது.

கிராம ஒலி பரப்பில் மிக முக்கியமான நிகழ்ச்சிகளைக்கூடச் சில சமயம் கேலிக் கூத்தாக அடித்து விடுகிறார்கள்.

காந்தி மகாத்மா ஆத்ம தியாகம் செய்த அன்று மத்தியான மாலை, ரேடியோ கிராம நிகழ்ச்சியில், மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்டதைப் பற்றிப் பட்டிக்காட்டு பாஷையில் பேசினார்கள். அதைக் கேட்டவர்கள் பலர் ரேடியோ நிலையத்தைத் தரை மட்டமாக்கிவிட வேண்டும் என்று ஆத்திரம் கொண்டார்கள். அவ்வளவு இலட்சணமாகக் காந்தி மகானுடைய முடிவு கிராம வாசிகளுக்குச் சொல்லப்பட்டது.

கிராம நிகழ்ச்சிகள், கிராமவாசிகள் சிரத்தையுடன் கேட்கக் கூடியவாறு எளிமையான தூய தமிழ் நடையில் உயர்ந்த பாணியில் அமைக்கப்பட வேண்டும்.

இதற்கு, நாட்டின் சிறந்த அறிவாளிகளின் உதவியைத் தேட வேண்டும். கிராமத் தொண்டுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கும் தொண்டர்களின் உதவியையும் நாட வேண்டும்.

* * *

ஆக, ரேடியோ மகாதேவரிடம் நாம் கேட்கும் வரங்கள்: "நிகழ்ச்சிகளின் நீளத்தைக் குறையுங்கள்; பிரசங்கத் தலைவேதனையைக் குறையுங்கள்; உயர்தர சங்கீதத்தை மட்டுமே ஒலி பரப்புங்கள்; கூடியவரை எல்லா நிகழ்ச்சிகளையும் கிராம வாசிகளுக்குப் பயன்படுமாறு அமையுங்கள்!" என்பவைதான்.

ரேடியோ மகாதேவர் என்ன கருணை செய்கிறாரோ, பார்க்கலாம்.

அலை ஓசை

கல்கி

நாலாம் அத்தியாயம்

பால சந்நியாசி

இரவு மணி பத்து அடித்தது. வானத்தைக் கருமேகங்கள் மூடிக் கொண்டிருந்தன. பொச பொச வென்று மழைத் தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. சிலுசிலு வென்று குளிர்ந்த காற்று அடித்துக் கொண்டிருந்தது.

ஆத்மநாதய்யர் வீட்டுக்குள் சந்தடி இன்னும் அடங்க வில்லை. ஆனால் தாமோதரம் பிள்ளை வீட்டில் எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டு விட்டன. வீட்டில் இருளோடு நிசப்தம் குடிகொண்டிருந்தது.

வீட்டுக்குப் பக்கத்துச் சந்திலிருந்து ஒரு மோட்டார் வண்டி வந்து தாமோதரம் பிள்ளை வீட்டு வாசலில் நின்றது. அடுத்த நிமிஷம் வீட்டுக் கதவு திறந்தது. இருளடைந்திருந்த வீட்டின் உட்புறத்திலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு வந்தது. அந்த உருவத்தின் மீது மங்கலான வீதி விளக்கின் ஒளி விழுந்தபோது, இடுப்பில் காஷாயம் தரித்துக் கையில் கமண்டலம் ஏந்திய பால சந்நியாசியின் உருவம் என்று தெரிய வந்தது. அந்தப் பால சந்நியாசி திண்ணை ஓரத்தில் நின்று வீதியின் இருபுறமும் எதிர்ப்பக்கமும் கவனித்துப் பார்த்தார். ஒருவரும் இல்லை யென்று அறிந்ததும் மோட்டார் வண்டிக்குள் திறந்திருந்த கதவின் வழியாகப் பாய்ந்து ஏறினார். மறு கணம் வண்டி சத்தம் செய்யாமல் புறப்பட்டது.

சிறிது நேரம் வரையில் வண்டிக்குள்ளேயும் நிசப்தம் நிலவியது. தேவபட்டணத்துத் தெருக்களைத் தாண்டி அப்பாலிருந்த சாலையில் வண்டி பிரவேசித்ததும், வண்டி ஓட்டிய அமரநாத், "அப்பா! பிழைத்தோம்! இனிப் பயமில்லை!" என்றான்.

"எனக்கு என்னமோ இன்னமும் கொஞ்சம் பயமாய்த்தானிருக்கிறது. இந்த மோட்டாரில் இருக்கிற வரையில் எனக்குப் பயந்தான். இறங்கி விட்டால் கவலையில்லை. எனக்காக நீ இவ்வளவு பெரிய அபாயத்துக்கு உட்பட எண்ணியதை நினைத்தால்.........?"

"நீ அபாயத்துக்கு உட்படவில்லை, நான் மட்டுந்தான் அபாயத்துக்கு உட்படுகிறேனாக்கும்! இந்தத் தேசத்திலேயே நீ ஒருவன்தான் எதற்கும் துணிந்த வீராதி வீரன் என்று எண்ணம்போ லிருக்கிறது!"

"அப்படியில்லை, அமரநாத்! எந்த நிமிஷத்திலும் கைதியாவதற்குத் தயாராகவே நான் இருந்து வருகிறேன். என்றைக்காவது ஒரு நாள் கைதியாகியே தீரவேண்டும். உன் விஷயம் அப்படி யல்ல. எனக்காக நீ கஷ்டப்பட வேண்டி நேர்ந்தால்......?"

"உனக்காக நான் ஒன்றும் கஷ்டப்பட வில்லை. உனக்காகக் கஷ்டப்பட்டவர்கள் உன் தகப்பனார், தமையன், உன் தங்கையின் மாமனார் முதலியவர்கள். எல்லாரும் இன்றைக்குச் செம்மையாக அடி வாங்கினார்கள். உன் தங்கையும் அம்மாவும் பட்ட வேதனை கொஞ்சமல்ல. அவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதற்குள் எனக்குப் பிராணன் போய்விட்டது."

"அதை நினைத்தால் எனக்கு அவமானமாயிருக்கிறது. என்றைக்காவது

ஒரு நாள் அவர்களுடைய முகத்தில் விழிக்க வேண்டி நேர்ந்தால், என்ன சமாதானம் சொல்வேன்? அவர்களை அடி படும்படி விட்டுவிட்டு நான் தப்பித்துக் கொண்டதைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?..."

"ஒன்றும் நினைக்க மாட்டார்கள். எப்படியாவது நீ தப்பித்துக் கொண்டாயே என்று சந்தோஷப்படுவார்கள். இப்போதுகூட உன் கதி என்ன ஆயிற்றோ என்றுதான் அவர்களுக்குக் கவலை. நீ நிச்சயமாய்த் தப்பித்துக் கொண்டாய் என்று தெரிந்தால் அவர்களுடைய கவலை நீங்கிவிடும்."

"என்னதான் இருந்தாலும் நான் இன்று செய்தது ரொம்ப அவமானமான காரியந்தான். உன்னுடைய வற்புறுத்தலைக்கூட நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். அவர்களை அடிபட விட்டு நான் ஒளிந்து கொண்டிருக்க என் மனம் இடங் கொடுத்திராது. டில்லியிலிருந்து என் அத்தங்கா சீதாவைப் பற்றிக் கடிதம் வரவில்லையென்றால், நானே போலீஸ் அதிகாரிகளிடம் சென்று என்னை ஒப்புக் கொடுத்திருப்பேன்."

"அதனால் யாருக்கும் எந்தவிதச் சந்தோஷமும் ஏற்பட்டிராது. உன்னைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் மனவேதனைப்பட்டிருப்பார்கள்,—என் தகப்பனார் உள்படத்தான்!"

"தாமோதரம் பிள்ளை என் விஷயத்தில் காட்டிய அநுதாபத்தை நினைத்தால்தான் எனக்குப் பரம ஆச்சரியமாயிருக்கிறது. ஏற்கெனவேயே அவருக்குக் காங்கிரஸ், கதர் என்பது ஒன்றும் பிடிக்கவே பிடிக்காது......"

"நடுவில் உன்னூர்த் தேர்தல் தகராறினால் அவருடைய மனது மேலும் கெட்டுப் போயிருந்தது."

"அப்படியிருந்தும் அவர் என்னைத் தப்பித்துவிட எடுத்துக் கொண்ட முயற்சியை நினைத்தால்,—எத்தனை வியப்பாயிருக்கிறது!"

"அதற்குக் காரணம் என்னவென்று உனக்குத் தோன்றுகிறது? ஊகித்துச் சொல், பார்க்கலாம்!"

"காரணம் வேறு என்ன இருக்க முடியும்? நான் உன்னுடைய சிநேகிதன் என்ற காரணந்தான்."

"அதெல்லாம் இல்லை. என்னுடைய சிநேகிதன் என்று ஒருவனைச் சொன்னால், அவன் பேரில் அதிருப்தியும் கோபமும் கொள்ள அந்தக் காரணமே அவருக்குப் போதும். உண்மை என்ன, தெரியுமா? இங்கிலீஷ்காரன் சிங்கப்பூரில் அடிபட்டதிலிருந்து நம்மவர்கள் எல்லாருடைய மனமும் மாறிப்போயிருக்கிறது. இந்த இங்கிலீஷ் ராஜாங்கம் எப்படியும் இந்தியாவை விட்டுப் போய்விடப் போகிறது என்று சிறு பிள்ளைகள் முதல் வயது முதிர்ந்த கிழவர்கள் வரையில் எல்லாரும் நம்புகிறார்கள்......."

"அதற்கும் உன்னுடைய தகப்பனார் எனக்குச் செய்த உதவிக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் இருக்கிறது. நாளைக்கு இங்கிலீஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விட்டால், அடுத்தாற் போல் அதிகாரத்துக்கு யார் வருவார்கள்? உன்னைப் போன்ற காங்கிரஸ் புரட்சிக்காரர்கள் ஒருவேளை வந்தாலும் வருவீர்கள். எல்லாவற்றுக்கும் கப்பலில் பாதிப் பாக்குப் போட்டு வைக்கலாம் என்று கருதித்தான் அப்பா உன்னைத் தப்புவிக்க முன் வந்தார்."

"அது உண்மையானால், உன் தகப்பனாரின் பாதிப் பாக்கு நஷ்டந்தான். என்னைப் போன்ற ஓட்டைக் கப்பலில் பாக்குப் போட்டு என்ன பிரயோஜனம்? ஆனால் நீ சொல்லும் காரணத்தை நான் ஒரு நாளும் ஒப்புக் கொள்ள மாட்டேன். உன் தந்தை அவ்வளவு கணக்குப் பார்த்து சுயநல காரணத்துடன் என்னைத் தப்புவித்தார் என்பது ஒருநாளும் உண்மையல்ல. உன்னுடைய சிநேகிதன் என்ற காரணத்துக்காகவும் என் பேரில் உள்ள பிரியத்தினாலுந்தான் இந்தக் காரியம் செய்திருக்க வேண்டும்; அல்லது தேசமெங்கும் பரவியிருக்கும் புரட்சி வெறி உன் தகப்பனார் மனதிலும் புகுந்திருக்க வேண்டும்."

"இதை என் தந்தையிடம் சொன்னால் அவர் சிரிப்பார். போனால் போகட்டும். நீ சொல்கிறபடியே வைத்துக் கொள்ளலாம். உன் அத்தங்காளின் விஷயம் என்னமோ சொன்னாயே, அது என்ன?"

"என் தங்கை லலிதாவைப் பார்க்க வந்த மாப்பிள்ளை தனக்குச் சீதா

ஷ்வைத்தான் பிடித்திருக்கிறது என்று சொல்லிக் கலியாணம் செய்து கொண்டானல்லவா? அந்த 'லவ் மாரியேஜ்' பற்றி அப்போது நாமெல்லோரும் பிரமாதமாய்ப் பேசிக்கொண்டிருந்தது நினைவிருக்கிறதா? உண்மையில் அந்தக் கலியாணம் பெரிய துரதிர்ஷ்டமாய் முடிந்திருக்கிறது. அவர்களுடைய இல்வாழ்க்கையில் சந்தோஷமே கிடையாது, அமரநாத்! ஓயாமல் சண்டைதான்!"

"நீ வீணாக மிகைப்படுத்திக் கூறுகிறாய், சூரியா! நம்முடைய தேசத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது தம்பதிகள் ஓயாமல் சண்டை போட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சந்தோஷமாக இல்லை என்று அர்த்தமா? நானும் சித்ராவும் தினம் அரை டஜன் தடவை சண்டை போட்டுக் கொள்கிறோம்......"

"உங்களுடைய விஷயம் வேறு, அமரநாத்! உங்களைப் போன்ற தம்பதிகள் உலகத்தில் வெகு அபூர்வம். உங்களுடைய சண்டையெல்லாம் 'காதலர்களின் சண்டை'; வேடிக்கைச் சண்டை. சீதா—சௌந்தரராகவனுடைய விஷயம் அப்படியல்ல. பூனையும் எலியும் போல அவர்களுடைய வாழ்க்கை நடந்து வருகிறது."

"அதற்கென்ன காரணம்? சௌந்தரராகவன் சீமைக்குப் போய் வந்தவன்; பெரிய சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவன். ஆகையால் தன் மனைவி ஆங்கில தோரணையில் நவநாகரிகமாக வாழவேண்டும் என்று நினைக்கலாம். உன் அத்தங்காள் அதற்குச் சம்மதியாமல் இருக்கலாம். எனக்குத் தெரியும்; எத்தனையோ ஐ. சி. எஸ். காரர்கள் இந்தக் காரணத்துக்காகவே மனைவியைத் தள்ளி வைத்திருக்கிறார்கள்."

"சீதா விஷயத்தில் அந்தக் காரணம் சொல்ல முடியாது, அமரநாத்! முதலிலே ஒரு வேளை கொஞ்சம் தயங்கியிருக்கலாம். பிற்பாடு, சௌந்தரராகவன் நாகரிக ஏணியில் ஒருபடி ஏறினால் சீதா இரண்டு படி ஏறினாள். எனக்குக்கூட, 'ஐயோ! அத்தங்கா இப்படி மாறிப் போய் விட்டாளே?' என்று வருத்தமாயிருந்தது. அதனால் பயன் ஒன்றும் ஏற்படவில்லை. சௌந்தரராகவனுடைய மூர்க்கத்தனம் மேலும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது."

"இப்போது தெரிகிறது, எனக்குக் காரணம். நம்மில் இங்கிலீஷ் படித்த இளைஞர்கள் கலியாணமான புதிதில் தங்களுடைய மனைவிமார் நவநாகரிகமடைந்து எல்லாருடனும் கூச்சமின்றிப் பழக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்புறம் அவர்களுக்கு இது பிடிக்காமல் போய்விடுகிறது. ஹிந்து தர்மத்தின்படி பெண்கள் அடக்கமாக இருந்தால்தான் நல்லது என்று நினைக்கிறார்கள். அப்படி ஆண் பிள்ளைகள் நினைக்கும்போது பெண் பிள்ளைகளுக்குப் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப் போகப் பிடிப்பதில்லை......நான் சொல்கிறதைக் கேள், சூரியா! அந்தத் தம்பதிகள் விஷயத்தில் நீ ஒன்றும் தலையிடாமல் இருந்துவிடு. கொஞ்ச நாளில் எல்லாம் சரியாய்ப் போய்விடும்!"

"அட்படி என்றால் இருக்க முடியவில்லை, அமரநாத்! வாழ்நாள் எல்லாம் கஷ்டப்பட்ட என் அத்தை இறப்பதற்கு முன்னால் தன்னுடைய அநாதைப் பெண்ணைக் கவனித்துக் கொள்ளவேண்டும் என்று என்னிடம் கேட்டுக் கொண்டாள். அதை என்னால் மறக்க முடியவில்லை; சீதாவையும் மறக்க முடியவில்லை!" என்றான் சூரியா. அவனுடைய குரல் தழதழத்திருந்ததை அமரநாத் கவனித்துச் சற்றுநேரம் மௌனமாயிருந்தான்.

• • •

சாலையின் இருபுறத்திலும் கழனிகளில் தண்ணீர் ததும்பி அலை மோதிக் கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் காவேரி நதியின் பிரவாகம். மோட்டார் வண்டி சாலை வளைவில் திரும்பும் போது நெடுந் தூரத்துக்கு மோட்டார் விளக்கின் வெளிச்சம் அடித்து நாலாபுறமும் பரவியிருந்த நீர்வளத்தைக் காட்டியது. கழனிகளிலும் காவேரியிலும் இலேசான மழைத் தூற்றல் விழுந்தபோது உண்டான சலசலசல சத்தம் மந்தர ஸ்தாயி சங்கீதத்தைப் போல் மனதுக்கு அமைதியை உண்டாக்கியது. நல்ல சங்கீதக் கச்சேரியின் நடுவில் அரசியல் சம்பாஷணை



தொடங்கும் ரஸிகர்களைப்போல் திடீர் திடீரென்று தவளைகள் உற்சாக மடைந்து வரட்டுக் கூச்சல்போட்டன.

மோட்டார் வண்டியின் முன் கண்ணாடியில் விழும் மழைத் துளிகளைத் துடைக்கும் கருவிகள் டக் டக் என்ற சத்தத்தோடு தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தன.

"அடாடா! நீர்வளம் என்றால் இது வல்லவா நீர்வளம்? வடநாட்டின் பல பகுதிகளை நான் பார்த்திருக்கிறேன். எல்லாம் வறண்ட பிரதேசங்கள். இந்த மாதிரி நீர் வளம் எங்கேயும் கிடையாது" என்றான் சூரியா.

"நீ வங்காளத்துக்கு வந்ததில்லை, சூரியா! தமிழ் நாட்டைக் காட்டிலும் நீர்வளம் நிறைந்தது வங்காளம். அதிலும் கீழ் வங்காளம் அதிக வளம் பொருந்தியது. மழை காலத்தில் எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயந்தான்!" என்று அமரநாத் கூறினான்.

"அப்படிப்பட்ட நீர்வளம் நிறைந்த தேசத்தில் இப்போது பஞ்சம் என்று சொல்கிறாயே?" என்றான் சூரியா.

"அதுதானே வேடிக்கை! நான் சொல்லுவது மட்டும் என்ன? பத்திரிகைகளில் நீ பார்க்கவில்லையா? வெளி ஜில்லாக்களிலிருந்து கல்கத்தாவுக்கு வரும் ஜனங்கள் சாலை ஓரங்களில் விழுந்து சாகிறார்கள் என்று."

"கல்கத்தா நிலைமை அப்படியிருக்கும்போது நீ மறுபடியும் அங்கே போகப் போவதாகச் சொல்கிறாயே?"

"போகாமல் என்ன செய்வது? உத்தியோகம் இருக்கிறதல்லவா? வங்காளத்தில் பஞ்சம் என்றால், கல்கத்தாவிலுள்ள நாற்பது லட்சம் பேரும் சாப்பாடு இல்லாமல் செத்துப் போய் விடுவார்கள் என்பதில்லை."

"தெரியும், தெரியும். உண்மையில் அரிசிப் பஞ்சமே இல்லை; பணப் பஞ்சந்தான். பணம் இருந்தால் அரிசிக்குப் பஞ்சமில்லை. இருக்கிற அரிசியைச் சில சண்டாள முதலாளிகள் வாங்கிச் சேர்த்திருக்கிறார்கள். அவர்களுடைய கொள்ளை லாபத்துக்காக ஏழை எளியவர்களின் உயிர் பலி கொடுக்கப் படுகிறது. அப்படித்தானே, அமரநாத்!"

"ஆம்; அப்படித்தான். இத்தகைய பேராசை பிடித்த கிராதகர்கள் நம்முடைய நாட்டில் இருக்கிறார்கள். இந்த நாட்டுக்குத்தான் நீ பூரண சுதந்திரம் வேண்டும் என்கிறாய்."

"இங்கிலீஷ்காரன் எப்போது இந்த நாட்டைவிட்டு வெளியேறுகிறானோ, அப்போது இப்படிப்பட்ட தீமைகள் எல்லாம் ஒழிந்து போய்விடும். பிரிட்டிஷ் ஆட்சியினால் வந்த கேடுகள் தானே இவையெல்லாம்?"

"ஆனால், இங்கிலீஷ்காரன் இந்தியாவை விட்டுப் போய்விடுவான் என்று நீ நம்புகிறாயா? உண்மையாகச் சொல்!" என்றான் அமரநாத்.

"கட்டாயம் ஒருநாள் இங்கிலீஷ்காரன் இந்த நாட்டை விட்டுப் போகத்தான் போகிறான். காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் நான் பிரயாணம் செய்திருக்கிறேன், அமரநாத்! வங்காளத்துக்கு மட்டுந்தான் வரவில்லை. நான் போன இடத்திலேயெல்லாம் ஜனங்களுடைய மனது கொதித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டேன். இந்தியா தேசம் ஒரு பெரிய எரிமலையாகியிருக்கிறது. எந்தச் சமயத்தில் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்குமோ தெரியாது. ஏதாவது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட வேண்டியதுதான்; நாற்பது கோடி ஜனங்களும் சீறி எழுந்து புரட்சி செய்யப்போகிறார்கள். அந்தப் புரட்சி நெருப்பிலே பிரிட்டிஷ் ஆட்சி எரிந்து பஸ்பமாகப் போகிறது. அது மட்டுமா? நாட்டைப் பிடித்த எல்லாப் பீடைகளும் எரிந்து பொசுங்கிச் சாம்பராகப் போகின்றன......!"

"போதும், சூரியா! போதும்! நம்மைச் சுற்றிலும் ஒரே குளிர்ச்சியாயிருக்கிறது. இருந்தாலும் உன்னுடைய பேச்சு இந்த மோட்டாருக்குள் டெம்பரேச்சரையே அதிகமாக்கி விட்டது. எரிமலை வெடிக்கிறபோது வெடிக்கட்டும்; பார்த்துக் கொள்ளலாம்......அதோ, மயிலம்பட்டி ஸ்டேஷன் வந்துவிட்டது. இப்போது நாம் பிரிய வேண்டும்!" என்றான் அமரநாத்.

சற்றுத் தூரத்தில் விளக்குகள் மினுக்கின. ஒரு சின்னக் கட்டிடம், கைகாட்டி முதலிய ரயில்வே ஸ்டேஷன் சின்னங்கள் மங்கலாகத் தெரிந்தன. தேவ பட்டணம் ஸ்டேஷனில் ரயில் ஏறுவது அபாயம் என்று அமரநாத் இந்தப் பட்டிக்காட்டு ஸ்டேஷனுக்குச் சூரியாவைக் கொண்டு விட்டான்.

வண்டி ஒரு மரத்தடியில் நின்றது. நல்ல வேளையாகத் தூறல் குறைந்திருந்தது. சூரியா கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

"சூரியா! உன்னை இப்போது பார்த்தால் சாக்ஷாத் விவேகானந்த சுவாமியைப் போலிருக்கிறது. பார்க்கிறவர்கள் 'யாரோ மகான்; பால சந்நியாசி' என்று நினைத்துக் கொள்வார்கள்!" என்றான் அமரநாத்.

"உண்மையில் நான் 'பால சந்நியாசி' அல்ல; போலி சந்நியாசி. இந்தப் புனிதமான வேஷத்தைப் பொய்யாகப் போட வேண்டியிருப்பது பற்றி எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது......" என்றான் சூரியா.

"ஆனால் இந்த வேஷம் போதும் என்று நினைக்கிறாயா? சி. ஐ. டி. புலிகள் இதற்கு ஏமாந்து போய்விடுவார்களா?" என்று அமரநாத் கவலையுடன் கேட்டுக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கினான்.

"சொல்லுவதற்கில்லை. தென்னிந்தியர்கள் எல்லாக் காரியங்களிலும் கெட்டிக்காரர்களாயிருப்பது போலவே சி. ஐ. டி. வேலையிலும் கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள். வட இந்தியாவில் சி. ஐ. டி. சுத்த மோசம். சம்பந்தமில்லாதவர்களைத்தான் பிடிப்பார்கள். இத்தனை தூரம் நான் பிரயாணம் செய்திருக்கிறேன்; தேவ பட்டணத்தில் எப்படியோ கண்டு கொண்டு விட்டார்கள், பார்! எல்லாம் கடவுள் சித்தம் போல் நடக்கும். டில்லிக்கு ஒரு தடவை போய்விட்டேனானால், அப்புறம் என்ன ஆனாலும் பாதகமில்லை! நான் போய்வரவா?" என்றான் சூரியா.

அமரநாத் சூரியாவின் கையைப் பிடித்துக் குலுக்கிய வண்ணம், "உன்னை இப்படி விட்டுப் போவது எனக்கு எவ்வளவோ கஷ்டமாயிருக்கிறது. ஆனாலும் வேறு வழியில்லை. சூரியா! இந்தியா தேசமெங்கும் பிரயாணம் செய்த நீ வங்காளத்துக்கு மட்டும் ஏன் வராதிருக்க வேண்டும்?

டில்லியில் உன் காரியம் முடிந்ததும் கல்கத்தாவுக்கு வந்துவிடு. கல்கத்தா புரட்சிக்காரர்களின் சொர்க்கம். போலீஸ்காரர்கள் மீது முட்டிக் கொண்டால்கூட உன்னைப் பிடிக்க மாட்டார்கள். வேறு யாரையாவது தேடிக் கொண்டு போவார்கள். கல்கத்தாவுக்கு வந்து என் வீட்டில் சில காலம் இரு. விலாசம் ஞாபகம் இருக்கிறதல்லவா?" என்றான்.

"டில்லிக்குப் போய் என் காரியம் முடிகிற வரையில் நான் பிடிபடாதிருந்தால், கட்டாயம் கல்கத்தா வருகிறேன், அமரநாத்! விலாசம் ஞாபகம் இருக்கிறது!" என்று சூரியா கூறினான். அப்போது அடித்த மின்னல் ஒளியில் அவனுடைய கண்களில் துளித்திருந்த கண்ணீர்த் துளிகள் முத்துப் போலப் பிரகாசித்தன.

அமரநாத் மேலே ஒன்றும் சொல்லாமல், மௌனமாக வண்டியைத் திருப்பிக்கொண்டு போனான்.

சூரியா மயிலம்பட்டி ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தான்.

ஐந்தாம் அத்தியாயம்

விபூதி மகிமை

இருட்டில் தன்னந்தனியே நடந்து சென்று சூரியா ரயில்வே ஸ்டேஷனை அடைந்தான். அங்கேயிருந்த இரவு ஸ்டேஷன் மாஸ்டரும் குமாஸ்தாவும் இரண்டு போர்ட்டர்களும் அந்தப் பால சந்நியாசியின் முக தேஜஸைப் பார்த்து பிரமித்தார்கள். "சுவாமி எங்கேயிருந்து வருகிறது? எங்கே போகிறது?" என்று அவர்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளப் பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய எல்லாக் கேள்விகளுக்கும் சுவாமியாரிடமிருந்து, "ஹர ஹர மகாதேவ்" என்ற ஒரே பதில்தான் வந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தெற்கே போகும் ரயில் வரவே, சந்நியாசி பிளாட்பாரத்துக்குள் சென்றார். கேட்டில் நின்ற போர்ட்டர் அவரை நிறுத்தலாமா என்று பார்த்தான். அதற்குள் இரவு ஸ்டேஷன் மாஸ்டர், "வேண்டாம், அப்பா! சாமியாரை நிறுத்தாதே!" என்று சொன்னார்.

பிளாட்பாரத்தில் வந்து நின்ற ரயில் ஓரமாகப் பாலசந்நியாசி விடுவிடு என்று நடந்து சென்றார். தேவபட்டணம் ஸ்டேஷனில் அமரநாத் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த இரண்டாம் வகுப்பு டிக்கட் சந்நியாசியிடம் இருந்தது. ஆனாலும் அவர் மூன்றாம் வகுப்பு வண்டிகளைப் பார்த்துக் கொண்டே போனார். மழையை முன்னிட்டு அநேக வண்டிகளில் ஜன்னல் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. ஒரு வண்டியில் சில ஜன்னல்கள் திறந்திருந்தன. சாமியார் அந்த வண்டியில் ஏறினார். ஒவ்வொரு அரைப் பெஞ்சியிலும் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள்; அல்லது ஒருவர் காலை படக்கிக் கொண்டு படுத்திருந்தார். ஒரே ஒரு அரைப் பெஞ்சியில் மட்டும் ஒரு மனிதன் சப்பணம் போட்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் ஒரு டைரியும் பென்சிலும் இருந்தன.

பால சந்நியாசி நேரே அந்தப் பெஞ்சியண்டை போய் நின்று "ஹர ஹர மகாதேவ்" என்றார். அந்த மனிதன் நிமிர்ந்து பார்த்து விட்டு, "உட்காருங்கோ, சாமி!" என்றான்.

சாமியார் உட்கார்ந்து மடியில் செருகியிருந்த சிறு பட்டுப் பையை எடுத்து, அதிலிருந்து கொஞ்சம் விபூதி எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டு, "திருச்செந்தூர் முருகா!" என்றார்.

"சாமி எவ்விடத்துக்குப் பிரயாணமோ?" என்று அந்த மனிதன் கேட்டான்.

"இந்தக் கட்டை காசிக்குப் போய்த் திரும்பி வருகிறது. இராமேசுவரம் போக ஆசை! முருகன் அருள் எப்படியோ?' என்றார் சந்நியாசி.

"சாமியிடம் டிக்கட்டு இருக்கிறதோ?" என்று அந்த மனிதன் கேட்டான்.

"மதுரை வரையில் இருக்கிறது. ஒரு பக்தர் வாங்கிக் கொடுத்தார். அதற்கப்பால் முருகனுடைய சித்தம்!" என்று சொல்லிக் கொண்டே சந்நியாசி

இடுப்பில் செருகியிருந்த டிக்கட்டை எடுத்துக் காட்டினார்.

"இது இரண்டாம் வகுப்பு டிக்கட் அல்லவா? சாமி தவறி மூன்றும் வகுப்பு வண்டியில் ஏறிவிட்டதே!"

"இல்லை, இல்லை. தெரிந்துதான் ஏறினேன். பக்தன் வாங்கிக் கொடுத்தாலும் இந்தக் கட்டைக்கு இரண்டாம் வகுப்பில் போக விருப்பமில்லை. ஆகையால் ரயில் இங்கே நின்றதும் இரண்டாம் வகுப்பிலிருந்து இறங்கி மூன்றும் வகுப்பில் ஏறலாயிற்று!" என்றார் சந்நியாசி.

அந்த மனிதனுக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

"சாமியார் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? இந்தக் காலத்தில் எங்கே பார்த்தாலும் போலிச் சாமியார்கள்தான் அதிகமாய்ப் போயிருக்கிறார்கள்!" என்றான்.

"எல்லாம் முருகன் செயல்!' என்றார் பால சந்நியாசி.

* * *

ரயில் போய்க் கொண்டிருந்தது. வெளியே மழைத் தூற்றல் போட்டுக் கொண்டிருந்தது. உள்ளே பிரயாணிகள் தூங்கி வழிந்தார்கள்.

சாமியாருக்கும் அவருடைய புதிய பரமானந்த சீடனுக்கும் மட்டும் தூக்கம் வரவில்லை.

"அப்பனே! உன் மனதிலே ஏதோ கவலை குடி கொண்டிருக்கிறது!" என்றார் சந்நியாசி.

"ஆமாம், சாமி! வீட்டிலே சம்சாரத்துக்கு உடம்பு சரியில்லை. ஒரு மாதமாய் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் வருகிறேன். ஒன்றும் குணம் தெரியவில்லை. அதற்குள் இந்த 'டியூடி' வந்துவிட்டது."

சாமியார் விபூதிப் பையை எடுத்து, "இந்தா! காசி விசுவநாதர் கோயில் விபூதி. இதைக் கொண்டுபோய்ப் பக்தியுடன் உன் சம்சாரத்தின் நெற்றியில் இடு. குணமாகி விடும்!" என்றார்.

பய பக்தியுடன் அந்த மனிதன் விபூதியை வாங்கிக்கொண்டு, டைரியிலிருந்து ஒரு ஏட்டைக் கிழித்து அதில் பொட்டணம் கட்டினான்.

"அந்த ஒரு கவலைதானா? இன்னும் ஏதாவது உண்டா?"

"வேறு ஒன்றும் பெரிய கவலையில்லை. இன்றைக்குப் போகிற காரியம் ஜயமானால் நல்லது. 'பிரமோஷன்' கிடைக்கும். இல்லாவிட்டால் 'பிளாக் மார்க்' கிடைக்கும்."

"யாரோ ஒரு ஆளைத் தேடிக் கொண்டு நீ போகிறாய்? இல்லையா, அப்பனே?"

"உண்மை! உண்மை! சாமிக்கு ஞான திருஷ்டிகூட உண்டு போல் இருக்கிறது."

"எல்லாம் திருச்செந்தூர் முருகன் செயல்!" என்றார் சாமியார்.

"நான் தேடிப் போகிற ஆசாமி அகப்படுவானுங்களா, சாமி!"

"இந்தக் கட்டைக்கு என்ன தெரியும், அப்பா? முருகனுக்குத்தான் தெரியும். அந்த ஆசாமி இந்த ரயிலிலேதான் இருக்கிறதாக இவ்விடத்தில் உதயமாகிறது!" என்று சாமியார் தம் நெற்றியில் விரல்களால் தட்டிக் கொண்டார்.

"இருந்து என்ன பிரயோஜனம்? இந்த ரயிலிலே ஐந்நூறு பேர் இருக்கிறார்கள். அங்க அடையாளம் ஒன்றும் இல்லாமல் ஆளைக் கண்டு பிடி என்று சொன்னால், என்னத்தைச் செய்வது, சாமி! சர்க்கார் வேலையைப் போல், அதிலும் இந்த சி. ஐ. டி. உத்தியோகத்தைப் போல், தொல்லை பிடித்த வேலை வேறொன்றுமில்லை!" என்றான் சீடன்.

"உண்மை, அப்பனே, உண்மை! இந்தத் தரித்திரம் பிடித்த வேலையை நீ விட்டுவிடு! திருச்செந்தூர் முருகன் அருளால் உனக்கு வேறு நல்ல வேலை கிடைக்கும்!" என்றார் சாமியார்.

* * *

ரயில் திண்டுக்கல் ஜங்ஷனை அடைந்தது. சி. ஐ. டி. சேவகன் பால சந்நியாசியைப் பார்த்து, "சாமி! நான் இவ்விடத்தில் இறங்கி இன்னும் இரண்டு வண்டி தேடிப் பார்த்து விட்டு வருகிறேன். தாங்கள் இங்கேயே இருந்து என் இடத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். மதுரையிலிருந்து ராமேசுவரத்துக்கு டிக்கட்டைப் பற்றிச் சாமி கவலைப்பட வேண்டாம். மதுரையில் நான் வாங்கித் தருகிறேன்" என்றான்.

"இந்தக் கட்டைக்கு டிக்கட் இருந்தாலும் ஒன்றுதான்; இல்லாவிட்டாலும் ஒன்றுதான். முருகன் ரயிலில் ஏறச் சொன்னால் இந்தக் கட்டை ஏறும்; இறங்கச் சொன்னால் இறங்கும்" என்றார் பால சந்நியாசி.

• • •

பத்து நிமிஷத்துக்கெல்லாம் அந்த சி. ஐ. டி. சேவகன் ஒரு ரயில்வே போலீஸ் உத்தியோகஸ்தரை அழைத்துக் கொண்டு திரும்பி வந்தான். தான் உட்கார்ந்திருந்த பெஞ்சு காலியாயிருந்ததைப் பார்த்துத் திகைத்தான். ஒரு வேளை வேறு வண்டியாயிருக்கும் என்று அங்கு மிங்கும் ஓடிப் போய்ப் பார்த்தான்; பயனில்லை. பிறகு அதே வண்டிக்கு வந்து உள்ளே தூங்கி வழிந்த பிரயாணிகள் சிலரைப் பார்த்து, "இங்கேயிருந்த சாமியார் எங்கே?" என்று கேட்டான். யாரைக் கேட்டாலும், "தெரியாது; நாங்கள் பார்க்கவில்லை!" என்றார்கள். இதற்குள் வண்டி புறப்படும் நேரமாகி, விஸில் ஊதிவிட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர் அவனை இரண்டு திட்டுத் திட்டிவிட்டுத் திரும்பிப் போனார். சி. ஐ. டி. சேவகன் ரயிலில் ஏறிப் பழைய இடத்திலேயே போய் உட்கார்ந்து கொண்டான். திடீரென்று அவனுடைய முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "எல்லாம் விபூதியின் மகிமைதான்!" என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பையிலிருந்து விபூதிப் பொட்டணத்தை எடுத்துப் பிரித்துக் காசி விசுவநாதர் விபூதியை நெற்றியில் இட்டுக் கொண்டான்.

சில்லறை விஷயங்கள்

"இந்திய சர்க்கார் வெளிநாட்டு உணவுப் பொருள்களுக்காக ஏராளமான பணத்தைச் செலவழிக்கிறதே!" என்று சேத் ராமகிருஷ்ண டால்மியா கண்ணீர் வடிக்கிறார். உணவுப் பொருள் இறக்குமதியைக் குறைப்பதற்காக அந்த மகானுபாவர் ஒரு யோசனையும் சொல்லுகிறார். "இந்தியர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் சாப்பிடும் இருபது கவளம் அன்னத்தில் ஒரு கவளம் அன்னத்தைக் குறைத்துக் கொண்டால் எவ்வளவோ உணவுப் பொருள் மீதமாகுமே!" என்கிறார் அவர்.

ரிக்ஷாக்கார முனியன் இந்தச் செய்தியைப் படித்துவிட்டு, "இருக்கட்டும்; அந்த டால்மியா இந்தச் சென்னைப் பக்கம் வரட்டும். அவரையே சாப்பிட்டு விடுகிறேன்" என்றான்.

"ஏன்?" என்று கேட்டேன் நான்.

"இப்போது ரேஷனில் கொடுக்கப்படும் பத்து அவுன்ஸ் அரிசியைச் சமைத்தால் அது எனக்கு ஒரு கவளத்துக்குக் கூடச் சரியாக வருவதில்லையே! — அப்படியிருக்கும்போது இருபது கவள உணவை நாம் சாப்பிடுவதாக டால்மியா சொல்லுவது அக்கிரமம் அல்லவா?" என்றான் அவன்.

* * *

மந்திரி கோபால் ரெட்டி சட்டசபையில் பேசும்போது, சர்க்கார் பஸ்களில் பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்குவது சாத்தியமல்லவென்றும், பெண்களுக்கு உட்கார இடம் கிடைக்காவிட்டால் ஆண்கள் எழுந்து நின்று அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்.

நாலைந்து நாட்களுக்கு முன் டாக்டரை அழைத்துக்கொண்டு வருவதற்காக நான் அவசரமாகத் திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டுப் போனேன். பஸ்ஸில் ஏறியதும், யாரோ ஒரு பெண்மணி எனக்குப் பின்னாலே வந்து ஏறினாள். ஒரே ஒரு ஸீட்தான் காலியாக இருந்தது. நான் உட்கார்ந்து கொண்டேன். அந்தப் பெண்மணி உட்காருவதற்கு இடமில்லை. மந்திரி கோபால் ரெட்டி சொன்னது அப்போது ஞாபகத்துக்கு வந்தது. எழுந்து, அந்தப் பெண்மணியைப் பார்த்து மரியாதையுடன், "உட்காருங்கள், அம்மா!" என்று சொன்னேன். அந்தப் பெண்மணி சிரித்துக் கொண்டே, "எங்கே ஸார், போகவேண்டும்?" என்று கேட்டாள். அந்த ஸ்ரீமதி ஒரு பெண் கண்டக்டர் என்பது அப்போதுதான் என்னுடைய ஞாபகத்துக்கு வந்தது.

பெண்கள் உட்காருவதற்கு இடம் கொடுத்து அவர்களை மரியாதை செய்யவேண்டுமென்று சொல்லும் சர்க்கார், நாள் முழுதும் நின்று கொண்டே போகக்கூடிய கண்டக்டர்கள் வேலைக்குப் பெண்களை நியமித்திருப்பது என்ன மரியாதையில் சேர்ந்ததோ?

* * *

பிர்க்கா அபிவிருத்தி மந்திரி கனம் குருபாதம் அவர்களின் கண்டனத்துக்கு உள்ளாகாத ஸ்தாபனமோ, பேர்வழியோ கிடையாது. யாராயிருந்தாலும் அவர் இலட்சியம் செய்வதே கிடையாது.

சென்ற வாரம் இரண்டாவது பிர்க்கா அபிவிருத்தி போர்டுக் கூட்டத்தில் அவர் பேசும்போது, மேற்படி பிர்க்கா அபிவிருத்தி வேலைகள் சீக்கிரமாக நடப்பதற்குக் குறுக்கே நிற்பது சிவப்பு நாடாதான் என்பதாகச் சொல்லியிருக்கிறார்.

இன்னும் கொஞ்ச காலத்துக்குப் பிறகு, "இந்தப் பிர்க்கா அபிவிருத்தி வேலைகள் நடப்பதற்குக் குறுக்கே நின்று தொலைப்பது மந்திரி குருபாதம்தான்!" என்று அவர் ஒரு செய்தியைத் தூக்கிப் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

—எம். எஸ். என்.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

56. ஏறு கப்பல்!

இந்தியர்கள் பதிவுப் பத்திரங்களை எரித்த சம்பவம் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களுக்கும் டிரான்ஸ்வால் அரசாங்கத்துக்கும் பெரிதும் ஆத்திரத்தை உண்டாக்கியது. ஆனால் பெரிய இராஜ தந்திரியான தளபதி ஸ்மட்ஸ் அசாதாரண நிதானம் இழந்து விடவில்லை. "பதிவுப் பத்திரங்களை எரித்தால் எரித்துவிட்டுப் போகட்டும். அது நடவடிக்கை எடுக்கத் தக்க குற்றமாகாது. இந்தியர்கள் மேலே என்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டுச் சும்மா இருந்தார். சர்க்கார் சிறிது காலம் சும்மா இருந்தால் இந்தியர்களுடைய கிளர்ச்சி அடங்கிவிடும் என்பது அவருடைய எண்ணம்.

அதே சமயத்தில் புதிய இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் வருவதைத் தடுக்கும் வேறு ஒரு சட்டம் டிரான்ஸ்வால் சட்ட சபையில் கொண்டு வந்து நிறைவேற்றினார். இது பொதுப்படையாக டிரான்ஸ்வாலுக்குள் புது மனிதர்கள் வருவதைக் கட்டுப்படுத்தும் சட்டந்தான். ஆனால் போட்டிருந்த நிபந்தனைகள் காரியாம்சத்தில் இந்தியர்கள் வருவதை மட்டுமே தடுத்தன. உதாரணமாக, ஐரோப்பிய பாஷை ஏதாவது ஒன்று தெரிந்திராதவர் டிரான்ஸ்வாலுக்குள் வரக் கூடாது என்பது ஒரு நிபந்தனை.

காந்திஜியின் யோசனைப்படி மேற்படி புதிய குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டத்தையும் எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் செய்வது என்று இந்தியர்கள் தீர்மானித்தார்கள்.

"பார்த்தீர்களா, இந்தியர்களின் போக்கை? முதலிலே ஆசியாக்காரர் சட்டத்தை மட்டும் ஆட்சேபிப்பதாகச் சொன்னார்கள். இப்போது குடியேற்றத்தைக் கட்டுப்பாடு செய்யும் சட்டத்தையும் எதிர்த்துச் சத்தியாக்கிரஹம் செய்யப் போவதாகச் சொல்கிறார்கள். இந்தியர்கள் இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கப் பார்ப்பார்கள் என்பது இதிலிருந்தே தெரியவில்லையா?" என்று தளபதி ஸ்மட்ஸ் பிரசாரம் செய்தார்.

ஸ்மட்ஸின் பிரசாரத்துக்கு இந்தியர்கள் பயந்து விடவில்லை. "எங்களுடைய உரிமைகளைப் பறிக்கும் எந்தச் சட்டத்தையும் ஆட்சேபித்துச் சத்தியாக்கிரஹம் செய்ய எங்களுக்கு உரிமை உண்டு" என்று பதில் சொன்னார்கள்.

புதிய சட்டத்தை எதிர்த்து எப்படிச் சத்தியாக்கிரஹம் செய்வது என்னும் கேள்வி பிறந்தது. அதற்குக் காந்திஜி தக்க யோசனை கூறினார். நேட்டால் மாகாணத்திலிருந்து சில இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்றும் அதன் விளைவு என்ன ஆகிறது என்று பார்க்க வேண்டும் என்றும் கூறினார். நேட்டாலில் வசித்த ஸோராப்ஜி ஷாபூர்ஜி அதாஜேனியா என்னும் பார்ஸி இளைஞரை முதன்முதல் சத்தியாக்கிரஹம் செய்வதற்குக் காந்திஜி தேர்ந்தெடுத்தார்.

அவ்விதமே ஸோராப்ஜி தாம் டிரான்ஸ்வாலுக்குள் குறிப்பிட்ட தேதியில் பிரவேசிக்கப் போவதாக டிரான்ஸ்வால் சர்க்காருக்கு அறிவித்துவிட்டு அந்தத் தேதியில் ரயில் ஏறி வந்தார். டிரான்ஸ்வால் எல்லையிலேயே அவர் கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவ்விதம் நடைபெறவில்லை. "சட்டத்தைச் சோதிப்பதற்காக வருகிறேன்" என்று பகிரங்கமாகச் சொல்லிவிட்டு வருகிற மனிதனை என்ன செய்வது என்று குடியேற்றக் கட்டுப்பாடு அதிகாரிக்குத் தெரியவில்லை. ஆகையால் எல்லைப்புறத்தில் ஸோராப்ஜியைத் தடை செய்யாமல் விட்டுவிட்டார்.

ஜோஹன்னிஸ்பர்க்குக்கு ஸோராப்ஜி வந்ததும் அவரை இந்தியர்கள் உற்சாகமாக வரவேற்றார்கள். சில இந்திய இளைஞர்கள், "ஸ்மட்ஸ் சர்க்கார் தோல்வியடைந்து விட்டனர்; இனிமேல் அவர்கள் ராஜிக்கு வரவேண்டியதுதான்" என்றுகூட நினைத்தார்கள். ஆனால் சீக்கிரத்திலேயே தவர்கள் தங்கள் தவறை உணர்ந்தார்கள். ஸோராப்ஜியைப்போல் எத்தனையோ இளைஞர்கள்

இந்தியரின் உரிமைகளுக்காகத் தங்களைத் தியாகம் செய்யவேண்டியிருக்கும் என்று தெரிந்துகொண்டார்கள்.

ஜோகானிஸ்பர்க் போலீஸ் சூபரின்டெண்டுக்கு ஸோராப்ஜி தம் வரவைப் பற்றித் தெரிவித்தார். டிரான்ஸ்வாலிலேயே இருக்க உத்தேசித்திருப்பதாகவும் தமக்கு இங்கிலீஷ் பாஷை தெரியும் என்றும் தம்மைப் பரீட்சித்துக் கொள்ளலாம் என்றும் எழுதியிருந்தார். குறிப்பிட்ட தேதியில் கோர்ட்டில் வந்து ஆஜராகும்படி அவருக்கு ஸம்மன் வந்தது. கோர்ட்டில் விசாரணை ஆரம்பமானபோது, காந்திஜி ஸோராப்ஜியின் கட்சியில் ஆஜராகி எதிர்வழக்காடினார். சட்டப்படி ஸோராப்ஜி குற்றம் செய்யவில்லையென்றும் அவரை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்தினார். காந்திஜியின் வாதத்தை ஒப்புக்கொண்டு நீதிபதி ஸோராப்ஜியை விடுதலை செய்தார்.


ஆனால் மறுநாளே ஸோராப்ஜிக்கு இன்னொரு உத்தரவு வந்தது. ஏழு நாளைக்குள் ஸோராப்ஜி டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவில் கண்டிருந்தது. "நான் அப்படி வெளியேறப் போவதில்லை" என்று ஸோராப்ஜி உறுதியாகத் தெரிவித்தார். ஆகவே, அவர் மறுபடியும் கோர்ட்டுக்குப் போகவேண்டியதாயிற்று. இந்தத் தடவை மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவை மீறியதற்காக ஒரு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஸோராப்ஜி தண்டனையடைந்ததைத் தொடர்ந்து நேட்டாலிலிருந்து இன்னும் பல இந்தியப் பிரமுகர்கள் வரத் தொடங்கினார்கள். இவர்கள் நேட்டாலில் நிலையாகத் தங்கி வியாபாரம் முதலிய தொழில்களைச் செய்து வந்தவர்கள். ஆகவே டிரான்ஸ்வாலுக்கு வரவேண்டிய அவசியம் ஒன்றும் இவர்களுக்குக் கிடையாது. டிரான்ஸ்வாலுக்குள் வர இந்தியர்களுக்கு உரிமையுண்டு என்பதை ஸ்தாபிப்பதற்காகவே இவர்கள் வந்தார்கள். இப்படி வந்தவர்களில் சேத் தாவூத் முகம்மதுவும், பார்ஸி ருஸ்தம்ஜியும் பெரிய வியாபாரிகள். சுரேந்திர ராய், கண்டுபாய் தேஸாய், ரதன்ஸி மூல்ஜி, ஹரிலால் காந்தி ஆகியவர்கள் இன்னும் சிலர்.

இப்படிக் கூட்டமாக வந்தவர்களைச் சட்டத்தை மீறி டிரான்ஸ்வாலுக்குள் வரும்படி விட்டுவிட்டால் டிரான்ஸ்வால் சர்க்காரின் மதிப்பு என்ன ஆகிறது? எனவே அவர்களைக் கைது செய்து மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் கொண்டுவந்தார்கள். ஏழு நாளைக்குள் அவர்கள் டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டும் என்று மாஜிஸ்ட்ரேட் உத்தரவு போட்டார். அவர்கள் உத்தரவை மீறி டிரான்ஸ்வாலிலேயே இருந்தார்கள். பிரிட்டோரியாவில் அவர்களை மறுபடியும் போலீஸார் கைதுசெய்து விசாரணை ஒன்றுமில்லாமல் டிரான்ஸ்வாலுக்கு வெளியிலே கொண்டுபோய் விட்டார்கள். அப்படி விடப்பட்டவர்கள் இரண்டாவது தடவையும் டிரான்ஸ்வாலுக்குள்ளே பிரவேசித்தார்கள். இதன்பேரில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணை நடந்து, "ஐம்பது பவுன் அபராதம் அல்லது மூன்று மாதம் கடுங்காவல்" என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. சேத் தாவூத் முதலியவர்கள் அபராதம் கட்ட மறுத்துக் குதூகலத்துடன் சிறைக்குச் சென்றார்கள்.

இப்படி நேட்டால் இந்தியப் பிரமுகர்கள் டிரான்ஸ்வாலுக்குப் படையெடுத்து வந்து சத்தியாக்கிரஹம் செய்து சிறைக்குப் போய்க்கொண்டிருக்கும்போது டிரான்ஸ்வால் இந்தியர்கள் சும்மா இருக்க முடியுமா? சர்ட்டிபிகேட்டை எரித்து விட்டதற்காகச் சர்க்கார் அவர்களை ஒன்றும் செய்கிறதாகக் காணோம். எனவே, சிறை செல்லுவதற்கு வேறு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. சிலர் டிரான்ஸ்வாலிலிருந்து வெளியேறிச் சென்று மறுபடி டிரான்ஸ்வாலுக்குத் திரும்பி வந்தார்கள். இப்படித் திரும்பி வரும்போது சர்ட்டிபிகேட்டைக் காட்டியாகவேண்டும். எரிந்துபோன சர்ட்டிபிகேட் திரும்ப எப்படி வரும்? எனவே அவர்களைப் போலீஸார் கைது செய்தனர்.

சிறை புகுவதற்கு இன்னொரு வழியும் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியர்கள் பதிவுப் பத்திரத்தைக் காட்டினால்தான் வியாபார லைசென்ஸ் கிடைக்கும். வியாபார லைசென்ஸ் இல்லாமல் வியாபாரம் செய்வது சட்டப்படி குற்றமாகும். ஆகவே சில இந்தியர்கள் ஏற்கனவே வியாபாரிகளாயில்லாவிட்டாலும் சத்தியாக்கிரஹம் செய்து சிறை புகுவதற்காக ஏதாவது ஒரு சாமானை எடுத்துக்கொண்டு தெருவில் விற்பனை செய்தார்கள். அவர்களையும் கைது செய்து சிறைக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. இப்படிப் புதிதாகத் தெரு விற்பனை செய்து சிறை புகுந்தவர்களில் இமாம் சாஹிப் என்னும் முஸ்லிம் பெரியார் ஒருவர். ஜோசப் ராயப்பன் என்னும் பாரிஸ்டர் இன்னொருவர். பாரிஸ்டர் ராயப்பன் நிறையப் பணம் சம்பாதித்து ஆங்கில முறையில்



வாழ்க்கை நடத்தியவர். வீட்டுக்குள்ளே கூட பூட்ஸ் போட்டுக் கொண்டுதான் நடப்பார். அப்படிப்பட்டவர் ஒரு கூடையில் கறிகாய்களை நிரப்பிக்கொண்டு தெருவில் விற்பனை செய்யச் சென்று கைதியானார்!

இப்படியாக நேட்டால் இந்தியர்களும் டிரான்ஸ்வால் இந்தியர்களும் போட்டி போட்டுக்கொண்டு டிரான்ஸ்வால் சிறைகளை நிரப்பினார்கள். காந்திஜியும் கைதியானார். சில காலம் காந்திஜியை மற்ற இந்தியக் கைதிகளோடு சேர்த்து வைத்திருந்தார்கள். அப்புறம் அவரைத் தனியாய்ப் பிரித்து விடவேண்டும் என்று கருதிப் பிரிடோரியா சிறைக்குக் கொண்டு போய் அபாயகரமான கைதிகளுக்காக ஏற்பட்ட தனிக் கொட்டடியில் அடைத்து வைத்தார்கள்.

ஆயினும் சத்தியாக்கிரஹ இயக்கம் ஓய்ந்த வழியாயில்லை. எத்தனை இந்தியர்களைச் சிறைப்படுத்துவது? எத்தனை நாள் வைத்திருப்பது? இதற்குச் செலவு வேறு சர்க்காருக்கு ஆகிக்கொண்டிருந்தது. எனவே, இயக்கத்தை அடக்கச் சர்க்கார் வேறு வழி தேடத் தொடங்கினார்கள்.

முதலில் டிரான்ஸ்வால் மாகாணத்திலிருந்து வெளியே கொண்டுவிடும் முறையைச் சிலர் விஷயத்தில் கையாண்டார்கள் அல்லவா? டிரான்ஸ்வால் எல்லையைத் தாண்டி நேட்டால் அல்லது ஆரஞ்சு பிரீஸ்டேட்டில் விடப்பட்ட சத்தியாக்கிரஹிகளுக்கு அது ஒரு தமாஷாயிருந்தது. உடனே சட்டத்தை மீறி மறுபடி டிரான்ஸ்வாலுக்குள் அவர்கள் பிரவேசிப்பதற்கு வசதியாகவும் இருந்தது. இந்த மாதிரி இந்தியர்களை வெளியேற்றுவதில் பயனில்லையென்று கண்ட டிரான்ஸ்வால் சர்க்கார் சத்தியாக்கிரஹிகளை டர்பன் துறைமுகத்துக்குக் கொண்டுபோய் அங்கே கப்பலில் ஏற்றி இந்தியாவிலேயே கொண்டு விட்டுவிடுவது என்று தீர்மானித்தார்கள். இது மிகவும் கொடுமையான தண்டனையாகும். ஏனெனில், இப்படிக் கப்பல் ஏற்றப்பட்ட இந்தியர்களில் பலர் தென்னாப்பிரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்கள்; இந்தியாவை அவர்கள் பார்த்ததே இல்லை. அவர்களில் பலருக்குத் தென்னாப்பிரிக்காவில் கொஞ்சம் சொத்து இருந்தது; சிலருக்குக் கடை இருந்தது; வேறு சிலர் குடும்பஸ்தர்கள். கடன் பட்டிருந்தவர்களும் உண்டு. இப்படித் தென்னாப்பிரிக்காவிலேயே வேரூன்றியவர்களைத் திடீரென்று பிடித்துக் கப்பலில் ஏற்றி ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பால் கொண்டு போய்விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? அதோடு, கப்பல் பிரயாணத்தின் போது எத்தனையோ கஷ்டங்கள் காத்திருந்தன. அவர்கள் கையில் பணம் காசு இல்லை. கப்பல் அதிகாரிகள் கொடுத்த உணவைச் சாப்பிட்டுவிட்டுக் கப்பல் மேல் தட்டில் விழுந்து கிடக்க வேண்டும்.

இவ்விதம் முதல் கோஷ்டி இந்தியர்களைக் குறிப்பிட்ட கப்பலில் ஏற்றி அனுப்பு கிறார்கள் என்று தெரிய வந்ததும் காந்திஜி பெரிதும் கலக்கமடைந்தார். அவர்களுக்கு எந்தவிதத்தில் உதவி செய்வது என்று ஆலோசித்தார். பண உதவி செய்யலாம் என்பதற்குக் கையில் போதிய பணமும் இல்லை. அதோடு, பண உதவி செய்யும் வழக்கம் ஏற்பட்டுவிட்டால் இயக்கத்தின் தியாக சக்தி போய்விடும் என்றும் விரும்பத்தகாதவர்கள் இயக்கத்தில் வந்து சேர்ந்துவிடுவார்கள் என்றும் மகாத்மா எண்ணினார். கடைசியில், ஒரு யோசனை தோன்றியது. யாராவது ஒரு இந்தியப் பிரமுகரை அதே கப்பலில் அனுப்பி வைத்தால் தண்டனையின் பேரில் வெளியேற்றப் படுகிறவர்களுக்கு ஆறுதலாயிருக்கும். இந்தியாவில் போய் இறங்கியதும் அவர்களுக்கு அவசியமான உதவி கிடைப்பதற்கு அந்தப் பிரமுகர் ஏற்பாடு செய்யக் கூடுமல்லவா?

சத்தியாக்கிரஹப் போரின் முன்னணியில் நின்றவர்களில் ஒருவரான ஸ்ரீ பி. கே. நாயுடுவை அவ்வாறு கப்பல் துணையாக அனுப்பக் காந்திஜி விரும்பினார். உடனே ஸ்ரீ பி. கே. நாயுடுவைக் கூப்பிட்டு, "கப்ப

வெற்றிக் கட்டாயமாக அனுப்பப்படும் ஏழைச் சகோதரர்களோடு நீங்களும் இந்தியாவுக்குப் போக முடியுமா?" என்று கேட்டார்.

"பேஷாக முடியும்" என்றார் நாயுடு.

"கப்பல் இன்னும் சற்று நேரத்தில் புறப்படப் போகிறதே?"

"அதனால் என்ன? இந்த நிமிஷமே நான் புறப்படத் தயார்."

"இரண்டாவது உடுப்பு வேண்டாமா? வழியில் சாப்பாட்டுக்கு என்ன செய்வீர்?"

"நான் இப்போது அணிந்திருக்கும் உடுப்பே போதும். கப்பலில் எல்லாருக்கும் கொடுக்கும் சாப்பாட்டை நானும் சாப்பிட்டுக் கொள்கிறேன்."

டர்பனில் பார்ஸி ருஸ்டம்ஜி வீட்டில் மேற்படி சம்பாஷணை நடந்தது. காந்திஜி இரண்டாவது தடவை சிறை வாசத்தை முடித்து வெளிவந்த பிறகு, இந்தியர்களைக் கப்பலேற்றி அனுப்பப் போகிற விஷயம் தெரிந்து அதற்காகவே டர்பனுக்கு வந்திருந்தார். ஸ்ரீ பி. கே. நாயுடுவின் பதில் காந்திஜிக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளித்தது. உடனே கொஞ்சம் உடைகளும் கம்பளிப் போர்வைகளும் சம்பாதித்து ஸ்ரீ பி. கே. நாயுடுவிடம் கொடுத்தார்.

"இந்த ஏழைச் சகோதரர்களை உங்கள் வசத்தில் ஒப்புவித்திருக்கிறேன். முதலில் அவர்களுடைய சௌகரியங்களைக் கவனித்துவிட்டு அப்புறம் உங்களுடைய சௌகரியத்தைப் பார்க்க வேண்டும்!" என்று காந்திஜி சொல்லி அனுப்பினார். ஸ்ரீ பி. கே. நாயுடு மகாத்மாவின் வார்த்தையை அப்படியே நிறைவேற்றி வைத்தார்.

காலக்ஷேபம்

கூச்சல் எதற்கு?

அவர்:—ஸார், ஸார்!—அப்பப்பா! கொஞ்சம் பொறுங்கள்!

பல் டாக்டர்:—நான் உங்கள் பல்லை எடுக்க ஆரம்பிக்கவேயில்லையே! அதற்குள் ஏன் இப்படிப் பிரமாதமாகக் கூச்சல் போடுகிறீர்கள்?

அவர்:—அது சரிதான், ஸார்! நீங்கள் உங்களுடைய பூட்ஸ் காலால் என் காலை மிதித்துக்கொண்டிருக்கிறீர்களே, அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை!

★

தவறுதான்!

ஒரு பெரிய மனிதர் வீட்டுத் தோட்டத்தில் தேநீர் விருந்து உபசாரம் நடந்தது. அந்த விருந்தில் கலந்துகொண்ட ஒருவர் மேஜை மேல் வைத்திருந்த ஸ்பூன்களில் ஏழெட்டை எடுத்து அவசரம் அவசரமாகச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டார். அதை அந்தப் பெரிய மனிதர் பார்த்துக்கொண்டே வந்துவிட்டார்.

பெரிய மனிதர்:—என்ன அக்கிரமம் இது? இப்படிச் செய்வது தவறு என்று உமக்குத் தெரியவில்லையா?

அவர்:—தவறுதான்; சந்தேகம் இல்லை. இவைகளை யெல்லாம் வெள்ளி ஸ்பூன்களென்று தவறுதலாக நினைத்துவிட்டேன்!

கொஞ்சம் புதிது!

வந்தவர்:—உங்கள் கடையில் நல்ல பிஸ்கோத்து இருக்கிறதா?

கடைக்காரர்:—என்ன, அப்படிக் கேட்கிறீர்கள்? நானே எங்கள் பிஸ்கோத்தைப் பற்றிச் சொல்லக்கூடாது. எங்களிடம் நல்ல பிஸ்கோத்தைத் தவிர வேறு ரகமே கிடையாது. இதே ரக பிஸ்கோத்துகளைத் தான் நாங்கள் பல வருஷங்களாக விற்று வருகிறோம்.


வந்தவர்:—அத்தனை வருஷத்துப் பிஸ்கோத்து வேண்டாம்; கொஞ்சம் புதிதாக இருந்தால் கொடுங்கள்!

★

வித்தியாசம்

ரயில்வே ஸ்டேஷனிலிருந்த இரண்டு கடிகாரங்கள் ஒன்றுக்கொன்று பத்து நிமிஷம் வித்தியாசமாக மணி காட்டின. இதைக் கவனித்த ஒருவர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று, "அந்தக் கடிகாரங்களைப் பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டிவிட்டு, "வித்தியாசமாக மணி காட்டும் இந்த இரண்டு கடிகாரங்களையும் நீங்கள் வைத்திருப்பானேன்?" என்று கேட்டார்.

ஸ்டேஷன் மாஸ்டர்:—சரியான மணியைக் காட்ட இரண்டு கடிகாரம் எதற்கு, ஐயா?


டன்லப்
ஜுபிலி
1898 - 1948
50 வருஷ வளர்ச்சி
சென்ற காலத்தில் வழி காட்டியவர்கள்
வருங்காலத்தலைவர்கள்

வேலாயுதத்தின் வெற்றி

ஸோமாஸ்

"ஒரு எழுத்தாளர் தேவை. கீழ்க்கண்ட விலாசத்துக்கு நேரில் வந்து காணவும்."

இந்த விளம்பரத்தைக் கண்டதும் வேலாயுதம் விழுந்து அடித்துக்கொண்டு நேரே அந்த விலாசத்துக்குப் போய்ச் சேர்ந்தான். தன் மனுவை மானேஜருக்கு அனுப்பிவிட்டு, அவர் அறைக்கு வெளியே உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் மானேஜர் வேலாயுதத்தை உள்ளே வரும்படி அழைத்தார். வேலாயுதம் உள்ளே சென்று மிகவும் வணக்கத்துடன், "நமஸ்காரம்" என்று கைகூப்பினான். மானேஜர் பதிலுக்கு நாசூக்காகக் கைகூப்பினார்.

"உமக்கு இந்த வேலையில் முன் அநுபவம் உண்டா?" என்று மானேஜர் கேட்டதுதான் தாமதம், வேலாயுதம் தன்னுடைய கைப் பையிலிருந்து ஒரு கட்டுக் கையெழுத்துப் பிரதிகளை எடுத்து அவர் மேஜைமீது வைத்தான்.

மானேஜருக்கு ஒன்றும் புரியவில்லை என்பது அவர் முகத்தில் தோன்றிய திகைப்பிலிருந்து நன்றாய்த் தெரிந்தது.

"என்ன மிஸ்டர், முன் அநுபவம் உண்டா என்று கேட்டால் கையெழுத்துப் பிரதிகளை எடுத்து வைக்கிறீர்களே, என்ன அர்த்தம்?" என்று கேட்டுவிட்டு அவைகளைப் புரட்டிப் பார்த்தார்.

வேலாயுதம் மிகவும் வணக்கத்துடன், "அவ்வளவு கையெழுத்துப் பிரதிகளும் நான் எழுதினவைதான். மூன்று தொடர் கதைகளும் இருபது சிறு கதைகளும் பத்துக் கட்டுரைகளும் இருக்கின்றன. இவைகளில் எதுவும் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரம் ஆகவில்லை. அது என் பிழையல்ல; நான் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைத்தேன்; அவைகள் திரும்பி என்னிடமே வந்து விட்டன!" என்று இரக்கம் தொனிக்கும் குரலில் கூறினான்.



மானேஜர் குபீர் என்று சிரித்துவிட்டார். "மிஸ்டர் வேலாயுதம், என்னை மன்னிக்க வேண்டும். எங்கள் பள்ளிக்கூடத்துக்கு ஒரு ரைட்டர் வேண்டியிருக்கிறது. அதைத்தான் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தேன். தமிழ்ப்பத்திரிகையில் மொழி பெயர்த்து 'எழுத்தாளர்' என்று வெளியிட்டு விட்டார்கள். பாவம், நீங்கள் அதைப் பார்த்துவிட்டு உங்கள் கையெழுத்துப் பிரதிகளுடன் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்திருக்கிறீர்கள்!" என்று கூறி, அவர் வேலாயுதத்தை அநுதாபத்துடன் அனுப்பி வைத்தார்.

வேலாயுதத்துக்கும் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் அந்தச் சிரிப்புடன் வயிற்றெரிச்சலும் கலந்து வந்தது. அந்த வயிற்றெரிச்சல் தீர ஆத்திரத்துடன் இந்தக் கதையை வேலாயுதம் என்னிடம் சொன்னான்.

கதையைக் கேட்டதும் எனக்கும் சிரிப்புத்தான் வந்தது. ஆனால் அவன் எதிரில் சிரிக்கத் தைரியம் வரவில்லை.

"வேலாயுதம், நீ இதற்கெல்லாம் பின்வாங்குகிறவன் அல்லவே! முயற்சி திருவினையாக்கும் என்கிறபடி ஒருநாள் உன் முயற்சியில் நிச்சயம் வெற்றி பெறுவாய்!" என்று நான் அவனுடைய மனத் திருப்திக்காகச் சொல்லி மெதுவாக அவனைத் தட்டிக் கழித்தேன்.

*

வேலாயுதத்தை ரொம்ப நாட்களாக எனக்குத் தெரியும். அவன் எப்பொழுது பார்த்தாலும் கதை, கட்டுரை என்று ஏதாவது எழுதித் தள்ளிக் கொண்டேயிருப்பான். அவனுடைய எழுத்து மோகம் அவனை எந்த உத்தியோகத்துக்கும் போக முடியாமற் செய்து விட்டது.

ஒரு சமயம் வேலாயுதம் விடாப்பிடியாகப் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டிருந்தான். சதாகாலமும் பேனாவும் கையுமாக உட்கார்ந்து வேலாயுதம் விழுந்து விழுந்து எழுதிக்கொண்டிருப்பதைப் பார்க்க எனக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது.

"வேலாயுதம், ஏன் அப்பா இப்படி மூச்சைப் பிடித்துக் கொண்டு எழுதுகிறாய்? நானும் ஒரு வாரமாகப் பார்க்கிறேன். நீ ஓய்கிற வழியாகக் காணோமே! அப்படி என்னதான் எழுதுகிறாய்?" என்று கேட்டேன்.

அதற்கு வேலாயுதம், "ஒன்றுமில்லை, ஸார்! ஒரு மாபெரும் நாவல் எழுத வேண்டும் என்று தீர்மானித்து ஆரம்பித்திருக்கிறேன்!" என்றான்.

"அட, பாவமே! நீ ஏன் இவ்வளவு சிரமப்படுகிறாய்? இரண்டு ரூபாய்க் காசை வீசியெறிந்தால் வேண்டிய நாவல்களை வாங்கிக் கொள்ளலாமே!" என்றேன்.

வேலாயுதம், இதற்குப் பிறகு ஒரு வாரம் என்னோடு பேசாமல் இருந்தான். ஒருநாள் அவனை வழியில் சந்தித்து நானாக அவனுடன் வலியப் பேசி, 'நான் அன்று சொன்னது ஹாஸ்யத்துக்காக, அப்பா! அதைத் தவறாக நினைத்து விட்டாயே!' என்று கூறிச் சமாதானப் படுத்தினேன்.

★

அன்றையதினம் திருவல்லிக்கேணி கடற்கரைக்கு உலாவப் போயிருந்தேன். திடீரென்று என் கையைப் பிடித்து உலுக்கி, "ஸார்!" என்று யாரோ கூப்பிட்டது என் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன் — வேறு யாருமில்லை, வேலாயுதம்தான்!

"என்ன அப்பா, வேலாயுதம்! சௌக்யமா?"

"என்ன ஸார்! கை தட்டிக் கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பார்க்காமல் போகிறீர்களே!"

"நான் யாராவது கை தட்டினால் திரும்பிப் பார்ப்பதில்லை. யாருக்காகவோ ஒருவர் கை தட்டி அழைக்க, நாம் நம்மைத்தான் கூப்பிடுகிறார் என்று நினைத்துத் திரும்பிப் பார்த்து ஏமாந்து போக நேரிடுகிறது. கை தட்டலுக்கு மதிப்புக் கொடுப்பது என்றால் நம் சென்னையில் கட்டிவராது. கழுத்துத்தான் சுளுக்கிக் கொள்ளும்!" என்றேன்.

"நான் கை தட்டியதற்கு மதிப்புக் கொடுக்காவிட்டாலும் பக்கத்தில் வந்து பார்த்த பிறகாவது பேசுகிறீர்களே, அது போதும்!" என்றான் வேலாயுதம்.

"இல்லையப்பா! நீ பக்கத்தில் வந்துங் கூட உன்னை உடனே தெரிந்து கொள்ள முடியவில்லை. முக ஜாடையிலிருந்தும் குரலிலிருந்தும்தான் தெரிந்து கொண்டேன்!" என்று நான் சொன்னதும், வேலாயுதம் தன்னைத்தானே ஒரு முறை பார்த்துக் கொண்டு கொஞ்சமாகச் சிரித்தான்.

உண்மையிலேயே வேலாயுதம் முன்பு இருந்த மாதிரி ஒட்டி உலர்ந்து இருக்கவில்லை. வழ வழ என்று இருந்த அவன் திருமேனியில் ஒரு பிரகாசம் இருந்தது. கழுத்தில் நாதசுர வித்வான் மாதிரி ஒரு சின்ன நாகரிகச் சங்கிலி விளங்கியது.

"என்ன வேலாயுதம், உன்னைக் காண்பதே அரிதாகிவிட்டதே, என்ன சமாசாரம்?" என்று கேட்டேன்.

"ஓய்வே கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆனாலும் உங்களைப் பார்க்க வேண்டும் என்று நான் தினம் நினைக்காமலிருப்பதில்லை!"

"உன் எழுத்துப் பைத்தியம் என்ன வாயிற்று?"

"அதற்கு ஒரு ஆபத்தும் நேர்ந்துவிடவில்லை. வளர்பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து கொண்டே வருகிறது!"

"சரி, சந்தோஷம். நீ இப்போது என்ன செய்கிறாய்? ஏதாவது பத்திரிகை ஆபீஸில்..."

"இல்லை, இல்லை. அவர்களிடமெல்லாம் அலைந்து அவஸ்தைப்பட வேண்டிய அவசியம் எனக்கு இப்போது துளிக்கூட இல்லை. என் எழுத்துக்கு இணையற்ற மதிப்பு ஏற்பட்டு விட்டது. சொன்ன விலைக்கு அப்படியே சவரன்மாதிரி காசாகிறது. நான் எழுதுகோலை நாட்டி எதை எழுதினாலும் அதெல்லாம் அப்படி அப்படியே காசுதான்!"

இதைச் சொல்லும்போது வேலாயுதத்தின் குரலில் அலக்ஷ்யம் ரொம்ப வேகமாகத் தொனித்தது.

"நீ சொல்லுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே, அப்பா!" என்றேன்.

வேலாயுதம் சிரித்துக்கொண்டே, "இப்பொழுது உடனே உங்களுக்குப் புரிவது கொஞ்சம் கஷ்டம்தான். இந்தாருங்கள், இதில் என் விலாசம் இருக்கிறது. வரும் ஞாயிற்றுக்கிழமை என் வீட்டுக்கு வாருங்கள். விவரமாக எல்லாம் சொல்லுகிறேன். இப்பொழுது கொஞ்சம் அவசர காரியம் இருக்கிறது. நான் வருகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டுக் கைகூப்பிய வண்ணம் வேலாயுதம் என்னிடம் விடைபெற்றுக் கொண்டான்.

★

இரண்டு மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. வேலாயுதத்தை நான் பார்க்கவேயில்லை. அன்று மௌண்ட்ரோட்டுக்கு

சினிமாப் படம் பார்க்கப் போனேன். காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம் என்று நினைத்து ஹோட்டலுக்குள் நுழைந்தேன். டிபன் சாப்பிட்டுக் கையலம்பிய பிறகும் ஸர்வர் 'பில்' தரவில்லை. நானே அதை வாங்கிக் கொள்ளலாமென்று அந்த ஸர்வரைத் தேடிக்கொண்டே கொஞ்சம் உள்ளே போனேன். கூட்டமாகப் பல ஸர்வர்கள் சூழ்ந்து கொண்டு, 'இரண்டு பேர், ஆறணு!' 'ஒரு ஆள் காலணு!' என்று கத்திக்கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்துக்கு மத்தியில் ஒருவன் சின்ன மேஜை நாற்காலியுடன் இருந்து கொண்டு, அவசரம் அவசரமாக 'பில்' எழுதிக்கொடுத்துக் கொண்டிருந்தான். எனக்கோ இன்னும் 'பில்' வந்தபாடில்லை. நான் பேசாமல் நின்று கொண்டிருந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கிருந்த கூட்டம் கலைந்தது.

இந்தச் சமயத்தில், "வாருங்கள், ஸார்! காப்பி ஒன்றும் சாப்பிடவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே, அந்தக் கூட்டத்திலிருந்து வேலாயுதம் தோன்றினான்.

"என்ன அப்பா, வேலாயுதம்! ஹோட்டலுக்குள்ளேயிருந்து வருகிறாயே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"நான் இங்கேதான் வேலை பார்க்கிறேன்!" என்றான் வேலாயுதம்.

"என்னமோ எழுத்துத் தொழில் என்று சொன்னாயே!" என்று நான் வியப்புடன் கேட்டேன்.

"ஓகோ! உங்களைப்போல் கதையும் கட்டுரையும் பத்திரிகைக்கு எழுதினால் தான் எழுத்துத் தொழில் என்று அர்த்தமா, என்ன? நான் இந்த ஹோட்டலில் 'பில்' போடுகிறேன். நான் பத்தணு என்று 'பில்' எழுதினால் உடனே பத்தணு கிடைக்கிறதா, இல்லையா பாருங்கள்! என் எழுத்தை எங்கள் ஹோட்டலில் சாப்பிடுகிறவர் யாரும் நிராகரிக்க முடியாதல்லவா? குற்றங்குறை கூறுவதற்கோ, திருத்துவதற்கோ முடியாதல்லவா?" என்று உணர்ச்சி பொங்கக் கேட்டான் அவன்.

"ஆமாம் அப்பா, வேலாயுதம்! வாஸ்தவமாகவே நீ எழுத்தில் வெற்றி பெற்றுவிட்டாய். இதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை!" என்றேன் நான்.

அதற்குள், "ஒரு ஆள் பதினைந்தணு! நாலு பேர் இரண்டு ரூபாய்!" என்று பல திணுசுக் குரல்கள் மீண்டும் கேட்டன. வேலாயுதம் உட்கார்ந்து சளைக்காமல் எழுதிக் குவித்துக் கொண்டிருந்தான்!

காணாமாடு

ஸ்ரீவத்ஸஸி

"என்ன வேலு, புறப்படலாமா?" என்று கேட்டுக்கொண்டே, வேலுவின் வீட்டை அடைந்தேன். என்னமோ பிரமாதமாக நடந்து விட்டேன் என்று நினைக்க வேண்டாம்; நான் குடியிருந்த வீட்டுக்கு எதிரே யிருந்த ஒரு குடிசையில் தான் வசித்துக் கொண்டிருந்தான் வேலு.

"இதோ, வண்டியைப் பூட்டிடறேனுங்க; கொஞ்சம் இருங்க!" என்று கூறியபடி, மாட்டுக் கொட்டிலுக்குச் சென்றான் வேலு. நானும் அவனுடன் சென்று கொட்டிலையடைந்தேன்.

கொட்டிலில் எண்ணி இரண்டு மாடுகள் கட்டப்பட்டிருந்தன. அதில் ஒரே ஒரு மாட்டைத்தான் வேலு தினமும் வண்டியில் கட்டுவான். மற்றொரு மாடு கொட்டிலிலேயே இருக்கும்; சில சமயம் வெளியில் சென்று மேய்ந்துவிட்டு வரும். அந்த மாட்டை அப்படி வண்டியில் கட்டுவதென்றால், அன்று அவனும் அவன் மனைவியுந்தான் அதில் பிரயாணம் செய்வார்கள். இதை நான் அநேக தடவை பார்த்திருக்கிறேன்.

இன்று அதைப்பற்றி விசாரித்து விடுவது என்று தீர்மானித்து, "ஏனப்பா, வேலு! அந்தக் காளையை என் வண்டியிலேயே அதிகமாகக் கட்டமாட்டேன் என்கிறாய்? இன்று அதைத்தான் கட்டிக்கொண்டு வாயேன்!" என்றேன்.

"சாமி, சாமி! தண்டமுங்க! அந்தக் காளையை மட்டும் கட்டச் சொல்லாதீங்க! அதை நானும் என் பெண்சாதியும் வெளியே போறப்ப மட்டும் கட்டிக்கிட்டுப் போற வழக்கமுங்க!" என்றான்.

"அது என்ன அப்பா, அப்படி?" என்று கேட்டேன்.

"அது பெரிய கதைங்க! வாங்க, வண்டியிலே போறப்ப சொல்றேன்" என்று கூறிவிட்டு வண்டியைக் கட்டினான் வேலு.

கையில் சாட்டையுடன் வேலு வண்டியில் உட்கார்ந்தான். நானும் ஏறி உட்கார்ந்தேன். "ஹை! ஹை!" என்று மாட்டைத் தட்டிவிட்டபடி அவன் என் பக்கம் திரும்பினான்.

"என்ன, கதையைச் சொல்லட்டுங்களா? அதைச் சொல்றதன்னு எனக்கு வெட்கமாயிருக்குதுங்களே!" என்றான்.

"சும்மா சொல்லப்பா! இங்கே யார் இருக்கிறார்கள்? நாம் இரண்டு பேர்தானே?" என்றேன்.

"அப்படின்னா, சரிங்க!" என்றபடி அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

* * *

"மூணு வருசத்துக்கு முந்தி நான் இப்போ எப்படி இருக்கிறேனோ, அப்படியே தான் இருந்தேனுங்க. ஜோரா, வெள்ளை வேட்டி கட்டிக்கிட்டு, குங்குமப் பொட்டு இட்டுக்கிட்டா, அசல் ராஜா மாதிரி இருப்பேனுங்க! இப்பத்தானே இங்கே வந்து சேர்ந்துட்டேன்? அப்போ—அதான், சாமி! கதை நடக்கிறப்போதான்—எங்க ஊரிலே இருந்தேன். எந்த ஊருன்னு சொல்லலியே! கும்பகோணத்துக்குப் பக்கத்திலே இருக்குது சாமி, பறட்டைன்னு ஒரு ஊரு. அங்கேதான் இருந்தேனுங்க!"

"ஆமாம், ஆமாம். எனக்கும் அந்த ஊரைத் தெரியும்" என்று நான் இடைமறித்துச் சொன்னேன்.

"அங்கேதான் நானும் எங்க அப்பாரும் இருந்தோம். அப்போ எனக்குக் கண்ணாலம் ஆகவில்லைங்க. எங்கப்பாரு தொண்டு கிழம். அவராலே ஒண்ணும் செய்ய முடியாது; நான்தான் எல்லாம் செய்வேன். கஞ்சி காய்ச்சி வைத்தறது, குளிப்பாட்டி விடறது எல்லாம் நானேதானுங்க!" என்று கூறியபடி அவன் கண்ணைத் துடைத்துக் கொண்டான். அவன் தகப்பனார் இறந்து விட்டார் என்பதை அவனுடைய கண்ணீர் வெளிப்படுத்தியது.

சிறிது நேரம் கழித்து, "சொல்லட்டுங்களா, மேலே?" என்று கேட்டுவிட்டு, அவன் மீண்டும் கதையைத் தொடர்ந்தான்.

"அப்போ நான் ஒரு தோட்டம் போட்டிருந்தேனுங்க. அங்கே எல்லாக் கறிகாயும் பயிராகும். அந்தந்தக் காலத்திலே அதது போட்டுப் பயிராக்குவேன். அந்தக் கறிகாய்களை யெல்லாம் கூடையிலே போட்டுத் தூக்கிக்கிட்டு விடியற் காலையிலே கும்பகோணத்துக்குப் போயிடுவேனுங்க. அங்கே போய்க் குந்தினேன்னு கிசத்திலே சிட்டாய்ப் பறந்திடுங்க, நம்ம கறி

காய்களெல்லாம். ஐயமாருங்க எல்லாம் நம்மகிட்டேதான் கறிகாய் வாங்க வருவாங்க. எல்லாத்தையும் வித்துப்புட்டு, ஒம்பது பத்து மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்திடுவேன். வந்தப்புறம் அப்பாருக்குக் கஞ்சி காய்ச்சி வைத்திப்பிட்டு, நானும் குடிச்சிப்பிட்டு, பாக்கிக் காரியம் எதையாச்சும் பார்க்கப் போயிடுவேன். அப்பாரும் தூங்கிடுவாரு......!"

"...டிர்ர்ர் ... நீயும் கதை கேட்கிறியோ! ஐயர் அவசரமாப் போவணுமில்லே, ஒடு கழுதை!" என்றபடி மாட்டை இடையில் கொஞ்சம் விரட்ட ஆரம்பித்தான் வேலு.

நான் பேசாமல் அவன் சொல்லும் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"அப்புறம் தொடங்கட்டுங்களா? ஒரு நாள் நான் கறிகாய்க் கூடையைத் தூக்கிக்கிட்டுக் கும்பகோணம் போறப்ப, கொஞ்சம் நேரமாயிடுச்சு. வழியிலே ஒரு பயலோடு பேசிக்கிட்டே நின்னுட்டேன். அங்கே போய்ப் பார்த்தா — ஒரு சின்னப் பொண்ணுங்க, பதினஞ்சு வயசு இருக்கும், எல்லாக் கறிகாயையும் அதுக்குள்ளே வித்துப்புட்டுக் காசை எண்ணிக்கிட்டு இருந்திச்சு. நான் பாட்டுக்குக் கோணியை விரிச்சுப் போட்டுக் கறிகாயைக் கொட்டினேன். 'கலகல'ன்னு சிரிச்சுது அந்தப் பொண்ணு. நான் திரும்பிப் பார்த்தேன். 'மார்க்கெட்டுக்குக் கறிகாய் கொண்டார நேரத்தைப் பாரு! நல்லாத் தூங்கிட்டாரு போலிருக்கு!'ன்னு அந்தப் பொண்ணு சொல்லிச்சு. அதுக்கு எம்புட்டுத் துடுக்குப் பார்த்தீங்களா? எனக்குக் கோவம் கோவமா வந்திச்சு. 'ஏ, பொம்பளே! ஒன் வேலையைப் பாத்துக்கிட்டுப் போயேன்! ஒனக்கு வேறே வேலையில்லே!' என்றேன்.

'கோவத்தைப் பாரு, கோவத்தை!' என்று சொல்லிக்கிட்டே அந்தப் பொண்ணு போயிடுச்சு. அன்று எனக்குப் பத்து ரூவா வரை நஷ்டமுங்க. வெகு நேரம் குந்தி யிருந்து பார்த்தேன். வெய்யிலோ ஏறிக்கிட்டே இருந்திச்சு. எல்லாத்தையும் திரும்பக் கூடையிலே கொட்டிக்கிட்டு வீட்டைப் பார்த்து நடையைக் கட்டிவிட்டேனுங்க!

"மறுநாள் காலை மணி மூணுக்கே எழுந்திருச்சு, எல்லாக் கறிகாயையும் எடுத்துக்கிட்டு மார்க்கெட்டுக்கு வந்தேன். வரப்ப, 'பலபல'ன்னு பொழுது விடியற சமயமுங்க. அங்கே போய்ப் பார்க்கிறப்ப, அந்தப் பொண்ணு எனக்கு முன்னாடியே வந்து கறிகாயையெல்லாம் கொட்டிக்கிட்டுக் குந்தியிருக்கிச்சுங்க! எனக்குக் கோவம் பொத்துக்கிட்டு வந்துச்சு. இருந்தாலும் அதை வெளியே காட்டிக்காம என் பாட்டுக்கு நான் கோணியை விரிச்சுக் கறிகாயைக் கொட்டினேனுங்க!"


'நேத்து நேரமாயிடுச்சேன்னு இன்னைக்குச் சீக்கிரமா வந்துட்டாப்பலே இருக்கு!' என்று அந்தப் பொண்ணு சொல்லிச்சு. 'ஆமாம், அப்படித்தான்' என்றேன் எரிச்சலுடன். இப்படிச் சொல்றப்போ, நான் அவ மூஞ்சியைப் பார்த்தேனுங்க. லக்ஷ்மி மாதிரி களையா யிருந்திச்சு. குங்குமப் பொட்டு வைச்சுக்கிட்டு ஜோரா இருந்துச்சு. இதெல்லாம் என் மனசை என்னமோ பண்ணிடிச்சிங்க. இருந்தாலும் அதுமேலே எனக்கு அப்போ கோவந்தானுங்க!

"அப்புறம். அங்கே வந்த ஐயமாருங்களெல்லாம் நேரே அவகிட்டயே போய்க் கறிகாய் வாங்கிக்கிட்டுப் போயிட்டாங்க. எனக்குத் துக்கம் துக்கமா வந்திச்சு. நடுவிலே அந்தப் பொண்ணு 'ஒரு ரூவாய்க்குச் சில்லறை இருந்தால் கொடேன்' என்று கேட்டுச்சு. எனக்குக் கோவந் தாங்கல்லே, என் கறிகாய் அப்படியே இருக்குதுன்னு தெரிஞ்சப்புறம் கூட என்னைக் கிண்டலுக்குத்தானே கேட்குதுன்னு நினைச்சேன். அதனாலே 'என்கிட்டே சில்லறையுமில்லே, ஒண்ணுமில்லே' என்று எரிஞ்சு விழுந்தேன்.


'ஓ! கறிகாய் ஒண்ணும் விக்கல்லையேன்னு கோவமா?' என்று அந்தப் பொண்ணு கேட்டுச்சு.

"எனக்கு வெட்கந் தாங்கவில்லே. 'அதெல்லாம் ஒண்ணுமில்லே' என்று சொன்னேன்.

"இப்படி ஒரு மாசம் கழிஞ்சுது. தினம் அதுவும் வரும், நானும் போவேன்.



வியாபாரமும் சுமாரா ஆச்சுங்க. ஏதோ கிடைச்ச மட்டும் லாபம்னு நான்பாட்டுக்கு வந்துடுவேன். ஆனா, அந்தப் பொண்ணு மட்டும் எதுனாச்சும் கேட்டுக்கிட்டே இருக்கும். நான்



அதிகமா முகம் கொடுத்து அதுக்கிட்ட பேசறதில்லே. ஒரு நாள் விடியக் காலையிலே நான் போயிட்டேனுங்க. அதுவும் குந்தி யிருந்திச்சு. வேறே ஒருத்தரும் வரவில்லே. இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்துக்கிட்டு, 'ஏன், என் மேலே எப்பொவும் எரிஞ்சு விழுந்துக்கிட்டே இருக்கிறே?' என்று அது கேட்டுச்சு.

'ஒன்மேலே நான் ஏன் எரிஞ்சு விழணும்? நான்பாட்டுக்கு என் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போறேன்' என்றேன்.

'நீ இப்படியெல்லாம் இருந்தேன்னா, நான் இனிமே கறிகாய் விக்கவே வரமாட்டேன். ஒன்னை நிதம் பார்க்கலாம், ஒன்னோடே பேசலாம்னுதானே நான் இங்கே வரேன்' என்று அந்தப் பொண்ணு சொல்லிச்சு.

"அது சொல்றதுக்குள்ளே அவ மூஞ்சி ரத்தம் மாதிரி செவந்து போச்சு, சாமி! முதல்லே அவமேலே கோவமா யிருந்தாலும், அவ அழகான மூஞ்சி என் கோவத்தை யெல்லாம் தீர்த்துப்பிடுச்சுங்க. கரும்பு தின்னக் கூலியா? எனக்கு ஒரே சந்தோசமாய்ப் போயிடிச்சு. அந்தச் சந்தோசத்திலே அன்னைக்குக் கொஞ்சம் நஷ்டங் கூடங்க! நாலணா, எட்டணா கொடுத்தவங்களுக்கு மிச்சம் எம்புட்டுத் தாணுமோ, அதுக்கு மேலேயே கொடுத்துட்டேனுங்க. என்னங்க, போனா போயிட்டுப் போகட்டுங்களே!—முருவு இல்லே—அதுதான் சாமி, அவ பேரு!—எனக்கு அவ கிடைக்கப் போறது இல்லே!

"மறுநாள் வழக்கம்போலக் கறிகாய் வித்துக்கிட்டு இருந்தப்போ முருவு என் பக்கம் திரும்பி, 'கறிகாய் வித்தப்புறம் நேரே வீட்டுக்குப் போயிடாதே!' என்று சொல்லிச்சு. 'சரி'ன்னு சொல்லிப்பிட்டு நான் பாட்டுக்குக் கறிகாய் வித்துக்கிட்டு இருந்தேன். மணி பத்து இருக்கும். கறிகாயெல்லாம் வித்திடுச்சு. எல்லாரும மூட்டை கட்டிக்கிட்டு வீட்டுக்குப் போய்விட்டாங்க. நானும் முருவுவுந்தான் பாக்கி.

"முருவு முகத்திலே அன்னைக்கு என்னமோ ஒரு ஏக்கம் இருந்திச்சு. 'என்ன விசேஷம்?' என்று கேட்டேன் 'எங்கப்பாரு என்னை யாரோ ஒருத்தனுக்குக் கட்டிக் கொடுக்கப் போறாராம். நாளைக்கு அவன் பரிசப்போட வரப்போறானும். என்ன பண்றது?' என்று சொல்லி அது அழுதுச்சு. எனக்கு ஒன்னுமே தோணவில்லேங்க. முருவு நமக்குத்தான் சொந்தம்னு கட்டின மனக் கோட்டை யெல்லாம் நிமிசத்திலே இடிஞ்சு போச்சுங்க. இருந்தாலும் விட்டுக் கொடுக்காமே, 'நான் உங்கப்பாருகிட்டே கேட்டுக்கிறேன்'னு சொல்லிப்பிட்டு வீட்டுக்குப் போய்விட்டேன்.

"மத்தியானம் மணி மூணு இருக்குங்க. வீட்டை விட்டுக் கிளம்பினேன். நேரே முருவு வீட்டுக்குப் போனேன். திண்ணையிலே குந்திக்கிட்டு வெத்திலை போட்டுக்கிட்டு இருந்தாரு அவ அப்பாரு. அவரு, 'நீ யாரப்பா? என்ன வேணும்?' என்று கேட்டாரு. 'ஒன்னுமில்லேங்க'ன்னு மென்னு விழுங்கினேன். 'பயப்படாதே, அப்பா! சொல்லு!'ன்னாரு. நானும் ஒரு மாதிரியா விசயத்தைச் சொன்னேனுங்க. அதுக்கு அவர், 'நான் என்னப்பா பண்றது? மொட்டைக்கு—அதுதாங்க, முருவுக்கு வரவிருந்த புருசன்—வாக்குக் கொடுத்துட்டேனே!' என்று கையை விரிச்சாரு. நான் பேசாம இருந்தேன். அப்புறம், 'சரி, நீயும் மொட்டையும் எதுனாச்சும் போட்டி போடுங்க. அதிலே யாரு ஜயிக்கிறானோ, அவனுக்கு முருவைக் கொடுத்துடறேன். ஆனா மொட்டை என்ன பந்தயம் போடறானோ, அதைத்தான் நீ ஏத்துக்கணும்' என்று சொன்னாரு. 'உசிரைக் கொடுத்தாச்சும் பந்தயத்திலே ஜயிச்சுடலாம்'னு 'சரி'ன்னு சொல்லிப்பிட்டேன்.

"மறுநாள் மொட்டை கிட்டே அவர் இதைச் சொன்னாராம். முதல்லே அவன் ரொம்ப இடக்கு பண்ணினானும். ஆனா அவன் இஷ்டப்படி பந்தயம் போடலாம்னு சொன்னப்புறம் 'சரி'ன்னானாம். கொஞ்ச நேரம் யோசனை பண்ணிப்பிட்டு, அவன் ரேக்ளா வண்டிப் போட்டி விடறதுன்னு அவருகிட்டே சொன்னானாம்."

இந்த இடத்தில், "ஹை! ஹை! க்க! க்க! ஓடு கண்ணு, ஐயருக்கு நேரமாச்சு!" என்று வேலு மாட்டை மீண்டும் 'விரட்டு விரட்டு' என்று விரட்ட ஆரம்பித்தான்.

"கொஞ்சம் மெதுவாகத்தான் போகட்டுமே!" என்றேன், நான் கதை கேட்கும் சுவாரஸ்யத்தில்.

"அப்படின்னு சரி, சாமி!" என்று சொல்லிவிட்டு, அவன் கதையை மேலே தொடர்ந்தான்.

"ரேக்ளா வண்டிப் போட்டி போடறதுன்னு தீர்மானம் ஆச்சுங்களா?—நான் என்னத்தைப் பண்ண? அப்பவெல்லாம் எனக்கு வண்டி நடட்டவே தெரியாது. மொட்டையோ, வண்டி ஓட்டறதிலே கொம்பனுங்க. அதென்னவோ நாம் ஜெயிக்கமாட்டோம்னு எனக்குத் தோணிப் போச்சு! ஆனா முருவு மட்டும் ஒரே திடமா யிருந்திச்சு. எங்க பக்கத்து வீட்டுக்காரன் ஒரு காளைக் கன்று வச்சிருந்தான். அதை வாங்கி ஒரு ரேக்ளாவிலே கட்டிக் கொஞ்சம் பழக்கிக்கிட்டேனுங்க.

"சித்திரை மாசம். ஒருநாள் நான், முருவு, மொட்டை, முருவோட அப்பாரு எல்லோரும் ஒரு மைதானத்துக்குப் போனோமுங்க. ஏதோ ரேக்ளாப் போட்டி நடக்கப் போவுதுன்னு கொஞ்சம் கும்பலும் அங்கே கூடிப்போச்சுங்க.

"ஒரு மைல் ஓடிட்டுத் திரும்பிடணும்னு பேச்சு. நானும் சாமியை மனசுலே தொழுதுகிட்டே ரேக்ளாவிலே ஏறிக் குந்திக்கிட்டேன். இரண்டு ரேக்ளாவும் கிளம்பிச்சு. முருவு என் பக்கம்; அவ அப்பாரு மனசுக்குள்ளே என் பக்கம்னாலும், ஒரு பக்கமும் சேராமல் இருந்தாரு.

"விளாசின விளாசல்லே, அவனுடைய காளை கிளம்பிடுச்சு. என் காளை கொஞ்சம் பின் தங்கிப் போச்சுங்க. என்ன செய்யறது? மனசுலே ஒரே துக்கம். நான் போய்த் திரும்பறதுக்குள்ளே, மொட்டை அவன் காளையைத் திருப்பி விட்டான். நானும் போய்த் திருப்பினேனுங்க. திருப்பினது தான் தாமசம், சாமி! எக்கேருந்துதான் ரோசம் வந்திச்சோ தெரியல்லே, என் காளை நாலு கால் பாய்ச்சல்லே கிளம்பிடுச்சுங்க. உள்ளுற சந்தோசத்தான் எனக்கு, எங்கேயாவது உருட்டித் தள்ளிப்பிடுமோன்னு! இருந்தாலும் மூக்கணாங்கயிறை ஜாக்கிரதையாப் பிடிச்சுக்கிட்டுக் 'ஜம்' முன்னு குந்தியிருந்தேன்.

"மொட்டை அவன் காளையை 'விளாசு விளாசு'ன்னு விளாசிப்பிட்டான். 'என்ன விளாசி என்னங்க? என் காளை எப்படியோ முந்தி வந்து சேர்ந்திடுச்சுங்க!

"உடனே முருவு, எல்லாரும் இருக்கிறாங்க என்கிறதையும் மறந்து என்னை அப்படியே கட்டிக்கிட்டா!—அப்புறம் என்னங்க, முருவு எனக்குச் சொந்தமாயிட்டா! கண்ணாலம் ஆன அப்புறந்தான் நான் இந்த ஊருக்கு வந்து வண்டி ஓட்ட ஆரம்பிச்சுட்டேனுங்க. எனக்கு முருவுவைக் கொடுத்த காளைமாடு தானுங்க எங்க வீட்டுக் கொட்டில்லே கட்டியிருந்தது! நானும் முருவும் சோறு இல்லாம இருந்தாலும் இருப்போம், அந்தக் காளைக்குத் தீனி வைக்காம இருக்க மாட்டோம். எங்க சந்தோசத்துக்குக் காரணமாயிருந்த காளை அதுதானுங்களே!" என்று தன் கதையைச் சொல்லி முடித்தான் வேலு.

* * *

கதை கேட்கும் சுவாரஸ்யத்தில் இருந்த நான், அப்பொழுதுதான் ஆபீஸுக்கு நேரமாகி விட்டதை உணர்ந்தேன். அவ்வளவு தான்; "ஐயையோ! வேலு, நேரமாகிவிட்டதடா! துரை எரிந்து விழுவாரே! தட்டி ஓட்டுடா, மாட்டை!" என்றேன்.

"சரி, சாமி!" என்று அவனும் மாட்டை விரட்ட ஆரம்பித்தான்.

இடமில்லை!



மனைவி:—விருந்து சாப்பிட்டுவிட்டு வந்து இப்படித் திணறுகிறீர்களே, ஜீரணத்துக்கு இந்த மாத்திரையை வேண்டுமானால் சாப்பிடுகிறீர்களா?

கணவன்:—சரியாய்ப் போச்சு, போ! அந்த மாத்திரைக்கு உள்ளே இடம் இருந்தால் இன்னும் கொஞ்சம் பாதம்கீர் சாப்பிட்டு இருப்பேனே!



நாய் சொன்ன கதை

மாலு

குமார் அன்று பள்ளிக்கூடம் போகவில்லை. வெளியில் எங்கேயாவது உலாவப் போய்விட்டு வரலாம் என்று நினைத்துத் தன் தங்கை பேபியை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். அவர்கள் பின்னோடேயே ஒரு கறுப்பு நாய் ஓடி வந்தது. பேபிக்கு எப்போதுமே கறுப்பு நிறத்தைக் கண்டால் பிடிக்காது. ஆகவே, வழியில் கிடந்த கல்லை எடுத்து அவன் அந்த நாயின் மேல் விட்டெறிந்தான். உடனே அந்த நாய், "என்னை அடிக்காமல் இருந்தால் நான் உனக்கு ஒரு கதை சொல்லுகிறேன்" என்று மனிதனைப் போலப் பேசிற்று. இதைக் கேட்டதும் பேபிக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. அந்த நாயைத் தொட்டுத் தடவிக்கொடுத்து, "எங்கே உன் கதையைச் சொல்லு!" என்று ஆவலோடு கேட்டான் குழந்தை பேபி.

"நான் சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது. நீ ஏதாவது சாப்பிடக் கொடுத்தால்தான் என்னால் கதை சொல்ல முடியும்" என்றது நாய்.

உடனே குமார் பக்கத்திலிருந்த கடைக்குப் போய்த் தன் கையிலிருந்து ஓர் அணுவுக்குப் பிஸ்கோத்து வாங்கிக் கொண்டு வந்து நாய்க்குக் கொடுத்தான். அதைத் தின்றுவிட்டு நாய் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

• • •

ஓர் ஊரில் ஒரு ராஜாவும் ராணியும் இருந்தார்கள். அவர்கள் என்னை அன்போடு வளர்த்து வந்தார்கள். ராஜா எங்கே போனாலும் நான் அவரைப் பின்தொடர்ந்து என் வாலை ஆட்டிக்கொண்டே போவேன். என்னைத் தன்னுடைய குமாரன் போலவே அன்போடு வளர்த்து வந்தார் ராஜா. ஆனால் அந்த ராஜா எனக்கு மட்டுந்தான் நல்லவர்; அந்த ஊர் ஜனங்களுக்கெல்லாம் ராஜாவைக் கண்டால் பிடிக்காது. அவர்கள் ஒரே ரகளை செய்தார்கள். "நமது நாட்டை நாம்தான் ஆளவேண்டும்; ராஜாவே கூடாது. ராஜாவும் நம்மைப்போல மனிதன் தானே!" என்று கூட்டம் போட்டுப் பேசி, ராஜாவின் மேல் சண்டைக்குக் கிளம்பிக் கலகம் செய்தார்கள். ராஜா இதற்கெல்லாம் பயப்படவே இல்லை. தன்னிடம் இருந்த சிப்பாய்களை வைத்துக்கொண்டு ஜனங்களை அடித்து இம்சித்துக் கலகத்தை அடக்கி விட்டார். கலகந்தான் அடங்கிற்றே ஒழிய ராஜாவைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் ஜனங்களிடமிருந்து மறைந்து விட்டது. ராஜா ஒரேயடியாகக் கவலைப் பட்டுக்கொண்டு இருந்தார்.

இந்தச் சமயத்தில் சன்னியாசி ஒருவர் அரண்மனைக்கு வந்தார். ராஜாவும் ராணியும் அவர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தார்கள். அப்பொழுது சந்நியாசி, "உங்களுக்கு என்ன வேண்டுமோ, அதைக் கேளுங்கள்" என்று சொன்னார்.

"எனக்குப் பிள்ளையே கிடையாது. இந்த நாயைத்தான் என் மகனைப் போல வளர்த்து வருகிறேன். எனக்கு ஒரு குழந்தை பிறக்க அருள் செய்ய வேண்டும்" என்று கேட்டார் ராஜா.

நான் அந்தச் சன்னியாசியின் காலில் விழுந்தேன். உடனே சன்னியாசி தம் கையில் வைத்திருந்த கமண்டலத்திலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து என் தலையில் தெளித்தார். உடனே நான் ஓர் அழகிய ராஜகுமாரனாக மாறிவிட்டேன். ராஜாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அப்படியே என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு, "உமக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறேன்!" என்றார் சன்னியாசியிடம்.

"ராஜாவே! எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனைப் பார்த்தால்

ராஜகுமாரியைப் போலவே இருக்கிறாள். தங்களுடைய குமாரனுக்கு அவளைக் கலியாணம் செய்து வைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார் அந்தச் சந்நியாசி.

ராஜாவும் "ஆகட்டும்" என்று சொன்னார். மறுநாளே எனக்கும் அந்தச் சன்னியாசியின் மகளுக்கும் கலியாணம் நடந்தது. கலியாணம் நடந்த சில நாட்களுக்கெல்லாம் ராஜாவும் ராணியும் இறந்துவிட்டனர். நான் துக்கத்தில் ஆழ்ந்திருந்த சமயம் சன்னியாசி அரண்மனைக்கு வந்தார். நானும் என் மனைவியும் சன்னியாசியை வணங்கி எங்களை ஆசிர்வதிக்கும்படி கேட்டுக் கொண்டோம். பிறகு "உங்களுக்கு எங்களால் ஆக வேண்டியது ஏதாவது இருந்தால்சொல்லுங்கள்" என்றும் கேட்டோம்.

"நீங்கள் ராஜா ராணியாக வாழ்ந்தது போதும். உங்கள் ராஜ்யத்தை ஜனங்களிடம் கொடுத்து அவர்களையே ஆளும்படி செய்து விட்டு என்னோடு வந்துவிடுங்கள்!" என்று சொன்னார்.

எனக்கு ராஜ்யத்தையும் ராஜ போகத்தையும் விட மனமில்லை. ஆகவே, அந்தச் சன்னியாசியின்மீது பிரமாதமான கோபம் வந்துவிட்டது. உடனே அவரை என்னுடைய சேவகர்களை விட்டு அரண்மனைக்கு வெளியே கொண்டுபோய் விட்டுவிட ஏற்பாடு செய்யலாம் என்று நினைத்தேன். அவ்வளவுதான்; என் அருமை மனைவியான ராஜகுமாரி 'வள், வள்' என்று குரைத்துக் கொண்டே என் காலைச் சுற்றிச் சுற்றி வந்தாள்.

அதைப் பார்த்தபோது என்னை மீறிய ஆவேசத்துடன் சன்னியாசியை கொன்று விடலாமா என்று நினைத்து, என் இடையிலிருந்த வாளில் கையை வைத்தேன். அடுத்த வினாடி நானும் நாயாக மாறி விட்டேன். அந்தப் பாழும் சன்னியாசி என் ராஜ்யத்தை ஜனங்களிடம் கொடுத்து, "நீங்களே உங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரைத் தலைவராக வைத்துக் கொண்டு ஆளுங்கள். ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை மறுபடியும் வேறு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஒரு குறைவும் இல்லாமல் வாழுங்கள். இனி நீங்கள் எல்லாரும் இந்நாட்டு மன்னர்!" என்றார். பிறகு எங்களைப் பார்த்து, "நீங்கள் என்ன இருந்தாலும் நாய்கள்தானே? உங்கள் ஜாதிப் புத்தியைக் காண்பித்துவிட்டீர்கள்!" என்று திட்டி, அடித்துத் துரத்த தம் கையில் வைத்திருந்த தடியை எடுத்தார்.

நான் அழுது கொண்டே, "ஐயா! நான் செய்ததை மன்னித்து விடுங்கள். எனக்கு ராஜ்யமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். என்னை மனிதனாக மாற்றுங்கள், போதும்!" என்று கெஞ்சிக் கேட்டு அவர் காலில் விழுந்தேன். அவர், "நீ உன் கதையை யாரிடமாவது சொல்லு. யார் அதைப் பொறுமையுடன் கேட்கிறார்களோ, அவர்களை விட்டு உன் தலையில் மூன்று தரம் குட்டச் சொல்லு. நீ உடனே மனிதனாக மாறிவிடுவாய்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

"நானும் யாராவது என் கதையைக் கேட்கிறார்களா என்று பத்து வருஷமாகப் பார்க்கிறேன். ஒருவராவது இந்த நாயை மதித்து என் கதையைக் கேட்கவில்லை. நீங்கள்தான் கேட்டீர்கள். தயவு செய்து உங்கள் கையினால் என் தலையில் மூன்று தரம் குட்டுங்கள்" என்று அந்தக் கறுப்பு நாய் கெஞ்சிக் கேட்டது.

குமார் தன் கையை மடக்கிக் கொண்டு அந்தக் கறுப்பு நாயின் தலையில் மூன்று தரம் குட்டினான். அடுத்த நிமிஷம், படுக்கையில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த பேபி, "அம்மா, அம்மா! குமார் என்னைக் குட்டுகிறான், அம்மா!" என்று அலறி அடித்துக் கொண்டு எழுந்தாள். அவள் அருகில் படுத்திருந்த குமார் திடுக்கிட்டு எழுந்து, "அடாடா! பேபியா? நாயாக்கும் என்று குட்டி விட்டேன்!" என்று சொல்லி, கனவில் கறுப்பு நாய் சொன்ன கதையை அவளிடம் சொன்னான்.





குளிர்காலம்

கிழவி கணப்பில் தன் கைகளை சூடுசெய்து கொள்ளுகிறாள். இலைகள் உதிர்ந்த மரக்கிளைகள் மூலமாக குளிர் காற்று வீசுகிறது. வளைந்து செல்லும் மணல் சாலையின்மீது மாட்டு வண்டி மெதுவாகச் செல்கிறது. வண்டிக்காரன் பல்கிட்டும் குளிருக்கஞ்சி போர்வையை இழுத்துப் போர்த்திக்கொள்ளுகிறான். சாலையின் மீதும், குடிசையிலும், வயல்களிலும், மரத்தடியிலும் உள்ள ஒவ்வொருவரும் டீ யின் சுகத்தையும் சூட்டையும் எதிர்நோக்கி நிற்கிறார்கள். டீ யைப்போல மலிவாக, சுலபமாக எங்கும் கிடைக்கக்கூடியதும் திருப்தியளிக்கக்கூடியதுமான பானம் வேறொன்றுமே இல்லை

டீ

எல்லோருக்கும் டீ அருந்தும் நேரமே.

கல்விப் பஞ்சம் தீருமா?

— ரஜனி —

கொழும்பு, நவம்பர், 28உ

இலங்கைக்கு ஒரே ஒரு சர்வகலாசாலைதான் இருக்கிறது. அதனால் நாட்டின் உயர்தரக் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. பிரதி வருஷமும் ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள் இந்தியக் கலாசாலைகளில் இடம் தேடிக் கொண்டு போகின்றனர். அப்படிப் போகிறவர்களில் நான்கிலொரு பங்குப் பேர்களுக்குக் கூட அங்கு இடம் கிடைப்பதில்லை. இந்திய ஹைஸ்கூல்களில் பாஸ் செய்தவர்களுக்கே இடம் தர முடியாமல் காலேஜ் பிரின்ஸிபால்கள் விழி பிதுங்கும்போது இலங்கை மாணவர்களுக்கு எங்கே இடம் கிடைக்கப் போகிறது? சிதம்பரம் அண்ணாமலை சர்வ கலாசாலையில் நூற்றுக்கணக்கான இலங்கை மாணவர்களுக்கு இடமளித்து வந்தார்கள். இவ்வருடம் அங்கும் ஒரு புதிய கொள்கை அமுலுக்கு வந்திருக்கிறதாம். தமிழ் நாட்டவர்களுக்கு இடம் கொடுத்த பிறகு பாக்கி இடமிருந்தால்தான் மற்றவர்களுக்கு என்ற கொள்கையை அண்ணாமலை சர்வகலாசாலையும் அனுஷ்டிக்க ஆரம்பித்து விட்டதால் இலங்கை மாணவர்களின் நிலைமை திண்டாட்டமாகி விட்டது.

இந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் மூல காரணம் என்ன? சென்னை சர்வகலாசாலையுடன் அநேகம் கலாசாலைகள் இணைக்கப்பட்டு, அவைகளில் படிப்பவர்களையெல்லாம் சர்வகலாசாலைப் பரீட்சையில் எழுத அனுமதிப்பதைப் போல இலங்கை சர்வ கலாசாலை அனுமதிப்பதில்லை. சர்வகலாசாலையிலிருக்கும் காலேஜில் படிப்பவர்கள் மட்டும்தான் அதனுடைய பரீட்சைகளுக்கு அமர்ந்து பட்டம் பெறலாம். மற்ற கலாசாலைகளில் உயர்தரக் கல்வி அளிப்பதுமில்லை. அளித்தாலும் அதைச் சர்வகலாசாலை அங்கீகரிப்பதுமில்லை.

தமிழ் அறிஞரான ஸ்ரீ. சே. கனகரத்தினம் உதவி கல்வி மந்திரியானதிலிருந்து மேற்படி குறுகிய மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான அறிகுறிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பெரிய கலாசாலை உயர்தரக் கல்வி போதனை செய்யத் தன்னிடம் எல்லா வசதிகளும் இருப்பதாயும் சர்வகலாசாலை அங்கீகரிக்குமானால் அடுத்த வருடத்திலிருந்தே உயர்தரக் கல்வி போதனைக்கு ஒழுங்கு செய்வதாயும் கல்வி மந்திரிக்கு ஒரு மகஜரை அனுப்பியிருக்கிறதாம். இந்த யோசனையைக் கல்வி மந்திரி தீர்க்கதரிசனத்துடன் அங்கீகரித்தால் தமிழர் தலைநகரமான யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலையின் கிளையொன்று ஏற்பட்டு இலங்கையின் உயர்தரக் கல்விப் பஞ்சமும் ஓரளவு தீரும்.

தெருவுக்கு ஒரு கலாசாலை!

இலங்கையில் தெருவுக்கு ஒரு கலாசாலை இருப்பதாகச் சொன்னால் இந்தியாவிலுள்ளவர்கள் மூர்ச்சைபோட்டு விழுவார்கள். கொழும்பு நகரத்தில் மட்டும் ஐந்நூறு கலாசாலைகளிருக்கின்றன. ஆனால் அந்தக் கலாசாலைகளில் படித்தவர்கள் சர்வகலாசாலைப் பரீட்சைக்கு அமரவோ அல்லது பட்டம் பெறவோ முடியாது. இந்தக் கலாசாலைகளெல்லாம் இந்தியாவிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப் போன்றவை. ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களையுமே இங்கு கலாசாலை என்ற பெரிய பெயரில் அழைக்கிறார்கள். நாற்பது ஐம்பது குழந்தைகள் படிக்கும் ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்கு வெளியில் கலாசாலை என்று பெயர் போட்டிருக்கும். இலங்கைக்குப் புதிதாக வருகிறவர்கள் இந்த போர்டுகளைப் பார்த்து ஏமாந்து போய்விடுவார்கள்.

இலங்கைக் கலாசாலைகளுக்கு ஆசிரியர்கள் வேண்டுமென்று இந்தியப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். இந்தியாவிலுள்ள பட்டதாரிகள் அதைப் பார்த்து ஏமாந்து இங்கு வருகிறார்கள். இங்கு வந்தபின் கலாசாலை என்று தாங்கள் நினைத்து வந்தது ஒரு சாதாரணப் பள்ளிக்கூடமென்பதை அறிந்ததும் மனம் உடைந்து

போகிறார்கள். அந்தஸ்து ஒருபுற மிருக்க வேலையாவது நிரந்தரமா யிருக்குமா என்றால் அதுவுமில்லை. இலங்கைக் கல்வி இலாக்கா சட்டத்தின் பிரகாரம் கல்வி டைரக்டரின் அனுமதியில்லாமல் இலங்கையரல்லாத ஆசிரியர்களை நியமிக்க முடியாது. நியமிக்கப்படுகிறவர்களும் சுமார் மூன்று வருட காலம் ஒப்பந்தத்துடன் வேலை செய்துவிட்டு இந்தியாவுக்குக் கப்பலேற வேண்டியதுதான்!

இந்தியர்களுக்கு நஷ்டம்

இலங்கை இந்தியர்களின் நிலைமை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் அவர்களுக்கு எதிர்பாராமல் ஒரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இங்குள்ள ராய்ட்டர் ஸ்தாபனத்தின் மானேஜராயிருந்த ஸ்ரீ. கே. கோபாலன் எம். ஏ. பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

ஸ்ரீ கோபாலன் இலங்கை இந்தியர்களின் பிரச்னைகளில் மிகுந்த அனுதாபம் கொண்டு இந்தியர்களைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் எங்கு நடந்தாலும் உடனுக்குடன் அவைகளைப் பற்றிய செய்திகளை வெளி உலகத்துக்கு அனுப்பி வந்தார்.

பிரச்னை மிகவும் நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கும்பொழுது அவருக்குப் பதிலாக ஒரு பிரிட்டிஷ்காரர் வந்திருப்பது கவலையை உண்டுபண்ணி யிருக்கிறது.


அரசியல் தீண்டாதார்களா ?

இந்தியர் பிரஜா உரிமை மசோதாவின்படி 'பதிவு செய்த இலங்கைப் பிரஜைகள்' என்ற புதிய மாதிரிப் பிரஜைகள் சிருஷ்டிக்கப் படுகிறார்கள். இலங்கை அரசாங்கம் கேட்கும் சகல யோக்கியதாம்சங்களையும் காண்பித்து மிகுந்த பிரயாசையும் பணச் செலவும் செய்து இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டவர்களையும், வம்சாவளிப் பிரஜைகளான சிங்களவர்களையும் யாழ்ப்பாணத்தவர்களையும் போலச் சமமாக நடத்த இலங்கை அரசாங்கம் தயாராயில்லை. கடுமையான சோதனைகளை யெல்லாம் ஏற்படுத்தி அவைகளையும் சகப்படுத்தி இலங்கைப் பிரஜைகளாகும் இந்தியர்களைப் பாரபட்சத்துடன் நடத்தி, அவர்களை அரசியல் தீண்டாதார்களைப் போல ஒரு தனிப் பிரஜைகளாக்கி வைப்பது நியாயமாகுமா ?

அரசாங்க நிலங்களை அபிவிருத்தி செய்வதற்காகக் கொடுப்பது; பாக்கு கடல்களிலே மீன் பிடித்து ஜீவனம் செய்ய அனுமதிப்பது; பஸ் போக்குவரத்து நடத்த லைசென்ஸ் கொடுப்பது முதலான சட்டங்களில் வம்சாவளிப் பிரஜைகளுக்கு மட்டுமே உரிமைகள் உண்டு என்றிருக்கிறது. அசாத்தியமும் அசாதாரணமானதுமான சுக்களைக் காட்டி இலங்கையர்களாகப் பதிவு செய்துகொள்ளும் ஒரு சில இந்தியர்களும் ஒரு காலத்தில் இந்தியப் பிரஜைகளாயிருந்ததற்காகத் தலைமுறை தலைமுறையாக எதிர் காலத்திலும் கஷ்டப்பட வேண்டும்போலும்!

அபிப்பிராய பேதம்

இந்த நெருக்கடியான சமயத்தில் இன்னொரு செய்தியும் எட்டுகிறது. மசோதாவை அங்கீகரிப்பதா, வேண்டாமா என்ற விஷயத்தில் இலங்கை இந்தியத் தலைவர்களுக்கிடையில் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறதாம். மசோதாவை ஏற்றுக் கொண்டு, பிறகு மேற்கொண்டு உரிமைகள் பெறப் போராட வேண்டுமென்று ஒரு சாரார் கருதுகிறார்களாம்; மசோதாவை இப்பொழுது அங்கீகரித்தால் இந்தியர் நிலைமை பலவீனமடைந்து விடுமென்று இன்னொரு சாரார் நினைக்கிறார்களாம்.


"இந்த கூரை அற்புதமான நிலைமையிலுள்ளது"
"ஆமாம். நான் வர்ணம் வரவழைத்த போது பிராண்டை குறிப்பாக சொல்லி யனுப்பினேன்"
ஷாலிமார் பெயிண்ட்
என்று அடித்தாற்போல் சொல்லுங்கள்
46 YEARS OF MANUFACTURING EXPERIENCE
Shalimar Paint Colour & Varnish Co. Ltd. POSTBOX 134, MADRAS 1


ஜலதோஷம்
அதிகரித்துக்கொண்டே வருகின்றது
ஆரம்பத்திலேயே
'ஆஸ்ப்ரோ'
சாப்பிடுங்கள்.
இவ்விதம் செய்க:
இப்போது
சீதோஷ்ண நிலை வெகு ஜாக்கிரதையாக இருக்குமபடியானது
இதுவே 'ஆஸ்ப்ரோ'வின் ரகசியம்
அணா ½ க்கு 3 வில்லைகள்
அணா 15 க்கு 30 வில்லைகள்
As.15 30 TABLETS
ASPRO
ENGLAND
ASPRO REG. TRADE MARK

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி

233. ஒப்பு எனக்கும் இல்லை!

இலங்கையிலிருந்து வந்த அனுமன் தன்னை வணங்கவில்லை. சீதாபிராட்டி இருந்த திசையை நோக்கி அல்லவா சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிறான் என்பதை அறிந்துகொண்ட ராமன், "அனுமனோ அரிய திறம் படைத்த வீரன். அவன் செயல் இப்படி நிகழ்கிறது. வேறு என்ன வேண்டும்?" என்பதாக எண்ணுகிறான்.

> நின்றிறல் அவன்செயல்
> தெரிய நோக்கினான்;
> வன்தியல் ஓதியும்
> வலியள், மற்றிவன்
> கண்டதும் உண்(டு), அவன்
> கற்பும் நன்றெனக்
> கொண்டனன் குறிப்பினால்,
> உணரும் கொள்கையான்.

[நின்றிறல் அவன் செயல்: வலிமையும் திறமையும் கொண்ட அனுமன் செயலை; தெரிய நோக்கினான்: நன்றாகப் பார்த்துக் கொண்டான் (ராமன்) வன்தியல் ஓதியும் வலியள்: சீதை சௌக்கியமாகவே இருக்கிறாள்! மற்று இவன் கண்டதும் உண்டு: இந்த அனுமன் அவளை நேரில் கண்டுமிருக்கிறான்: அவள் கற்பும் நன்றெனக் கொண்டனன்: அவளுடைய கற்பு நிலையும் பழுதுபடாமல் இருக்கிறது என்பதை மனசில் திட்டமாய்க் கொண்டான்: குறிப்பினால் உணரும் கொள்கையான்: வார்த்தைகளால் அல்லாமல் அனுமனது செய்கையின் குறிப்புகளைக் கொண்டு விஷயத்தை அறிந்து கொள்ளக்கூடியவனான ராமன்.]

∴

அனுமனது செயலைப் பார்த்து எல்லாவற்றையும் யூகித்துத் தெரிந்து கொண்டான். பிரமித்து அப்படியே நின்றுவிட்டான் ராமன்.

சீதை யிருந்த தெற்கு திசையை நோக்கிச் சாஷ்டாங்கமாக விழுந்து கிடந்த அனுமன் சிறிது நேரங் கழித்துத் தன் வசத்துக்கு வந்து எழுந்து நின்று ராமனைப் பார்த்துப் பேசுகிறான்.

"கற்புக்கு அரசியான சீதாதேவியை நேரிலேயே, இந்த என் கண்களாலேயே பார்த்தேன். சமுத்திரத்திலுள்ள இலங்கையில்தான் பார்த்தேன்."


> 'கண்டனென் கற்பினுக்(கு)
> அணியைக் கண்களால்,
> தென்திரை அலைகடல்
> இலங்கைத் தென்நகர்;—
> அண்டர்நா யக! இனித்
> துறத்தி ஐயமும்
> பண்டுள துயரும்' என்(று)
> அனுமன் பன்னுவான்.

[தென்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்: தெளிந்த திரைக்கின்ற அலைகளோடு கூடிய கடலின் நடுவேயுள்ள இலங்கையாகிய நகரத்திலே—கண்டனென்; அண்டர் நாயக தேவர்களுக்கு நாயகனான சக்கரவர்த்தியே; இனித் துறத்தி ஐயமும் பண்டுள துயரும்: இனி விட்டு ஒழிப்பாயாக சந்தேகத்தையும் இதுவரை யிருந்த துயரத்தையும்; என்று அனுமன் பன்னுவான்: என்று அனுமன் அழுத்தமாய்ச் சொன்னான்.]

∴

ராமனிடத்தில் சீதையை நேரில் கண்டதாகவும் இலங்கைத் தீவில் இருப்பதாகவும் சந்தேகம் வேலை

அவர் கேள்வி!



முதலாளி:—நிறைந்து கத்துறவர்களைக் கண்டால் ஒவ்வொரு அறை கொடுக்கலாம் என்று தோன்றுகிறது.

உத்தியோகஸ்தர்:— கொஞ்சம் மெள்ளச் சொல்லுங்களேன், எனக்குக் காது என்ன செவிடா?

யாதொன்றும் வேண்டாம் என்பதாகவும் சொல்லி முடித்ததும் மனதில் உண்டான பெருமிதத்தை அப்படியே கொட்டுகிறான் அனுமன்:

"புருஷ லக்ஷணத்துக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் உள்ளவனல்லவா நீ! உன் தந்தை தசரதச் சக்கரவர்த்தியின் பெருமை எப்பேர்ப்பட்டது? மிதிலைக்கு அரசனான ஜனகன், முனிவர்களுக்கு எட்டாத ஞானத்தை அடைந்த மகான் அல்லவா? சீதாபிராட்டி உங்கள் மூவருக்கும் எப்படி அமைந்திருக்கிறாள்!"

'உன்பெருந் தேவிஎன் னும்
உரிமைக்கும், உன்னைப்பெற் ற
மன்பெரு மருகிஎன் னும்
மாண்புக்கும், மிதிலைமன் னன்
தன்பெருந் தனையைஎன் னும்
தலைமைக்குந், தகைமைசான் றாள்,-
என்பெருந் தெய்வம்ஐ யா!
இன்னமுங் கேட்டி!'யென் பான்.

[மருகி: மருமகள்; தனையை: புதல்வி; தகைமை சான்றாள்: ஒத்த உயர் குணம் படைத்தவள்; என் பெருந் தெய்வம் ஐயா: மனைவி முறை, மருகி முறை, மகள் முறைக்கு ஒப்பற்றவளாய் இருக்கிறாள், என் விஷயமாக நான் என்ன சொல்ல! எனக்கு அவள் குல தெய்வம் தான்! கேட்டி என்பான்: கேட்பவளாக என்று சொல்லுகிறான்—ராமனிடம்.]

• • •

அனுமனது எக்களிப்பு மேலும் பொங்கி வருகிறது.

பொன்னைப் போல் மதிப்புள்ள லோகம் வேறு ஒன்றில்லை. பொன்னுக்குப் பொன் தான் ஒப்பு. அதே போலச் சிறையிலுள்ள கஷ்டத்தையெல்லாம் அற்புதமாய், தெய்வீகமான முறையில் சகித்துக்கொண்டு நேர்மையில் நிற்கிறாளே சீதா பிராட்டி; அவளுக்கு ஒப்பு அவள்தான். அதேபோல அவளுக்கு வாய்த்த நாயகனான உனக்கு ஒப்பு நீதான். அதில் யாதொரு சந்தேகமுமில்லை!

பொன்அல(து) இல்லைப்பொன் னை
ஒப்பனப், பொறையின்நின் றான்
தன்அல(து) இல்லைத்தன் னை
ஒப்பனத், தனக்குவாய்ந் த
நின்அல(து) இல்லைநின் னை
ஒப்பென, நினக்குநேர்ந் த
என்அல(து) இல்லைஎன் னை
ஒப்பென எனக்கும்சந் தான்.

[பொன்னை ஒப்பு பொன் அல்லது இல்லை என்பது வழக்கியல்; ஒப்பு என: சமமாய் இருப்பது போல; தனக்கு வாய்ந்த: தன் குலப் பெருமைக்கும் தக்கவாறு கணவனாக வாய்த்த; நினக்கு நேர்ந்த: எத்தனையோ பேர் இருக்க உனக்கு ஏதோ ஒரு தூதனாக நேர்ந்த; என்னை ஒப்பு, என் அலது இல்லை என எனக்கும் சந்தான்: சீதா தேவியைக் காண எனக்குத் தானே கொடுத்து வைத்தது ஆகையால் நானும் ஒப்புயர்வு அற்றவன் என்னும் பெரிய பதவியை எனக்கும் கொடுத்து விட்டாள்.]

பக்தி ஈடுபாட்டிலிருந்து விளைந்த எக்களிப்புச் செய்யுளில் அருமையான உருவம் எடுத்திருக்கிறது.

உள்ளத்தில் உண்டான உவகைப் பெருக்கை இரண்டு செய்யுள்களும் அற்புத ரஸமாய்க் கொட்டுகின்றன!



★ ரேஷன் தொல்லை

நமது முன்னோர்கள் விரும்பியது நாழி அரிசியும் நான்கு முழ ஆடையும் தான். இவைகளை அவர்களும் நாமும் சில வருஷங்களுக்கு முன்பு வரையில் யாதொரு பிரயாசையுமின்றி அடைந்து வந்தோம். ஆனால் இப்போது நாம் ஒரு பிடி அரிசிக்கே தாளம் போட வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். அட்வைசரி சர்க்காரால் கொண்டு வரப்பட்ட "கன்ட்ரோல்" "ரேஷன்" திட்டங்களுக்கு முன்னால் நமது தேசத்தில் பஞ்சக்குறை, பதுக்கல், சேமிப்பு என்பவை போன்ற வார்த்தைகளை நாம் கேட்டறியோம். மேற்படி திட்டங்களுடன் பிறந்த மொழிகளிலும் சிறிது உண்மை இருக்கிறது. மேற்படி அட்வைசரி சர்க்கார் இந்தியப் பாதுகாப்புக் கென்று ஏராளமான சிப்பாய்களைச் சேகரிக்கும் பொழுது பர்மாவில் யுத்தம் ஏற்பட்டது எல்லோருக்கும் தெரியும். அது வரை பர்மாவிலிருந்து ஏராளமான அரிசி நமது மாகாணத்திற்கு இறக்குமதி ஆகிக் கொண்டிருந்தது. ஆனால் சர்க்கார் தரப்பில் அல்ல, தனிப்பட்ட வியாபாரிகள் பொறுப்பில். பர்மா சண்டையின் காரணமாக அரிசி ஏற்றுமதி அவ்விடமிருந்து தடைப்பட்டது. உடனே சர்க்கார் தன்னுடைய ராணுவப் படைக்கும் அத்துடன் ஒருவாறு தன்னுடைய குடிகளுக்கும் உணவுப் பொருள் சேமிப்புத் திட்டத்தைக் கைக் கொண்டது.

நமது சென்னை மாகாணத்தில் வியாபாரிகள் தங்கள் சொந்தப் பொறுப்பில் பர்மா அரிசியைக் கொள்முதல் செய்த காலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களிலிருந்து ஏராளமான நெல்லும் அரிசியும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அமுலிலிருக்கும் சர்க்கார் உத்தரவுகளால் நடைப்படும் சரக்குகளைக் கொண்டும், வெளிநாடுகளிலிருந்து சர்க்கார் தரப்பில் இறக்குமதி யாகும் கோதுமை, சோளம் முதலிய தானியங்களைக் கொண்டும் நமது மாகாணத்தின் உணவு நெருக்கடியை ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். சர்க்கார் புள்ளி விவரப்படி 100க்கு 10 விகிதம் தான் குறைபாடு என்பதை ஒப்புக் கொண்டாலும் இச் சிறு குறைவைப் பங்கீட்டுக் கடைகளின் மூலம் தான் சரிக்கட்ட முடியும் என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. 100 பேருக்கென்று திட்டம் போட்டுச் சமைத்த பதார்த்தங்களைக் கொண்டே 110 முதல் 120 பேர்கள் வரை வயிறார உண்டு களிப்பதை நாம் பார்க்கிறோம். ஆகையால் மேற்படி சிறு விழுக்காடு தானாகவே சரி செய்து கொள்ளும். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ரேஷன் ஏற்பட்ட பிறகு ஜனங்கள் தங்கள் இஷ்டம் போலவும் தங்கள் சக்திக்குத் தகுந்தவாறும் உண்டு களிக்கிறார்கள்.

இப்பொழுது எந்தக் கடையில் பார்த்தாலும், எந்தச் சிறு சந்தையில் பார்த்தாலும் விற்பனைக்கு வரும் அரிசி, சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களுக்கு அளவே இல்லை. [illegible] பங்கீட்டுச் சட்டம் அமுலுக்கு வந்தால் இந்த உணவுப் பொருள்களை கண்ணாலாவது நாம் பார்க்க முடியுமா? இவை எல்லாம் எங்கே பதுங்கிக் கிடக்கின்றன என்பதை யாரால் அறிய முடியும்? துப்பறியும் நிபுணர்களால் தான் கண்டறிய முடியுமா? அறிந்தாலும் ஏழை மக்களுக்கு உபயோகப் படுமா?

இனி உலக விவகாரங்களைச் சிறிது மறந்து விட்டு நமது தெய்வீகப் புலவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சில வாக்கியங்களைக் கவனிப்போம். "எவ்வுயிரையும் காக்க ஈசன் ஒருவன் உண்டோ இல்லையோ?" என்பதாகக் கூறியிருப்பதை நாம் ஏன் திடமாக நம்பக் கூடாது? கல்லினுள் இருக்கும் தேரைக்கும், முட்டைக்குள் இருக்கும் கருவுக்கும், மிருகங்களுக்கும், பட்சிகளுக்கும் எந்த ரேஷன் ஆபீஸர் கூபன் கொடுக்கிறார்? எந்தக் கடைக்காரர் தானியம் அளக்கிறார்? இவை போன்ற கோடானுகோடி சிருஷ்டிகளைப் பிரத்தியட்சமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நாம் ஏன் நாழி அரிசிக்குப் பயந்துகொண்டு செயற்கைப் பஞ்சத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்? இந்த உண்மைகள் எல்லாம் அறிந்தல்லவோ மாந்தருக்குள் ஒரு தெய்வமாகிய மகாத்மா காந்தி அவர்கள் ரேஷனை எடுக்கும்படி கட்டளையிட்டார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவது நமது கடமை அல்லவா?

லௌகீக விவகாரங்களுக்கு மறுபடியும் வருவோம். கன்ட்ரோலும் ரேஷன் திட்டமும் அமுலுக்கு வந்தால் சிறிது நன்மையும் உண்டு. ஆனால் தீமைகள் அதிகம். இந்நாளில் சொற்பச் சம்பளம் வாங்கிக்கொண்டு, வீட்டு வாடகை அதிகமாகக் கொடுத்து சர்க்கார் காரியாலயங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் ஊழியம் செய்து கொண்டு பட்டண வாழ்வை கைக்கொண்டிருக்கும் குமாஸ்தாக்களுக்கும் சிப்பந்திகளுக்கும் அது சிறிது ஆறுதல் அளிக்கலாம். ஆனால் ரேஷன் கடைகளில் கொடுக்கப்படும் அரிசியின் தரம், அதனுடன் பிறந்த உமி, தவிடு, அதனுடைய நண்பர்களாகிய கல், மண் இவைகளைப் பெறுவதற்கும் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. 'க்யூ' வரிசையில் காத்திருந்து கடைக்காரர் அபயமளிக்கும் வரை பொறுமையை இழக்காமல் ஏங்கி நின்று கழிக்கும் வீண் காலம், இவைபோன்ற இன்னும் பல சம்பவங்களால் தங்கள் தொழில் நிலையங்களுக்குக் குறிப்பிட்ட காலங்களில் போய்ச் சேரமுடியாமல் தங்கள் மேலதிகாரிகளுடைய அதிருப்திக்கும் அருவருப்புக்கும் பாத்திரர்களாவதை யோசித்தால் இப்போது சர்வ சாதாரணமாகத் தங்கள் இஷ்டப்படி வேண்

டியபோது கிடைக்கும் நல்ல சாமான்களைக் கொஞ்சம் அதிகவிலை கொடுத்தாவது வாங்கி ஒரு வேளையாவது நாவுக்கு ருசியாகவும், வயிறாரவும் சாப்பிட விரும்புவார்கள்.

பொள்ளாச்சி
26—11—48 ஜி. வி. கிருஷ்ணன்

○●○

அந்தக் காலம் வருமா?

சென்னை மாகாணத்தில் எப்படி 100-க்கு 10 விதம் உணவு உற்பத்தியைப் பெருக்கினால், பற்றாக்குறையைத் தீர்க்கலாம் என்பது சென்னை மந்திரி சபையில் யாருக்காவது காதில் விழுமா? குறைந்தது 5 பங்காவது பெருக்க முயற்சித்தால், பெருவாரி தொல்லை தீரும் என்பதும் எவ்வளவோ உண்மை. இதை ஏழை விவசாயி அறிவான். எழுத்துத் தெரிந்த நகரத்தான் அறிவான்.

எனக்குச் சம்பந்தமுள்ள கிராமத்தைப் பற்றி நான் சில விஷயங்களை எடுத்துரைப்பது என்றால், அதன் உண்மை பற்றி நீங்கள் தீர்மானம் செய்வது சுலபம். காவேரிப் பாசனம் உடைய மாயவரத்திற்கு வட மேற்கில் உள்ள சேமங்கலம் என்பது சுமார் அறுபது வேலி கொண்ட ஒரு வட்டம். இது மாயவரம் தாலுகாவைச் சேர்ந்ததே. அறுபது வேலி கொண்ட அந்தக் கிராமத்தில், எனக்குத் தெரிந்தவரை ஏறக்குறைய 40 வேலி-இருபோக சாகுபடி செய்வது வழக்கம். அதாவது, குறுவையும், சம்பா அல்லது தாளடியும். ஆனால், என்று நாட்டில் பஞ்சம் தலைகாட்ட ஆரம்பித்ததோ, அந்த வருஷம் முதல் (1945 முதல்) மேற்கண்ட 40 வேலியில், 15 வேலிகூட இருபோக நடவு நடப்பதில்லை. அதாவது, குறுவை சுமார் 10 விதம் மாவுக்குக் கணக்கிட்டால், 5000 கலம் நெல் விளைவது நின்று போயிருப்பது தெரியும். இவை எக்காரணத்தினால் நின்றுவிட்டது என்று இதுவரை எந்தப் பிராணியும் கேட்டதில்லை. கிராமத்தவர்கள் சர்க்கார் விசாரணை என்றால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், நான் நேரில் கண்டறிந்த விஷயம் என்னைத் திகைக்க வைத்ததுடன் கேட்பவரையும் திகைக்க வைத்து விடும்.

1. தலைப்பில் சுமார் ஒன்றரை மைல் வாய்க்கால் பிரிவு, மண்வெட்டாமல் விட்டது.

2. கிராமத்தில், மேற்கண்ட விஷயம்பற்றி நடவடிக்கை எடுக்கத் தக்க தலைமை யில்லாதது.

3. கேட்பதற்கு ஒருவருக்கும் அதிகாரம் இல்லாத சோம்பேறி மடக் கூட்டம்.

எங்கள் கிராமத்தைப் போலவே சுற்று வட்டத்தில், அநேக கிராமங்கள் மேற்கண்டவாறு நிலங்களைத் தரிசுபோட்டு வருகின்றன.

இத்தகைய சிறு விஷயங்களை ஊன்றிப் பார்த்து சொற்பச் செலவில், உள்ள உற்பத்தியை விடாது உண்டாக்குவதினாலேயே, ஒரு பெரும் பங்கு பஞ்ச நிவாரணம் உண்டாக வழியிருக்கும். இதைவிட்டு, 'உற்பத்தியைப் பெருக்குக' என்று விளம்பரமும், விமர்சனமும், வாய்ப் பேச்சும் கொண்டு அலைவதினால் என்ன பயன் உண்டாகும்?

கல்கத்தா
23—11—48 க. கிருஷ்ணமூர்த்தி

○●○

அநியாயம்!

ஏனோ தெரியவில்லை: எத்தனையோ முற்போக்கான நம் சென்னை அரசாங்கத்தார் சமயத்தில் சிறு பிழை செய்து விடுகிறார்கள். அதனால் மந்திரி சபையையே தூற்றும்படியாகி விடுகிறது.

உதாரணமாக, சமீபத்தில் நெல்விலையை உயர்த்தினதைத் தான் குறிப்பிடுகிறேன். ஆதியில் மத்திய அரசாங்கத்தார் சற்று விலையை உயர்த்தச் சொன்னதற்கு, வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடும் என்று ஐயோ முறையோ என்று கத்தினார்கள். இப்பொழுது திடீரென்று நெல் விலையை ஏன் உயர்த்தினார்கள் என்று புரியவில்லை.

இன்னும் குறுவைநெல் கொள்முதல் முடிந்தபாடில்லை. நேற்று நெல் போட்டவர்களுக்கு ஒரு விலை. இன்று நெல் போடுகிறவர்களுக்கு அதைவிடச் சற்று அதிகவிலை என்றால் அது ஒழுங்கில்லை பாருங்கள்!

நேர்மையாக முதலிலேயே நெல் போட்டவர்களுக்கு நஷ்டம். நேர்மைக் குறைவாய் 100 மூட்டைகளில் 20 மூட்டை போட்டு விட்டு மிகுதியை மறைத்து வைத்திருந்தவர்களுக்கு லாபம். அதற்கு அரசாங்கத்தாரே உடந்தை என்றால் நினைத்துப் பார்க்கக்கூட நன்றாயில்லை.

விலையை உயர்த்தினவர்கள், முதலிலேயே மூட்டை போட்டவர்களுக்கும், விலை வித்தியாசத்தைத் திருப்பிக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அல்லது இந்த விலையேற்றம் குறுவை காலப் பயிர்களுக்குக் கிடையாது என்று அறிவித்திருக்க வேண்டும். அல்லது சம்பா நெல் அறுவடை காலத்தில் இவ்விலை உயர்வை அமுலுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

விலை உயர்வை விளம்பரப்படுத்தி விட்டு அரசாங்கத்தார் எங்கேயோ இருக்கிறார்கள். ஆனால் நேருக்கு நேர் சென்று நெல் கொள்முதல் பண்ணும் டி. எஸ். ஓ., எம். எஸ். ஓ: ஆர். ஐ. முதலியவர்கள் விவசாயிகள் கேட்கும் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லுவார்கள்?

வல்லம்படுகை
28—11—48 சம்பந்தம்

○●○

மாணவர்கள் கடமை.

சுதந்திர மடைந்துள்ள இந்நாளில் மாணவர் தம் பொறுப்பை உணர்ந்து நடக்கவேண்டும். நமக்குள்ள குறைபாடுகளைச் சமரச மார்க்கத்தில் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். வேலை நிறுத்தம் என்னும் ஆயுதம் மாணவர்கள் கையாளுவதற்கு ஏற்றதல்ல. பெற்றோர்கள் கஷ்டப்பட்டுப் பணம் அனுப்ப, கல்வி முன்னேற்றமே கண்ணாகக் கருதி நடப்பதை விட்டு, மாணவர்கள் பள்ளிக்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்வது மடமையாகும். செலக்ஷன் பரீக்ஷை நடக்கக் கூடாது என்று கலாசாலை அதிகாரிகளை வற்புறுத்தும் நோக்குடன் சென்னை மாகாணத்தின் பல பகுதிகளில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். 'டெஸ்டு கோ'' என்னும் சர்வ கலாசாலை நிர்வாக சபையார் முடிவு செய்ய வேண்டிய ஒரு விஷயத்தைக் கலாசாலை அதிகாரிகளே முடிவு செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவது நியாயமற்ற செய்கை. மாணவர்கள் கலாசாலையின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மதித்து நடத்தல் கடமையாகும். தங்களுடைய கோரிக்கைகளை ஒழுங்கான முறையில் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். பெரியோர்களுடைய முடிவை அங்கீகரித்து, நடந்து கொள்வதுதான் மதியடைந்த மாணவர்களுக்கேற்றது.

சத்யாக்ரஹத்தின் பிதாவாகிய மஹாத்மா காந்தியடிகள் நியாயமற்ற கோரிக்கைகளுக்காக நேரடி நடவடிக்கைகளைக் கையாளுவது அசத்யாக்ரஹமாகும் என்று எடுத்து உரைத்திருக்கிறார். ஆகவே மாணவர்கள் தங்கள் சக்தியையும், பணத்தையும், விரயம் செய்யாமல் கல்லூரி வேலை நிறுத்தங்களை விட்டுவிட்டு அமைதியாகக் கல்வி பயிலுவதில் தங்கள் முழு நேரத்தையும் செலவிட வேண்டியது அவசியமாகும்.

பாளையங்கோட்டை
30—11—48 நா. கிருஷ்ணய்யர்

○●○

கவனம் வேண்டும்

தங்கள் 28ந் தேதிய 'கல்கி' இதழில் ''லைசென்ஸும் லஞ்சமும்'' என்று தலையங்கத்துடன் உள்ளது உள்ளபடியே கண்கூடாய் நடப்பதை மிகவும் விளக்கமாய் எழுதியிருக்கும் கட்டுரையை முழு மனதுடன் வரவேற்கிறேன். ஜவுளி சம்பந்தமாய் உண்மையில் தலைமுறை தலைமுறையாக வியாபாரம் செய்தவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படவில்லை. காரில் போய் நேரில் கண்டவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய எச்சரிக்கையைக் கண்டாவது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீதும் நிர்வாகிகள் மீதும் சுமத்தப்படும் கெட்ட பெயர் தடுக்கப்படுமென நம்புகிறேன். உணவுப் பங்கீடு சம்பந்தமாக வழங்க வேண்டிய லைசென்ஸுகள் நேர்மையுள்ளவர்களான வியாபாரிகளுக்கு வழங்கப்பட வேண்டியது மிக அவசியம். இல்லாவிடில் மேற்படி கண்ட்ரோலினால் ஏழைகள் மிகவும் அல்லல்பட நேரிடும்.

கடலூர் என். டி.
27—11—48 ரா. ராகவன்

○●○

லஞ்சம் ஒழிவதெப்படி?

தங்களுடைய 'வட்ட மேஜை'யினால் அனேக விஷயங்கள் வெளியாகி அதனுடைய குற்றம் குறைகளும் நிவர்த்திக்கப்பட்டு வருகின்றன என்பது கண்கூடு. இன்று வெளியான 'கல்கி' இதழில் ''லைசென்ஸும், லஞ்சமும்'' என்ற கட்டுரையில் அடங்கியிருக்கும் ஒவ்வொரு வரியும் வார்த்தையும் எவ்வளவு நியாயமும் நேர்மையும் வாய்ந்தது என்பது இங்குள்ள எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. எங்கு பார்த்தாலும் லஞ்சம், லஞ்சம் என்ற வார்த்தை காதைத் துளைக்கிறது. தாங்கள் எழுதியது போல் லஞ்சம் வாங்குபவர்கள் வாங்கிக் கொண்டேயிருக்கிறார்கள். இதை ஒழிப்பதற்கு வழி என்ன? பொதுஜன சர்க்கார்தான் இதற்கு வழி தேட வேண்டும். இதற்கு மாகாண மந்திரிகளும், சமஸ்தான மந்திரிகளும் சிரத்தை காட்டவில்லை என்பதே முக்காரணம். ''விடுதலைப்போரில் காட்டிய தியாகங்களையெல்லாம் மீண்டும் பிரகாசிக்க வேண்டும்'' என்று இந்தியாவின் உதவிப் பிரதமர் கூறுகிறார். இதை மந்திரிகள் சரியாகக் கவனிக்கவேண்டும்.

பங்களூர்
28—11—48 எஸ். ராஜகோபாலன்

○●○

வ. உ. சி. ஞாபகச் சின்னம்

''இப்போது கடலிலே இறங்கியுள்ள இந்தியக் கப்பல்களும் இனி இறங்கப்போகும் நூற்றுக்கணக்கான கப்பல்களும் இந்தியக் கப்பல் வியாபாரத்திற்கு வழிகாட்டிய ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு ஞாபகச் சின்னங்களாக விளங்கி வரும்!'' என்று இவ்வார 'கல்கி' இதழில் நிகழ்ச்சி சித்திரத்துடன் விளக்கப் பட்டிருப்பதைக் கண்டு பெரிதும் மகிழ்வுற்றேன். இந்தியாவின் கப்பல்களெல்லாம் கப்பலோட்டிய தமிழனின்—வ. உ. சிதம்பரம் பிள்ளையின் சின்னங்கள். இதை நினைக்கும்போதே ஒவ்வொரு தமிழனும் பரவசமடைவான் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதனை எத்தனை மக்கள் அறிவார்கள்? உலகத்தார் இதனை அறிய ஒரு சிறந்த சின்னம் இந்திய அரசாங்கம் ஏற்படுத்தினால் மிகவும் சிறப்புடையதாக இருக்கும். மக்களெல்லாம் அவ்வீரனின் தீரச்செயலை அறிய ஒரு வழி செய்ய வேண்டும். அதாவது இந்தியக் கப்பல்களில் ஒன்றிற்கு எஸ். எஸ். சிதம்பரம் என்றேனும் எஸ். எஸ். ஐ. எஸ். சிதம்பரம் என்றேனும் பெயர் வைப்பின், கப்பல் ஓட்டிய தமிழனின் பெயர் நிலைத்து மக்களின் மனத்தில் உணர்ச்சியூட்டுவதாக இருக்கும்.

வண்ணையம்பதி எஸ். ஜி. விநாயகமூர்த்தி
28—11—48

[தூத்துக்குடியில் வ. உ. சி. அவர்கள் பெயரால் ஒரு கப்பல் தட்ட ஏற்பாடாகும் செய்தி நேயர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்று எண்ணுகிறோம். — ஆசிரியர்]

★ இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் பொள்ளாச்சி ஜி. வி. கிருஷ்ணன் எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசு வழங்கப்பட்டது.

என்றும் யுவதி

எஸ்.வி.எஸ்



அன்றொரு நாள் இரவு பத்து மணிக்கு மேல் ஊரடங்கி எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. எங்கேயோ வெகு தூரத்திலிருந்து இரண்டு நாய்கள் 'வள் வள்' என்று குரைத்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்த சப்தம் இலேசாக வந்து கொண்டிருந்தது. வானில் சரத்கால சந்திரன் மனமோகன சந்திரிகையைப் பொழிந்து கொண்டிருந்தான். அதை யாரும் பொருட்படுத்தாதிருப்பதைக் கண்டு ஒரு சிறு கருமேகக் குஞ்சு நன்றி கெட்ட உலகின் மீது சந்திரிகை படாது தடுக்க வேண்டுமென்று அதை மறைக்க வந்தது. 'உலகத்தாரின் நன்றியைப் பெறவா நான் இந்த வெண்ணிலவைப் பொழிகிறேன். என்னுடைய ஆனந்தத்துக்காகவேதான் நிலவைப் பொழிகிறேன். அதை உலகம் பொருட்படுத்தினால் என்ன, பொருட்படுத்தாவிட்டால் என்ன?' என்று சொல்வது போல் அந்த மேகக் குஞ்சிலிருந்து வெண்ணிலவு வெளியேறியது! என் வீட்டு வாசலிலிருந்த மரமல்லிகையும் கொல்லைப்புறமிருந்த பாரிஜாத மரமும் பூத்துக் குலுங்கி நாலுதிசையிலும் தம் நறுமணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. அந்த வேளையில் அந்த நறுமணத்தை அனுபவிக்க அவனில்லாமற் போகவே என்னை ஒருவனையே குறியாகக்கொண்டு அந்த மரங்கள் வாசனையை என்னை நோக்கியே வீசியது போலிருந்தது!

அப்போது, என் மனதில் உலக விவகாரங்களை யொட்டிய கவலைகளும் தொல்லைகளும் நீங்கி ஒருவித இனந் தெரியாத இன்பம் நிலவியது. 'தமிழ்ப் பாடல்களையும், கவிகளையும் படித்து வெகு நாட்களாகி விட்டனவே. இன்றைக்குப் படித்தால் நன்றாய் அனுபவிக்கலாம் போலிருக்கிறதே' என்று தோன்றியது. உடனே, 'ஹரிக்கேன்' விளக்கொன்று எடுத்து வந்து படிக்கத் தொடங்கினேன்.

ஆம், அன்றைய மனோநிலை கவிதையை வெகுவாக ரஸிக்கக்கூடியதாகத்தான் இருந்தது. புதிய புதிய பாவங்களும், உணர்ச்சிகளும் பெயர் தெரியாத பண்டைத் தமிழ்ப் புலவர் ஒருவரின் கவிகளிலிருந்து வெளியாவதைப் படித்துப் படித்து அனுபவித்துக் கொண்டிருந்தேன். சில வெண்பாக்களை, பத்துப் பதினைந்து தடவை என் மனதுக்குள்ளேயே பாடி அனுபவித்துக் கொண்டிருந்தேன்! இவ்விதம் எத்தனை நாழிகை படித்துக் கொண்டிருந்தேனோ எனக்கே தெரியாது.

என் பின்னால் யாரோ வந்து நிற்பது போல் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தேன். ஆகா! என்ன ஆச்சர்யம்! என் கண்களை என்னாலேயே நம்ப முடியவில்லை, அவ்வளவு அழகு! அவ்வளவு வசீகரம்! அந்த நீண்ட கருவிழிகளும், வில்லை யொத்த... ஆகா! இவையெல்லாம் வருணிக்கக் கவிஞனாக அல்லவோ பிறந்திருக்க வேண்டும்! எனக்கேது அந்த சக்தி!......இவளுக்கு என்ன வயதிருக்கலாம்? பதினேழு பதினெட்டு இருக்குமோ என்று எண்ணினேன்.

"என் வயது பதினேழு என்றா நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அந்த மனமோகன ரூபவதி.

'நாம் நினைக்கிறதுகூட இவளுக்குத் தெரிகிறது போலிருக்கிறதே! இவள் என்ன அப்சரஸா? தேவதையா?'

"நான் அப்சரஸானால் என்ன, தேவதையாயிருந்தால் என்ன? என் வயது என்ன என்று உங்களால் நிர்மானமாகச் சொல்ல முடியுமா?"

"பதினேழு, பதினெட்டுதான் இருக்கும் என்று எண்ணுகிறேன்" என்றேன்.

அவள் முகத்தில் ஒரு சிறு குறுநகை தோன்றியது. அப்பொழுது அவள் முகந்தான் எவ்வளவு அழகாக இருந்தது! அவள் சொன்னாள்: "எனக்குப் பதினெட்டு வயது என்று சொன்னீர்கள்? எனக்கு ஆயிரத்துப் பதினெட்டு வயது!"

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! ஆயிரத்துப் பதினெட்டு வயதாவது! இவள் என்ன பயித்தியமா?

"சாதாரணமாகப் பெண்களுக் கெல்லாம் முப்பது வயதிலேயே முகத்தில் கிழடு தட்டிவிடும் என்பார்கள். நீயோ பதினெட்டு வயதுள்ள யௌவன ரூப சுந்தரியாக இருக்கிறாய். உன் வயது மட்டும் ஆயிரத்துப் பதினெட்டு என்றால் யார் நம்புவார்கள்? ஏதாகிலும் உளறுகிறாயா? இல்லை; உனக்குச் சித்தப் பிரமையோ?" என்றேன்.

"இல்லை, ஆயிர வருஷங்களுக்கு முன் பதினெட்டு வயது யுவதியாக இருந்தேன். அதற்குப் பிறகு என்னை என்றென்றும் பதினெட்டு வயது யுவதியாகவே இருக்கும்படி செய்து விட்டார்" என்றாள்.


"யார்?" என்றேன்.

"ஒரு புலவர்" என்றாள் அந்த மோகினி.

* * *

ஆயிரம் வருஷத்துக்கு முன் அந்தக் காரிகை தெய்வரம்பையை யொத்த அழகியாய் இருந்தாள். அவளுடைய கடைக்கண் நோக்குக்கு அந்தக் காலத்துக் குறுநில மன்னர்களும் வீர பராக்கிரமச் சாகசச் செயல்கள் புரிந்த தளபதிகளும், மல்லர்களும் தவங் கிடப்பார்கள். இவ்வளவுக்கும், அவள் உழுதுண்டு வாழும் வேளாள பரம்பரையில் வந்தவள் தானாம்.

அவளுக்கும் சிறு வயது முதலே, வாள்போர், மற்போர், சிலம்பாட்டம் முதலிய வீர விளையாட்டுக்களைப் பார்ப்பதில் அதிகப் பிரியம் கொண்டிருந்தாளாம். மணந்தாலும் வீரமும் தீரமும் பொருந்திய சாகசச் செயல் புரிந்து வெற்றிவாகை சூடும் ஆண் மகனுக்கே தன் மெல்லிய தளிர்க் கரங்களால் மணமாலை அணிய வேண்டும் என்று எண்ணி வந்தாளாம். ஆனால் அவளுடைய தந்தை அதற்கு நேர்மாறாக எண்ணி வந்தாராம்.



கல்வி கேள்விகளில் சிறந்து, ஒழுக்கமிருந்த அறிவாளிக்கே தம் அருமை மகளைக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினார். அதற்கேற்ப வயதில் குறைந்த—ஆனால் அறிவிற் சிறந்த ஒரு புலவர் வந்தார். அவருடைய புலமையைக் கண்டு வியந்து அவருக்குத் தக்க பரிசு என்ன கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தார். கடைசியில் தம் மகளை அழைத்து "அம்மா, செங்கமலம்! உனக்கேற்ற மணவாளன் கிடைப்பானோ என்று இத்தனை நாள் ஏங்கிக் கொண்டிருந்தேன். இன்றுதான் உன் அறிவிற்கும் அழகிற்கும் ஏற்ற பதி கிடைத்திருப்பதாக நான் எண்ணுகிறேன். உனக்கு இந்த இளம் புலவரை மாலையிடச் சம்மதந்தானே?" என்று கேட்டார்.

தந்தையே வந்து கேட்கும்போது அவள் என்ன சொல்ல முடியும்? "அப்பா, தங்களுக்கு எது உசிதம் என்று தோன்றுகிறதோ அதையே செய்யுங்கள். என்னுடைய நன்மையில் என்னை விடச் சிரத்தை கொண்டவர்கள் தாங்கள்தானே?" என்றாள்.

அவளுக்கும் அந்தப் புலவருக்கும் கல்யாணமாயிற்று.

வருஷங்கள் பல கழிந்தன.

* * *

பாண்டியனுடைய ராஜ சபையில் மந்திரிமார்களும், நகரப் பிரமுகர்களும் கூடியிருந்தார்கள். பாண்டிய மன்னன் வெகு கம்பீரமாக நடந்து வந்து சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்தான். சபையில் எழுந்து மரியாதை செய்த மந்திரிமார்களும் பிரமுகர்களும் தத்தம் இடத்தில் அமர்ந்தார்கள்.

பாண்டியன் "என்ன புலவரே! ஏதாகிலும் விசேஷமுண்டா?" என்றான்.

"ஆமாம்!" என்றார் புலவர்.

"என்ன?"

"நேற்றிரவு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. ஒரு வீட்டில் மட்டும் 'மினுக்' 'மினுக்' என்று அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. 'யார், என்ன செய்கிறார்கள்?' என்று பார்த்தேன். சுமார் இருபது வயது யுவதி ஒருத்தி விளக்கின் அருகில் தன்னந் தனியாக உட்கார்ந்திருந்தாள். விசாரித்ததில் அவளுடைய

கணவன் எங்கேயோ வெளியூர் சென்றிருப்பதாகவும், கார்காலத்துக்குள் திரும்பி வந்துவிடுவதாக வாக்களித்து விட்டுப் போயிருப்பதாகவும் சொன்னார். ஆனால் அவர் வாக்களித்தபடி வரவில்லை! மழை வந்துவிட்டது. இந்த மழைக் காலத்தில் தூக்கணாங் குருவிகூடத் துணைக்கு ஒரு மின்மினிப் பூச்சியாகிலும் இருக்கட்டுமென்று தன் கூட்டுக்குள் எடுத்துக்கொண்டு போய் வைத்துக் கொள்கிறது! ஆனால் அவள் ஒரு துணையுமில்லாமல் இருக்கிறாள். 'என்ன பிழைப்பு! என்ன இருப்பு' என்று ரொம்பவும் அங்கலாய்த்துக் கொள்கிறாள்!" என்ற கருத்துக் கொண்ட தமிழ்க் கவியொன்றைப் புலவர் சொன்னார்.

"ஏது, கவிஞர் கொஞ்ச நாளாக அகத்துறையில் இறங்கிவிட்டாற் போலிருக்கிறது! யார் மீதாகிலும் காதல்...?"

"எனக்குக் கல்யாணமாகி விட்டது மகாராஜா. இனிக் காதலிப்பதற்கு எனக்குச் சந்தர்ப்பமே இல்லை!"

"என்ன? உமக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? எனக்கு இத்தனை நாளாகத் தெரியாதே! உம் மனைவி மக்கள் எல்லோரும் எங்கேயிருக்கிறார்கள்?"

"நல்லவேளை எனக்கு மக்கள் இல்லை, மனைவிதான் இருக்கிறாள். எனக்குப் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பே கல்யாணம் ஆகிவிட்டது! ஒரு சமயம் நான் கவி பாடிக்கொண்டு சோழ நாட்டில் பூமலர்ந்தநல்லூர் என்னும் ஊரை அடைந்தேன். அப்பொழுது அங்கே வசித்த குமரேச வள்ளல் கல்வி கேள்விகளில் சிறந்த புலவரை அறிந்து ஆதரிக்கும் குணம் பெற்றவர். அவர் எதிரில் ஏதோ ஒரு புறப்பொருள் கொண்ட ஒரு செய்யுள் சொன்னேன். அதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்த அவர் தம்முடனேயே சில நாள் என்னைத் தங்கச் செய்தார். புறப்பொருளில் பல பாடல்கள் சொன்னேன். என்மேல் அவர் கொண்ட அன்பு அதிகமாகியது. அந்த அன்பின் அடையாளமாக ரதி போன்ற தமது அருமைப் புதல்வியை எனக்குத் திருமணம் செய்து வைத்தார். ஆனால் அப்பொழுது நான் அவள் ரதி போன்றிருப்பதைக் கண்டு மயங்கவில்லை; கயல்மீன் போன்ற அவள் கண்களைக் கண்டு களிக்கவில்லை; முல்லை மகர்த் தொகையொத்த பல் வரிசையைக் கண்டு மகிழவில்லை. என்னுடைய அசட்டுச் செய்யுளைக் கண்டே மகிழ்ந்து வந்தேன்......"

"அப்புறம்?" என்றான் மன்னன்.

"கொஞ்ச நாளில் அந்த வள்ளலும் மறைந்தார். வறுமை என்னைச் சூழ்ந்து கொண்டது. என் மனைவிக்கு என்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒருநாள் எங்கள் இருவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டுச் சண்டை மூண்டது. நான் 'நீ விரும்பும் செல்வத்தைத் திரட்டாமல் உன்னை வந்து பார்ப்பதில்லை' என்று சூள் உரை சொல்லிவிட்டு வீட்டைவிட்டு வெளியே வந்தேன். இன்று வருஷம் பத்துக்கு மேல் ஆகிவிட்டது! இத்தனை நாளும் அவளைப் பற்றிய நினைவே இல்லாமலிருந்தேன்.

"கொஞ்ச நாட்களுக்கு முன்பு ஒருநாள் எப்படியோ அவள் நினைவு உண்டாயிற்று. அன்றைய தினத்திலிருந்து பொழுது விடிந்து எழுந்தால் அவள் நினைவே என்னைக் கொல்லுகிறது. ஏது செய்தாலும், எங்கே போனாலும் அவள் நினைவே வருகிறது. எதை நினைத்துப் பாடினாலும் அகத்துறைப் பாடலாகவே வருகிறது. அகத்துறையில் நூற்றுக் கணக்கான பாடல்கள் செய்துவிட்டேன். காரணம் என்னவென்றும் புரியவில்லை. அவள் எப்படிக் கஷ்டப்படுகிறாளோ, எத்தகைய துயரத்துக்குள்ளாகியிருக்கிறாளோ என்றே மனம் அல்லும் பகலும் நினைக்கிறது!" என்று தயங்கிக் கொண்டே முடித்தார் புலவர்.

இதைக்கேட்ட மன்னன் "அசட்டுப் புலவரே! உமக்குக் கல்யாணம் ஆன விஷயமும், மனைவியிருக்கும் விஷயமும் எனக்கு இத்தனை நாட்களாகத் தெரியாது. நமது நிதி மந்திரியிடமிருந்து உமக்கு வேண்டிய நிதியை எடுத்துச் சென்று தங்கள் மனைவியாரையும் பார்த்து அவரையும் இங்கே அழைத்து வாருங்கள்" என்றான்.

"தங்கள் உதவிக்கு எவ்விதம் நன்றி செலுத்துவதென்றே தெரியவில்லை." என்றார் புலவர்.

"நீர் நன்றி செலுத்துவதெல்லாம் பிறகு இருக்கட்டும். முதலில் ஊருக்குப் போய் விட்டு வாரும்" என்று மன்னன் கூறினான்.

* * *

அருணன் உதித்தான்; அம்புஜமும் விண்டது. புலவர் பூமலர்ந்த நல்லூரை அடைந்தார். மனதில் இனந்தெரியாத பல பல எண்ணங்களுடன் தன் வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். தன்னைப் பார்த்து

மனைவி எவ்வளவு சந்தோஷப் படுவாள்; தான் கொண்டு வந்திருக்கும் நவநிதியையும் கண்டு எவ்வளவு பூரிப்பாள் என்று ஆனந்தக் களிக்கூத்தாடிக் கொண்டே தன் பழைய வீட்டை அணுகினார்!

வீட்டு வாசற் கதவு சாத்தி யிருந்தது.

"செங்கமலம்!" என்று கூப்பிட்டார்.

"யாரது?" என்று ஒரு கடுமையான குரல் வந்தது!

இது செங்கமலத்தின் குரலாக இராது. அவள் குரல் குயிலின் குரலுடன் போட்டி யிடுமே என்று நினைத்தார். அந்த நினைவுத் தொடர் முடிவதற்குள்ளேயே மறுபடியும் "யாரது?" என்று கேட்டுக்கொண்டே ஒரு பெண் உருவம் கதவைத் திறந்தது. அந்த உருவத்தைப் பார்த்தவுடனேயே திடுக்கிட்டார். "ஆ! செங்கமலமா இது?" என்று இரைந்து விட்டார் புலவர்.

செங்கமலத்துக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கணம் நின்று பார்த்தாள். பிறகுதான் புரிந்தது—'என் கணவர் அல்லவா வந்திருக்கிறார்! என் தவம் அல்லவா பலித்திருக்கிறது!' என்று பெருமகிழ்ச்சி கொண்டாள்.

'அன்று எவ்வளவு கடுமையான வார்த்தைகள் கூறி அவரை விரட்டினேன். அவருடைய மேதையை யுணராமல் அவமானப் படுத்தினேன். அதற்குப் பிராயச்சித்தமாக இத்தனை நாள் தவம் கிடந்தேன். இன்று என் தவம் பலித்து விட்டது. இன்று அவர் வந்து விட்டார். அவரிடம் மன்னிப்புக் கோர வேண்டியது' என்று எண்ணினாள்.

ஆனால் அப்பொழுதுதான் புலவருக்குக் கொஞ்ச நாளாகச் செங்கமலத்தின் நினைவு வந்து வருத்தியதின் காரணம் புரிந்தது.

அங்கோ இருண்டடர்ந்த கானகத்தில் ஒரு கிழவன் செல்கிறான். அவனைப் பின் தொடர்ந்து புலவரும் செல்கிறார். அவரை எட்டிப் பிடித்துவிட நடையைத் துரிதப் படுத்துகிறார். துரிதப்படுத்தி அந்தக் கிழவனையும் அடைகிறார்.

"ஐயா! தாங்கள் யாரோ?" என்கிறார் புலவர்.

"ஏனப்பா! நான் ஒரு சித்திரக்காரன்" என்கிறார் கிழவர்.

"பெயர்?"

"காலதேவன்"

"தாங்கள்தான் காலதேவனோ? தாங்கள் ரொம்பவும் பிரசித்த மடைந்தவர்களா யிற்றே" என்கிறார். அதற்குக் காலதேவன் ஏளனமாகச் சிரிக்கிறார்.

"ஏன் அப்படிச் சிரிக்கிறீர்கள்?"

"என் சித்திர வேலைப்பாட்டைப் பார்த்தாயானால் எனக்கு எவ்வளவு நல்ல பெயர் என்று நீயே தெரிந்து கொள்வாய்."

"தங்கள் சித்திரக்கூடம் ரொம்பவும் தூரத்திலிருக்கிறதோ?"

"இல்லை; இல்லை! பக்கத்தில்தான்."

அதற்குள் சித்திரக்கூடம் வருகிறது. காலதேவனின் சித்திரச் சாலையில் நுழைந்தவுடன் புலவர் ஆச்சரியத்தினால் திடுக்கிடுகிறார். புலவரின் மனைவியின் சித்திரம் இருக்கிறது! அவள் முகத்தில் அழகு வடிகிறது! 'ஆ! இவ்வளவு அழகிய மனைவியையா விட்டு விட்டு வந்தோம்' என்று ஒரு கணம் எண்ணுகிறார். அடுத்த கணம் 'அப்பா! சற்று கண்ணை மூடிக்கொள்" என்கிறார் காலதேவர்.

"ஏன்?"

"என் சித்திர வேலை இனிமேல்தான் இருக்கிறது!"

"இந்தச் சித்திரத்தில் இன்னும் வேலை செய்வதற்கு ஒன்றும் இருப்பதாகத் தெரிய வில்லையே!"

"இல்லை—இருக்கிறது! ஒரு விநாடி கண்ணை மூடிக்கொள். அதற்குள் என் வேலையை முடித்து விடுவேன்!" என்றார் அந்த அபூர்வ சித்திரக்காரர்.

புலவர் கண்ணை மூடினார், ஒரு கணம்! அடுத்த கணம் திறந்தார்!

"ஆ! இதென்ன? அந்த அழகிய சித்திரம்—அந்த அழகு—எங்கே போய்விட்டது! இப்படி ஒரே அடியாய் கிழடு தட்டிக் கோரமாகச் செய்து விட்டீர்களே!"

"நீ உன் மனைவியை விட்டுப் பிரிந்து பத்து வருஷ காலமாகிறது! கடந்துபோன காலத்தின் குறிதான் அது! என் வேலை அதுதான்! நான்தான் காலத்துக்கு அதிபதி!"

"நல்ல காலம்! நல்ல வேலை!"

"என்ன செய்வது?"

"அவள் அழகு காலத்தைக் கடந்து நிற்கும்படியாகச் செய்கிறேன், காலதேவனே!" என்று உரத்துக் கத்தினார் புலவர்.

'என்ன இப்படி கத்துகிறீரே!' என்று பிரக்ஞை வந்து—கொஞ்ச நாளுக்கு முன்

ஒருநாள் — கண் திறந்தபோது 'சுரீல்' என்று வெய்யில் முகத்தில் அடித்தது! அடடா! இவ்வளவும் கனவுதான் என்பதையும் உணர்ந்தார். 'ஆனால் என்ன கனவு?' என்று அப்பொழுது ஞாபகப்படுத்திப் பார்த்தார். நினைவு வரவில்லை. ஆனால் அன்றைய தினத்திலிருந்து மனைவியின் நினைவு மட்டும் இருந்து கொண்டிருந்தது. எந்தப் பாடலும் காதல் கொண்ட பாடலாகவே அவருக்கு வந்து கொண்டிருந்தது!

இப்பொழுது நேரில் செங்கமலத்தைப் பார்த்தவுடன் 'கனவில் காலதேவன் போட்ட கோடுகள் நினைவில் அப்படியே இருக்கின்றனவே! ஆ! என்ன அதிசயமாயிருக்கிறது!'' என்று புலவர் திகைத்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

• • •

"என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்று புலவரின் மனைவி இறைஞ்சுவது அவர் காதில் இலேசாக விழுந்தது.

புலவர் திடீரென்று "காலதேவனை நான் நிஜமாகவே வென்று விட்டேன்! கமலம், எழுந்திரு! எழுந்திரு! உன்னை என் கவிகளில் என்றும் பதினெட்டு வயது யுவதியாகச் செய்து விட்டேன். என் கவிகளைப் படிப்பவர்கள் யாரும் உன்னை இந்தக் கோலத்தில் நினைக்க முடியாது! காலதேவனை என் கவிகள் வென்றுவிட்டன! நீ இனி என்றும் பதினெட்டு வயது யுவதிதான்!" என்றார்.

இதைக் கேட்டுச் செங்கமலம் ஒன்றும் புரியாமல் திகைக்கவே, தான் கண்ட கனவு முதலியவைகளை விரிவாகச் சொன்னார். அதற்கு "நீங்கள் காலதேவனையும் வென்றிருக்கலாம்; காலதேவனும் என் முகத்தில் உள்ள குறிகளை-கோடுகளைத்-தமது என்று உரிமை கொண்டாடலாம். ஆனால், இவை யாவும் எனக்கே உரிமையானவை. தங்களுக்கு நான் செய்த கொடுமையை நினைத்து, நினைத்து உருகி உருகிப் பிராயச் சித்தம் புரிந்த குறிகள். இவை தங்களுக்கு — அருவருப்பவை......" என்றாள்

"கமலம்! நீ அழகில்தான் அன்று யாவரையும் மிஞ்சியிருந்தாய் என்றால் இப்பொழுது அன்பிலும் மிஞ்சி விட்டாய்! அன்பின் தோற்றமே எனக்கு மிகவும் அழகு வாய்ந்த தோற்றம்!" என்று உள்ளம் பொருமக் கூறினார் புலவர்!

எங்கள் ராமண்ணா

ராமண்ணா பல விஷயங்களில் முற்போக்குள்ளவன் தான். ஆனால் இந்தப் பெண்கள் விடுதலை என்ற விஷயம் மட்டும் அவனுக்குப் பிடிப்பதில்லை. "பெண்களுக்கு விடுதலையா? அது என்ன அது?" என்று ரொம்பவும் ஏகத்தாளமாகச் சொல்வான்!

"நீ மட்டும் வெளியே இனிய போய் வரலாம் சுதந்திரமாக, பெண்கள் மட்டும்..." என்று கேட்டு விட்டால் போதும். ஆரம்பித்து விடுவான்.

"வெளியே போகிற உனக்கு என்ன சுதந்திரம் அப்பா, இருக்கிறது? வானத்தைப் பார்த்துக் கொண்டு மனோராஜ்யத்தில் ஈடுபட்டுத் தெருவில் நடந்தாயானால் 'ஏய், நடை பாதையில் நட அப்பா' என்று ஒரு அதிகாரத்தொனி வருகிறது. உடனே விழுந்தடித்துக் கொண்டு ஓடிப் போய் நடைபாதையில் நடக்க ஆரம்பிக்கிறாய்! இல்லையென்றால், கோர்ட்டுக்குப் போய் நின்றுகொண்டு அஞ்சோ பத்தோ அபராதம் செலுத்தும்படி நேருகிறது! ஆக, முதலில் தெருவில் உன் இஷ்டப்படி நடக்கும் சுதந்திரம் பறிக்கப்பட்டது?

"பிறகு நாற்சந்தியில் போலீஸ்காரர் 'நில்' என்று சொல்லும் போது 'இவர் யார் சொல்வது, நாம் யார் கேட்பது?' என்று வீறாப்புப் பேசிக்கொண்டு உன் சுதந்திர உணர்ச்சியைக் காட்டுவாயானால் எதிரில் ஒரு கார் வந்து உன் மீது ஏறி நேரே சுவர்க்க லோக வாசலில் உன்னைக் கொண்டு போய் விட்டு விடுகிறது!

"ஆபீசில் உன் இஷ்டப்படி தப்பும் தவறுமாக டைப் அடிக்க முடியவில்லை—மானேஜர் கோபித்துக் கொள்கிறார்.

"கணக்குக் கூட்டிப் போடும்போது நாலும் நாலும் பத்து என்று உன் இஷ்டப்படி போட முடிவதில்லை. போட்டாயானால் உன் உத்தியோகத்துக்கே உலை வந்து விடுகிறது!

"உன் வருமானம் இப்படியிருக்க வீட்டுக்குள் அடைந்துக் கிடக்கும் உன் மனைவிக்குக் கிழக்குச் சுவரிலிருக்கும் ராமர் படத்தை மேற்குச் சுவரில் மாட்ட உரிமையிருக்கிறது. அதைப் பற்றி நீயும் கேட்பதில்லை.

"காலை மார்க்கெட்டில் வாங்கிவந்த உருளைக் கிழங்கை மாலை போண்டாவாகப் பண்ணிப் போட்டால் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டு விட்டுப் போகிறாய். 'ஏன் போண்டா பண்ணினாய்; பொடிமாஸ் செய்வதற்கென்ன?' என்று நீ கேட்பதில்லை.

"பார்க்கப்போனால் வீட்டுக்குள் பல விஷயங்களில் அவள் சுதந்திரமாகக் காரியம் செய்ய முடிகிறது. சாம்பாரில் இரண்டு கல் உப்பு அதிகமாகப் போட முடிகிறது. மோரை இரண்டு நாள் புளிக்க வைத்து இலையில் பரிமாற முடிகிறது. தோள் பட்டையில் கிழிந்திருக்கும் சட்டையைத் தைத்து விட்டால் இன்னும் நாலுமாசம் காலந்தள்ளலாம் என்று நீ வைத்திருக்கும் சட்டையைப் பித்தளைப் பாத்திரக்காரனுக்குப் போட்டுவிட்டு ஒரு 'அடுக்கு' வாங்கி வைக்க முடிகிறது. இப்படி இன்னும் எத்தனையோ விஷயங்களில் வெகு சுதந்திரமாக இருக்க முடிகிறது பெண்களால்.

"ஆகவே இனி பெண்கள் விடுதலையைப் பற்றிப் பேசுவதை விட்டு ஆண்கள் விடுதலை (பெண்களிடமிருந்து) பற்றிப் பேசுவோம். அதற்கு ஒரு இயக்கம் ஆரம்பிப்போம்!" என்பான் எங்கள் ராமண்ணா. —"வெங்கு"



இருமலுக்கும்
ஜலதோஷ-
த்திற்கும்
ஸிரோலின்
SIROLIN

இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS 394


ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமய்ய ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர் • செகந்திராபாத்
பெஜவாடா • மதுரை

அஜீரணமா?

......நீங்கள் அவசியம் அறிய வேண்டியது கொஞ்சம் இருக்கிறது



வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் அஜீரணம், வாயு உபத்திரவம் இதர உபாதைகளும் ஏற்படலாம். அதை நிவர்த்திக்க "பிஸ்மாக்" போன்ற மாற்று இல்லை. வயிறு சரிவர வேலை செய்யப் போதிய சக்தியை அளிக்கிறது. வயிற்று நோயால் அவதிப்படுபவர்களுக்கு "பிஸ்மாக்" சிபார்சு செய்கிறேன். பரிசுகள் சில நிமிஷங்களில் நன்றாகத் தெரியும்.

உங்களுக்கு வேண்டியது-

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள்:

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI டிசம்பர் 12, 1948

4 அண

டி.எஸ்.ஆர்.



டி. எஸ். ஆர். தைலங்களை ஆயிரக்கணக்கான மக்கள் விரும்பி உபயோகிப்பதற்குக் காரணம் அவைகளின் சிறந்த குணமே. ஆயுர்வேத சாஸ்திரீய முறைப்படி தயாரித்த சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம் மூளைக்குக் குளிர்ச்சியையும் சருமத்திற்குப் பளபளப்பையும் கொடுக்கின்றன

டி.எஸ்.ஆர் & கோ.
கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டு:
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்
கோவை, நீலகிரி ஜில்லாக்கள்
& பாலக்காடுக்கு ஏஜண்டு:
B. பாலபட்டாபி
(Estd. 1933)
P. B. No. 182, கோயமுத்தூர்

நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது



ஜிம்மியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக் கணக்கான விலையற்ற சிற்றுயிர்கள் ஈரல் குலைக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ தன்மை புரிந்து வருகிறது.

டாக்டர்கள் இவ் வியாதியை போக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத் தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்பினேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை சிபார்சு செய்து இவ் வியாதியை குணப்படுத்துகிறார்கள்.

ஜிம்மியின் சிம்பிள் லிவர்க்யூர் சிறிய அளவில் கொடுத்து வர, வியாதி வராமல் தடுக்கவும், பசி, ஜீரண சக்தி விருத்தி செய்யவும் மலச்சிக்கல்களைப் போக்கி ஈரல், குலைகளை சரியானபடி வேலை செய்கிறது.

முன்னால் ஈரல் குலைக் கட்டி நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜிம்மியின் டானிக்கை உபயோகப் படுத்துவது நல்லது. பிறக்கப் போகும் குழந்தையின் ஈரல், குலைகள் தாய் மூலமாய் ஏற்படுகிறது என்ற ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.



ஜிம்மியின் லிவர்க்யூர்

ஜிம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாப்பூர், மதராஸ் 4 (போன் நெ. [illegible])
தேப்பெருமாநல்லூர், பெரியதெரு கும்பகோணம்,
பெங்களூர், பம்பாய் 4. (போன் நெ. [illegible])
மற்றும்: கல்கத்தா.

No. 1·